# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-18 Issue-11 நவம்பர்-2025 ஜமாதுல்அவ்வல் 1447



## காசா கொடூரத்தை தடுத்து நிறுத்த வேண்டும்:

முதல்வர் மு.க.ஸ்டாலின்



## காஸா வெற்றி! நம்பிக்கையின் பலம்...



## வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் 2025



தனி பாலஸ்தீனம்: சாதனை பெண்...

## பிரான்செஸ்கா அல்பானீஸ்

# வைகறை வெளிச்சம்

நவம்பர்-2025 | ஜமாதுல்அவ்வல் 1447


வரலாற்றுத் தடத்தில்
இஸ்லாமியப் பார்வையில்
நிகழ்வுகளின் உண்மையான மறுபக்கம்
படியுங்கள் பரப்புங்கள்
பாதுகாத்து வையுங்கள்

- தனிஇதழ் - ரூ. 40
- ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480
- வெளிநாடு - ரூ. 5000

**வைகறை வெளிச்சம்**
சந்தா செலுத்துங்கள்

VAIGARAI VELICHAM
62889509

Collect payments from any of these apps

மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!





சென்னை முதல் ஜெர்மனி வரை தமிழகத்தை உலக அரங்கில் உயர்த்திய முதல்வர் ஸ்டாலின் - 8

தமிழக சட்டப்பேரவையில் காசா தாக்குதலை கண்டித்து தீர்மானம்: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு - 11

BBCயின் பித்தலாட்டம் - 23

டெல்லி கலவரம் (தொடர்) - 24

பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 29

தமிழகத் துறைமுகங்களில் கப்பலோட்டிய கீழக்கரை முஸ்லிம்கள் - 33

காஸா வெற்றி! ட்யூப்பில் நமது நேயர்களின் கருத்து - 36

ஹூதைபிய்யா வரலாறு - 38

தாஃவா - 46

பெற்றோருக்கு உரிமையானது நேரம்..! - 47

சிலுவைப் போர் 2.0 - 49

இஸ்ரேலின் இனஅழிப்பு இன்னும் முடிவடையவில்லை - 56

மருத்துவம் - 61

தலையங்கம் - 62



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only

vaigarai velicham official



# வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் 2025

## Special Intensive Revision

**தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகியுள்ளது. SIR-ஐ 2026 தேர்தலுக்குப் பின் எடுக்கலாம் என்று முறையிட்டுள்ளது. எப்படியும் இது இப்போதோ அல்லது 2026 தேர்தலுக்குப் பின்னோ வரும் என்பதை மனதில் கொண்டு இதை படிக்கவும். பாதுகாக்கவும், பரப்பவும்.**

**இப்படி** ஒரு முடிவை தேர்தல் ஆணையம் தெரிவித்து ஒரு பீதியை, பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பீதியும், பரபரப்பும், ஏனென்றால் சிறுபான்மையினரின் வாக்குகளும், தலீத் மக்களின் வாக்குகளும், இன்னும் பாரதீய ஜனதா கட்சியின் எதிர் வாக்குகளும் பறிக்கப்பட்டு விடுமோ என்பதில் இருந்துதான் தொடங்குகின்றன.

முதற் காரணம் இன்றைய தேர்தல் ஆணையம், முழுக்க முழுக்க பாசிச மயமாகி விட்டது. எந்த அளவுக்கு என்றால் 2014இல் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் இதன் தகிடுதத்தங்கள் - வாக்குத் திருட்டுகள், போலி வாக்காளர் இணைப்பு - இவைதான் பாரதீய ஜனதா கட்சியை, ஆட்சியில் அமர்த்தியது என நாட்டு மக்கள் அனைவரும் நம்புகின்றார்கள்.

### மக்கள் இயக்கம்

2024 தேர்தல் தில்லுமுல்லுகளை மையமாகக் கொண்டு மக்கள் இயக்கம் ஒன்றும் நடத்தப்படுகின்றது. அந்த மக்கள் இயக்கம் பின்வரும் கோரிக்கைகளை முன் வைக்கின்றது. அவை,

1. இந்தத் தேர்தல் ஆணையம் கலைக்கப்பட வேண்டும். 2024 தேர்தல் முடிவுகள் செல்லாதவை என அறிவிக்கப்பட வேண்டும். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மறு தேர்தல் வழி நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். அதில் பிரதமர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

2. தேர்தல் ஆணையத்தை நியமிப்பதில் பிரதமர் இருப்பார் என்பதை மாற்றிவிட்டு மீண்டும் உச்ச நீதிமன்ற நீதிபதியே அந்த இடத்தில் நியமிக்கப்பட வேண்டும். (அதன்பின் தேர்தல் ஆணையம் நியமிக்கப்பட்டு புதிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.)

3. பல லட்சம் வாக்காளர்களை எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற பாணியில் வாக்காளர்களை, நீக்கிய குற்றத்திற்கும் பலகோடி முகவரி இல்லாத வாக்காளர்களை இணைத்ததாகவும், அதன்மூலம் 2024 தேர்தலில் வெற்றி, தோல்விகளில் தில்லுமுல்லுகளைச் செய்ததற்காகவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தண்டிக்கப்பட வேண்டும்.

4. இவற்றின்மூலம் இறந்துபோய்விட்ட இந்திய ஜனநாயக முறையை மீட்டெடுக்க வேண்டும்.


vaigarai velicham official

இந்தக் கோரிக்கைகளும், இது சார்ந்த மக்கள் இயக்கமூலம் வலுப்பெற்று வருகின்றன.

இப்போதைய எஸ்.ஐ.ஆர். என்ற வாக்காளர் சிறப்பு சீர்திருத்தம் நம்மை, தமிழகத்து மக்களை வந்தடைந்திருக்கின்றது. இன்னும் 11 மாநிலங்களில் மேற்கொள்ளப்படுகின்றது,

**SIR நடைமுறை**

இதில் 2 விண்ணப்பப் படிவங்கள் நம்மிடம் கொண்டுவந்து தரப்படும். இவற்றை BLO என்ற Booth Level Officer என்ற பூத் லெவல் அரசு அதிகாரிகள், கொண்டு வருவார்கள். நாம் பூர்த்தி செய்து அதில் ஒன்றை BLOவிடம் தந்திட வேண்டும். இன்னொன்றில் அவர்கள் கையொப்பமிட்டு உங்கள் கைகளில் தருவார்கள் இது உங்கள் அத்தாட்சி. படிவத்தை திருப்பித் தரும்போது எந்த ஆவணமும் இணைக்க வேண்டாம். இதில் உங்களுக்கு இந்தப் பூத் லெவல் அதிகாரிகள் உதவி செய்வார்கள். இதற்கான நாள்கள் நவம்பர் 4 முதல் டிசம்பர் 4 வரைவு டிசம்பர் 9ஆம் நாளில் வாக்காளர் வரைவு பட்டியல் வெளியிடப்படும். அதில் உங்கள் பெயர் இடம்பெறவில்லையென்றால், நீங்கள் மேல்முறையீடு செய்யலாம். இந்த மேல் முறை யீட்டில் BLA என்ற பூத் லெவல் ஏஜெண்டுகள் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் ஏஜெண்டுகள், உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**கட்சி ஏஜெண்டுகள் -** தமிழகத்தில் அங்கீ கரிக்கப்பட்ட கட்சிகள் 12 இருக்கின்றன. இந்தக் கட்சிகளுக்கு தேர்தல் 'பூத்' அளவிலுள்ள ஏஜெண்டுகள் இருக்கின்றார்கள். இவர்கள் உங்களுக்கு இந்தப் பட்டியல்களை பூர்த்தி செய்வதிலும், அதேபோல் வரைவு வாக்காளர்கள் பட்டியலில் பெயர் விட்டுப் போனாலும் மேல் முறையீட்டிற்கும் உதவி செய்வார்கள்.

நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட 'BLO' என்ற பூத் லெவல் அதிகாரிகள் - அரசு அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் 1200 வாக்காளர்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள்தாம் உங்களுக்கு முதலில் படிவங்களைக் கொண்டு வருவார்கள். இவர்கள் மூன்று முறை உங்களைச் சந்திப்பார்கள். ஆகவே பதற்றங்கள் தேவையில்லை.

**சிறுபான்மையினரின் அச்சம் -** இதில் சிறுபான்மையினர் குறிப்பாக முஸ்லிம்களுக்கு ஓர் அச்சம் அசாமில் வாழும், முஸ்லிம்களை மையப்படுத்தித்தான், இந்திய தேசியப் பதிவேடு எனக் கூப்பாடு போட்டார்கள். பெருவாரிய முஸ்லிம்களை குடிமக்கள் அல்ல என அறிவிப்பதே நோக்கம். ஆனால், இறுதியில் அசாமிலேயே படுதோல்வியடைந்தார்கள். பின்னர் ஆதார்-ஐ வாக்காளர் அட்டையுடன் இணைக்க வேண்டும் என்றொரு திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதன்வழி முஸ்லிம்களின் வாக்குரிமையை பறித்திடலாம் என கடுமையான முயற்சிகளை மேற்கொண்டார்கள். அதிலும் படுதோல்வி.

அதேபோல் சிறுபான்மை முஸ்லிம்களின் நித்திய வாழ்க்கையை வழி நடத்தும் ஷரீஆ விதிகளில் தலையிட்டார்கள். அதிலும் அவர்களால் ஜெயித்திட இயலவில்லை.


தாவூத்மியாகான்

இதற்கு முன்னால் நமது அண்டை மாநில மான கன்னடா மாநிலத் தில் ஒரு பிரச்சனையை உருவாக்கினார்கள். அங்கே கொத்துக் கொத் தாக முஸ்லிம்களை வாக் காளர் பட்டியலிலிருந்து நீக்கினார்கள் நமது காயிதே மில்லத் பேரன் ஹாஜி தாவூத்மியாகான் அவர்கள் கன்னடத்து முஸ்லிம்களோடு இணைந்து ஒரு பெரும் முயற்சியை மேற்கொண்டு வெற்றி பெற்றார்கள். பின்னர் அதேபோல் தமிழக அமைப்புகளை ஒன்றிணைந்து ஒரு முயற்சியை மேற்கொண்டு இங்கேயும் அது நடந்திடாமல் தடுத்தார்கள்.

இந்த நீண்ட நெடியப் பின்னணியில் இவர்கள் வாக்காளர் பட்டியலில் திருத்தம் என வருகின்றபோது, முஸ்லிம்கள் பதற்றப்படுவதில் நியாயமிருக்கின்றது.

அப்படியொரு பதற்றம் அல்லது அச்சம் தேவையில்லை.

இந்த பாசிஸ்ட்டுகளின் முந்தைய முயற்சிகள் பல தோற்றுப்போயின. அதேபோல், இந்த முயற்சியிலும் அவர்கள் வெற்றி பெற்றிட இயலாது என்பது நிச்சயம். இன்ஷாஅல்லாஹ்.

**பீகார் -** இந்த வாக்காளர் திருத்தப் பட்டியல் முதலில் பீகார் மாநிலத்தில்தான் தொடங்கியது. அங்கே வாக்குகள் பொதுவாக

எல்லா சமுதாயத்தவரின் வாக்குகளும் திருடப் பட்டிருந்தன. பாரதீய ஜனதா கட்சியின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் லட்சக்கணக்கான வாக்குகள் சேர்க்கப்பட்டன. பாரதீய ஜனதா கட்சிக்கு என அந்த வாக்குகள் பதியப்பட்டன. அப்போதுதான் கடந்த நாடாளு மன்றத் தேர்தலே ஒரு பெரிய தில்லுமுல்லு என்றார். நம் நாடு மட்டுமல்ல, உலகமே விழித்துக் கொண்டது. இந்திய ஜனநாயகத்தில் இத்தனை குளறுபடிகளா என விழி பிதுங்கி நின்றன.

2014 தேர்தலில் தேர்தல் ஆணையம் செய்த தகிடுதத்தங்களை அறிந்த மக்கள் அதிர்ந்தனர்.

இந்த அவமானங்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிடத்தான் இப்படியொரு SIR-ஐ தீவிர சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்தை கொண்டுவந்தது தேர்தல் ஆணையம்.

**பீகார் மக்கள் சொல்வதென்ன?**

பீகாரில் இந்த சிறப்பு சீர்திருத்தத்தில் களப் பணியாற்றிடும் முஸ்லிம் சமூக சேவகர்களையும், முஸ்லிம் பத்திரிகையாளர்களையும் சகோதர சமுதாயத்தைச் சார்ந்த களப்பணியாளர்களையும் தொடர்புகொண்டு பேசினோம்.

எடுத்த எடுப்பிலேயே இதில் பதற்றப்பட தேவையில்லை என்றார்கள். முஸ்லிம்களின் வாக்குகள் வரைவு பட்டியலில் 30% விடப் பட்டிருந்தது. நாங்கள் மேல்முறையீடுகள் வழி அதனை சீர் செய்தோம். பெரும்பாலான முஸ்லிம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டு விட்டார்கள் என்றார்கள்.

இதேபோல் இதர சமுதாயத்தினரின் வாக்குகளும் விடப்பட்டிருந்தன. அவற்றையும் சேர்த்துவிட்டோம்.

இறுதி பட்டியலில் விடப்பட்ட பேர்கள் மிகக் குறைவு. அவற்றை சேர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம் எனக் கூறினார்கள்.


**பீகார் - சகோதர சமுதாயங்கள்**

நாங்கள் முஸ்லிம் வாக்காளர்களைக் குறியாகக் கொண்டுதான் தொடங்கினோம். இப்போது சீக்கியர்கள், தலீத்கள், யாதவர்கள், கிருஸ்தவர்கள், பௌத்தர்கள் இப்படி எல்லோருக்காகவும் அது மாறியது.

இந்த அனுபவம் வெற்றிகரமாக அமைந்த தால் நாங்கள் மேலே சொன்ன எல்லா அமைப்புகளையும் இணைத்து Bihar Democ ractic Front பீகார் ஜனநாயக அமைப்பு என்றொன்றை தொடங்கியுள்ளோம். இப்போது இந்த அமைப்பு தனது வெற்றியை இந்தியா கூட்டணியின் வெற்றியாக மாற்றி வேலை செய்து கொண்டிருக்கின்றது என்றார்.

**நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் - தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட், வைகறை வெளிச்சம் ஆகியவற்றின் முந்தைய அனுபவம்**

NRIC என்ற தேசிய குடிமக்கள் பதிவு என்ற கபளீகரத்தை இந்திப் பாசிச அரசு கொண்டு வந்தபோது, பரபரப்புகளுக்கு அப்பால் நின்று ஒரு வேலையை செய்தோம். அது NRIC க்கு என்னென்ன ஆவணங்கள் தேவைப்பட்டனவோ, அந்த ஆவணங்களை பெற்றுத் தருவதற்கான களப் பயற்சிகள், களப் பணிகள் ஆகியவற்றை மேற்கொண்டோம்.



ஹாபிஸ் ரஷீதி சவ்திரி

இதில் அதிகமான தெளிவைப் பெற்று களமிறங்கிட அசாமிலுள்ள நமது நண்பர் ஹாபிஸ் ரஷீதி சவ்திரி அவர்களை தமிழகத்திற்கு வரவழைத்தோம். ஹாபீஸ் ரஷீத் சவ்திரி அவர்கள் தாம் அசாமில் உள்ளிட்ட ஐந்து மாநிலங்களில் இந்தக் குடியுரிமை சம்பந்தப்பட்ட வழக்குகளை கையாண்டவர். அதனால் அவரை அழைத்து களப்பணியாளர்களுக்கு ஒரு நிகழ்ச்சியையும், மைந்தை வெளியில் பொதுமக்களுக்கான ஒரு நிகழ்ச்சியையும் ஏற்பாடு செய்தோம்.

மந்தை வெளியில் - தொடர்ந்து நடந்த கேள்வி-பதில் நிகழ்ச்சியில் அனைவரும் தெளிவு பெற்றார்கள். பலர் எங்களிடம் நாங்கள் இனிமேல்தான் நிம்மதியாகத் தூங்குவோம் என்றார்கள். இந்த நிகழ்ச்சிகள், நீதி அமைதிக் கான மக்கள் இயக்கம் - தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட், வைகறை வெளிச்சம் ஆகியவற்றின் வாசகர் வட்டம் சார்பில் நடத்தப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ்.

அதேபோல் இப்போது, நாம் பீகார்

களப்பணியாளர்களை, அழைத்து ஓரிரு நிகழ்ச்சிகளை நடத்த நினைத்தோம். பின்னர் அவர்கள் இது நீங்களே கையாண்டிடலாம். ஏதாவது பிரச்சனை வந்தால், தேவைப்பட்டால் வருகின்றோம் என்றார்கள். ஆக அவர்களை வீணாக அழைக்க வேண்டாம் என வைகறை ஆசிரியர் குழு, நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம், தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் ஆகியவை முடிவு செய்தன.

பின்னர் ஓர் வழிகாட்டுதல் ஆபூ அஃரப் அவர்கள் ஆன்லைன் வழியாக நடத்தினார்கள். ●

# வாக்காளர் சிறப்பு தீவிர வாக்கு சிறப்பு தீவிர திருத்தம் தேர்ல் ஆணையம் ஏற்றுக்கொள்ளும் ஆவணங்கள்

இது அனைத்தும் தேவை இல்லை ஏதாவது ஒன்று மட்டும் போதும்.

1. மத்திய அரசு, மாநில அரசு, அரசு தொழில் நிறுவனங்கள் ஆகியன தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு அரசு வழங்கும் அடையாள அட்டை, அல்லது சான்றிதழ், அதேபோல் ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம் பெற வழங்கப்படும் அடையாள அட்டை, அல்லது சான்றிதழ்.

2. இந்தியாவில் அரசு வழங்கும் அடையாள அட்டை, ஆவணம், சான்றிதழ் அல்லது வட்டார அரசு அதிகாரிகள் வழங்கும் அடையாள அட்டை அல்லது சான்றிதழ், வங்கிகள், தபால் நிலையம் (LIC) லைப் இன்சூரன்ஸ் சான்றிதழ், அரசு தொழில் நிறுவனங்கள் இவை 01.07.1987க்கு முன் வழங்கிய அட்டை அல்லது சான்றிதழ்.

3. பிறப்பு சான்றிதழ் (அதை வழங்கிடும் அதிகாரம் பெற்றவர்கள் வழங்கிடுவது.)

4. Passport - கடவுச்சீட்டு

5. கல்விச் சான்றிதழ்கள், மெட்ரிகுலேசன் சான்றிதழ், பல்கலைக்கழகங்கள் (அங்கீகாரம் பெற்றவை) வழங்கிய கல்விச் சான்றிதழ்கள்.

6. மாநில அரசு வழங்கிய நிரந்தர வதியுமிடச் சான்றிதழ்கள்.

7. வனத்துறை சான்றிதழ்.

8. OBC என்ற இதர பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலின மக்கள், பழங்குடியினர் SC/ST இவர்களின் ஜாதி சான்றிதழ்கள்.

9. தேசிய குடியுரிமை பதிவேடு (எங்காவது இருந்தால்)

10. குடும்பப் பதிவேடு, மாநில அரசு அல்லது வட்டார அதிகாரிகள் தயாரித்தவை.

11. அரசு வழங்கிய நிலம் - வதியுமிடம் ஆகியவற்றின் சான்றிதழ்.

12. ஆதார் - இதில் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்.

13 23/2025 ERS / Vol.11. Dt. 9.9.2025 01.07.2025 பீகார் வாக்காளர் பதிவேடு. (இது தமிழ் நாட்டுக்குப் பொருந்தாது) இப்போது உங்களுடைய வாக்காளர் பதிவேடு 2002/2005 இருந்தால், அதில் உங்கள் வாக்கு இருந்தால் அதுபோதும், எந்த ஆவணமும் தேவையில்லை.

(இனி இப்போதைய SIR இல் இடம்பெறும் உங்கள் பதிவு இனிவரும் SIRகளுக்கு உதவும்.)

**கவனிக்க**

ஆதார் பற்றிய தேர்தல் ஆணையத்தின் சுற்றறிக்கை 9.9.2025 கூறுவதில், அது உச்ச நீதிமன்ற உத்தரவின்படி ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

ஆதாரை ஏற்றுக்கொள்ள மறுக்கும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆனால், ஆதார் குடியுரிமை சான்றிதழ் அல்ல, இந்த பெரும்பாட்டு நமக்குத் தேவையில்லை. ஆதார் இருந்தால் போதும், அச்சம் வேண்டாம்.

குறிப்பு - முந்தைய வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் 2002 என ஓர் ஆண்டும், 2005 என ஓர் ஆண்டும் கொடுக்கப்படுகின்றது. இரண்டில் எந்த ஆண்டு என்ற குழப்பம் வேண்டாம்.

அதை நகர்களில் 2002யிலும், கிராமப் புறங்களில் 2005 ஆண்டிற்கு பிறகும் பட்டியலில் பெயர் சேர்ந்தவர் எனக்கொள்ள வேண்டாம்.

இது நமக்குத் தேவை. முந்தைய SIRஇல் பெயர் இடம்பெற்றிருந்தால் அது போதும்.

- MGM



# சென்னை முதல் ஜெர்மனி வரை தமிழகத்தை உலக அரங்கில் உயர்த்திய முதல்வர் ஸ்டாலின்

## காஸா மக்களுக்கு ஆதராவாளர்கள் பெரியார் உணர்வாளர்கள் சாதனை!

**தமிழகத்தில்** பெரிய தாக்கங்களை நடத்தி வருபவர்கள் பெரியார் உணர்வாளர்கள்.

பாசிசமும் - சனாதனமும் இன்னும் காலூன்ற விடாமல் தடுத்து வருபவர்கள் இந்தப் பெரியார் உணர்வாளர்கள்.

இவர்கள் 31 அமைப்புகளை ஒன்றிணைந்து இந்தக் கூட்டத்தை சென்னை, லாங்க்ஸ் ரோட்டில் 19-9-2025 அன்று நடத்தினார்கள்.

மாலை 4 மணிக்குப் புதுப்பேட்டையிலிருந்து புறப்பட்ட இந்த பேரணி 4.30 மணிக்கே தொடங்கிவிட்டது. மக்கள் பெரும் திரளாகக் கலந்துகொண்டதே காரணம்.

பேரணியைத் தொடங்கி வைப்பவர்கள் வருவதற்கு முன்பே தொடங்கிவிட்டது.

**மாபெரும் மக்கள் எழுச்சி!**

பாலஸ்தீனை அடையாளப்படுத்திடும் சால்வே-ஐ அணியாத மக்களே இல்லை.

நிகழ்ச்சியில் திரை உலகின் ஜாம்பவான்கள், நடிகர்கள் சத்தியராஜ், பிரகாஷ்ராஜ் ஆகியோரின் உரை எடுப்பாக இருந்தன.

இந்த நிகழ்ச்சிக்கு உற்சாகம் தருவதைப்போல், முந்தைய நாள் 18-9-2025 அன்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள். அந்த அறிக்கையில் காஸாவில் நடக்கும் படுகொலைகள் உடனேயே தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை, மத்திய அரசு உடனேயே எடுக்க வேண்டும் எனக்கேட்டிருந்தார்கள்.

அறிக்கை சிறியதாக இருந்தாலும், கருத்து அனைவரையும் கவருவதாக அமைந்திருந்தது.

அத்தோடு நீங்கள் தாராளமாக காஸாவில் நடக்கும் படுகொலைகளைக் கண்டியுங்கள், பாலஸ்தீன மக்களை ஆதரியுங்கள், அரசு உங்களோடுதான் எனச் சொல்லாமல் சொன்னார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை தேவையான மாறுதல்களைக் கொண்டு

வரவே செய்தன. மக்கள் தங்கள் உள்ளத்திலேயே தேக்கி வைத்திருந்த, ஆதங்கங்களை கொட்டவும், பாலஸ்தீன மக்களோடு நாங்கள் இருக்கின்றோம் என்பதைச் சொல்லவும், இதனை மிகையாகவே பயன்படுத்தினார்கள். கூட்டம் அலைமோதியது, கொட்டும் மழையிலும்.

இந்த வகையில் உலக அரங்கில் தமிழ் நாட்டை உயர்த்திவிட்டார்கள் பெரியார் உணர்வாளர்களும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும்.

**அதே நாளில் ஜெர்மனியில்**

400 கலைஞர்கள் - உலகெங்கிலுமிருந்து வந்து ஜெர்மனியின் தலைநகரில் குழுமி Join Boy cot Against Isreal இஸ்ரேலை புறக்கணிப்போம் எனக் கோஷமிட்டார்கள்.

அதில் கலந்துகொண்ட இசைவாணர்கள், இனி இஸ்ரேலுக்கு இசை இல்லை என முழக்கமிட்டனர்.

நாங்கள், இஸ்ரேல் சம்மந்தப்பட்ட எதற்கும் எந்த நிகழ்ச்சிக்கும் இசை அமைக்க மாட்டோம் என்றார்கள்.

திரைப்பட கலைஞர்கள், நாங்கள் இஸ்ரேலை எந்தத் திரைப்படத்திலும் பங்கெடுத்துக்கொள்ள மாட்டோம். திரைப்பட உலகில் இனி இஸ்ரேலுக்கு இடமில்லை எனக் கோஷமிட்டார்கள்.

இப்படி அடித்தட்டு மக்கள் முதல் கலைவாணர்கள் இசைவாணர்கள் அனைவரும் ஒன்றுபோல் ஓரணியில் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவையும் அனுதாபத்தையும் அள்ளிக் கொட்டினார்கள்.

சென்னையில் பெரியார் உணர்வாளர்கள் ஒரு மாபெரும் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தபோது, ஜெர்மனியில் இன்னொன்றும் நடந்தது. அது, இப்போதைய குடியரசுத் தலைவர் (Fried Reich Merz) பிரைட் ரீச் மெர்ஸ், முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் (Annalena Baer Bert) அன்னாலீனா பியர்பெர்ட், இன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் (John Fadibol) - பாதுகாப்பு அமைச்சர் (Boris Pistorious) போரிஸ பிஸ்டோரியல் ஆகியோர் மீது வழக்குத் தொடர்ந்ததுதான் பாலஸ்தீனில் நடந்த இனப் படுகொலைகளுக்கு உடந்தையாக இருந்ததாக வழக்கு. இன்னும் பல முக்கிய அரசியல்வாதிகளும் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

ஆமாம், இவர்கள் ஆயுதங்களை வழங்கி பணமும் தந்தார்கள் இஸ்ரேலுக்கு.

இந்த முக்கிய அமைச்சர்களோடு பின் வருபவர்கள் மீதும் இந்த வழக்குத் தொடரப் பட்டு வருகின்றது.

இஸ்ரேலுக்காக ஆயுதங்களைத் தயாரித்த கம்பெனியின் செயல் தலைவர்கள்.

அந்தக் கம்பெனிகள் ரோல்ஸ்ரோசி போன்ற உலகப்புகழ்பெற்ற கம்பெனிகள்.

இதுபோன்ற கம்பெனிகளின் செயல் தலைவர்கள் மீதும் வழக்குகள் தொடரப்பட்டு வருகின்றன.

இவர்கள் மீதெல்லாம் பின்வரும் குற்றச் சாட்டுகள்

1. Aiding and incting genocide கூட்டுப் படுகொலைகளுக்கு உதவி செய்தது, கூட்டுப் படுகொலைகளைத் தூண்டிவிட்டது.

2. Crimes against humanity and மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள்.

3. War Crimes against the people of palestine - பாலஸ்தீன மக்களுக்கு எதிரான போர்க் குற்றங்கள்.

என்ற வழக்குகள் ஜெர்மன் நாட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளன.

இப்படி வழக்குகளைத் தொடுத்திருப்பவர்கள் ஒரு கூட்டம் வழக்கறிஞர்கள், இவர்கள் Justice and Accountablity for Palestine நீதி மன்றம் பாலஸ்தீன படுகொலைகளுக்கான பொறுப்பேற்பு என்ற பெயரில் ஒருங்கிணைந்து இந்த வழக்குகளை தொடுத்துள்ளார்கள். இவர்கள் தங்களை ஓர் சட்டக்குழுமமாக ஆக்கிக்கொண்டுள்ளார்கள். (Legal Firm)

இந்தச் சட்டக் குழுமத்திற்கு ஐரோப்பிய சட்டக் குழுமம் மையம் (European Legal Suport Centre) (ELSE) உதவி செய்கின்றது.

இன்றும், பாலஸ்தீன மக்களுக்கான பொது இராஜாங்க அமைப்பு - என்ற (Palestine Institute for Public Diplomacy) அமைப்பும் உதவி செய்கின்றது.

இத்தனை நடவடிக்கைகளும், ஐக்கிய நாடுகள் சபை இஸ்ரேலை ஓர் கூட்டுப்படுகொலை செய்யும் நாடு என அறிவித்ததன் எதிரொலி, அதேபோல் இஸ்ரேலை ஓர் ஆக்கிரமிப்பு நாடு என்றும் ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளதால் ஏற்பட்ட விளைவுகள்.

மீண்டும் முதல்வர் மு.க.ஸ்டாலின் (28-9-2025)இல் CPI(N) என்ற பொதுவுடைமை கட்சி நடத்திய, காஸாவில் இஸ்ரேலின் கொலைகளை கண்டிக்கும் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு பாலஸ்தீன மேலாடையை அணிந்துகொண்டு காஸாவில் இஸ்ரேல் நடத்தும் அநியாயங்களையும் கூட்டுப்படுகொலைகளையும் கண்டித்தும் அதை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியும், தீர்மானம் ஒன்று 14-10-2025இல் தொடங்கும் தமிழக சட்டசபையின் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்படும் என்று அறிவித்தார். இதை எல்லா கட்சிகளும் ஆதரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ஆனால் அக்டோபர் 10ஆம் நாளை காஸாவில் ஹமாஸ் இஸ்லாமியப் போராளிகளும், இஸ்ரேலுக்கும் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று செயலில் வந்துவிட்டதால் அப்படியொரு தீர்மானம் தேவைப்படவில்லை.

இதில் உலக முஸ்லிம்கள் அனைவரும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி சொன்னார்கள்.

நாமும் வைகறை வெளிச்சம் சார்பில் நமது யூடீப் சானலில் நன்றி சொன்னோம். காஸா விவகாரத்தில் உலகமே திரும்பிப் பார்த்திடும் அளவில், தமிழகத்தை உயர்த்திவிட்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**- MGM**

# காசா கொடூரத்தை தடுத்து நிறுத்த மொத்த உலகமும் ஒன்றிணைய வேண்டும் :

## தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்

“**காசாவில்** அரங்கேறிவரும் கொடுமைகளை தடுக்க இந்தியா உறுதியான நிலைப்பாட்டோடு பேச வேண்டும், உலகம் மொத்தமும் ஒன்றிணைய வேண்டும். இந்தக் கொடூரத்தை இப்போதே தடுத்து நிறுத்த நாம் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும்.” என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் பகிர்ந்த சமூக வலைதளப் பதிவில், “காசாவில் அரங்கேறி வரும் கொடுமைகளால் வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு அதிர்ந்து போயிருக்கிறேன். அங்கிருந்து வெளிவரும் ஒவ்வொரு



காட்சியும் நெஞ்சைப் பதறச் செய்கிறது.

பச்சிளம் குழந்தைகளின் அழுகுரல், பட்டினியில் தவிக்கும் சிறார்கள், மருத்துவமனைகள் மீது நடத்தப்படும் குண்டுவீச்சு, ஐ.நா. விசாரணை ஆணையமே அங்கு இனப்படுகொலை நடந்து வருவதாக அளித்துள்ள அறிக்கை ஆகிய அனைத்தும், எந்த மனிதரும் எப்போதும் அனுபவிக்கக் கூடாத துன்பங்களை அங்கு அனுபவித்து வருவதையே காட்டுகிறது.

அப்பாவி மனித உயிர்கள் இப்படி கொல்லப் படும்போது, அமைதியாக இருப்பது என்பது ஒரு தேர்வாக இருக்க முடியாது. நம் ஒவ்வொருவரின் மனசாட்சியும் விழிக்க வேண்டும். இந்தியா உறுதியான நிலைப்பாட்டோடு பேச வேண்டும், உலகம் மொத்தமும் ஒன்றிணைய வேண்டும். இந்தக் கொடூரத்தை இப்போதே தடுத்து நிறுத்த நாம் அனைவரும் இணைந்து செயல்படவேண்டும்.” எனக் கூறியுள்ளார்.



vaigarai velicham official



### தமிழக சட்டப்பேரவையில்

# காசா தாக்குதலை கண்டித்து தீர்மானம்:

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

"**காசா** மீதான இஸ்ரேலின் தாக்குதலை உடனே நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். வருகின்ற சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில், காசாவில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலைக் கண்டித்து தீர்மானம் கொண்டு வரப்படும்" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை எழும்பூரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் (செப்., 08) அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலை நிறுத்தக்கோரி இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழக முதல்வர் ஸ்டாலினும் கலந்து கொண்டார். பின்னர் அவர் பேசியதாவது:

காசா மீது இஸ்ரேல் நடத்தி வரக்கூடிய கண்மூடித்தனமான தாக்குதல்கள், நம் எல்லோருடைய மனதை இன்றைக்கு உலுக்கிக் கொண்டிருக்கிறது. நம்முடைய மனது மட்டுமல்ல, உலகத்தையே இன்றைக்கு உலுக்கிக் கொண்டிருக்கிறது.

பாலஸ்தீன மக்களுக்கு நம்முடைய மனிதாபிமான, மனித உரிமை ஆதரவை மனப்பூர்வமாக நாம் வழங்குகிறோம். இதுதான் இந்தக் கண்டண இயக்கத்தின் முழக்கமாக அமைந்திருக்கிறது. கடந்த ஓராண்டாகவே, காசாவில் இஸ்ரேல் நடத்திக் கொண்டிருக்கக் கூடிய தாக்குதல்கள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இதுவரையில், ஏறக்குறைய 11 ஆயிரம் பெண்கள் - 17 ஆயிரம் குழந்தைகள் - 175 பத்திரிகையாளர்கள் - 125 ஐ.நா. ஊழியர்கள் என்று, 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

26 ஆயிரம் குழந்தைகள் பெற்றோர்களை இழந்திருக்கிறார்கள்; ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் காயம் ஏற்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்; சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால், ஓராண்டில் காசாவின் பெரும்பகுதி அழிக்கப் பட்டுவிட்டது. ஆனாலும், இஸ்ரேல் நாட்டின் ஆக்கிரமிப்பு கொள்கைக்கு எதிராக, பாலஸ்தீன

மக்கள் தொடர்ந்து போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் கொடுமைகளுக்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டுச் சொல்ல வேண்டும் என்றால், கடந்த ஜூன் மாதத்தில், பட்டினியால் வாடக்கூடிய பாலஸ்தீனர்கள், உணவுப் பொருள் ஏற்றி வரும் லாரியை எதிர்பார்த்துக் காத்திருந்தபோது, 45 பேரை இஸ்ரேல் ராணுவம் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். உணவுக்காக காத்திருந்தவர்களின் உயிரையே பறித்திருக்கக்கூடிய இந்தக் கொடூரத்தை பார்த்து, எல்லோருடைய இதயமும் நொறுங்கிப் போயிருக்கிறது.




மனித உரிமைகளுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமையான இந்த அநீதிகளைக் கண்டிக்காமல் - அமைதியாக கடந்து செல்ல யாருக்காவது மனது ஒப்புமா? சில நாட்களுக்கு முன்னால், மற்றொரு செய்தி வந்தது. காசாவில் மரணத்தின் விளிம்பில் தவித்துக்கொண்டு இருக்கும் பாலஸ்தீன மக்களுக்கு வழங்க, உணவுப் பொருட்கள் - மருந்துகள் - குழந்தைகளுக்கான பால் பவுடர்களைக் கொண்டு சென்ற, 47 நாடுகளைச் சேர்ந்த தன்னார்வலர்களைத் தடுத்து கைது செய்திருக்கிறது இஸ்ரேல்.

பன்னாட்டு சட்டங்களை மீறும் இதுபோன்ற செயல்களைக் கண்டிக்காமல் நம்மால் இருக்க முடியுமா? காசாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இரக்கமற்ற படுகொலைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். பாலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் நடத்திக் கொண்டிருக்கும் இனப்படுகொலை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். இதுதான் இந்தக் கூட்டத்தின் நோக்கமாக அமைந்திருக்கிறது.

இதற்கான முயற்சிகளை, இந்திய ஒன்றியத்தை ஆளக்கூடிய பாஜக அரசு வேகமாக மேற்கொள்ள வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் மூலமாக எல்லோருடைய சார்பிலும் நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்றிய பாஜக அரசு, இஸ்ரேல் மற்றும் பிற தொடர்புடைய நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்து, இந்தத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுத்தாகவேண்டும். ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிற பன்னாட்டு அமைப்புகளுடன் இணைந்து, காசாவில் அமைதியை நிலைநாட்டவும், மனிதாபிமான உதவிகளை செய்யவும், இந்திய அரசு முயற்சிக்க





வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மனிதாபிமானம் இருக்கும் எல்லோரும் இதை வேறொரு நாட்டு விவகாரமாக நாம் பார்க்கக் கூடாது. உலக அமைதி என்பது, எல்லோருக்கும் பொதுவானது. மனித உரிமை என்பதை எல்லோரும் காக்க வேண்டும். மானுட உயிர்கள் ஒவ்வொன்றும் விலைமதிப்பு இல்லாதது. இந்த மூன்றையும் காக்கின்ற கடமை நம் எல்லோருக்கும் இருக்கிறது. இந்த மோசமான நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு, உணவு - மருத்துவம் உள்ளிட்ட அனைத்து அவசிய உதவிகளும், உடனடியாக முழுமையாக வழங்கப்பட வேண்டும்.

பாலஸ்தீனர்களின் மறுவாழ்வுத் திட்டம், காசாவை மறு கட்டமைப்பு செய்வது - மனிதாபிமான உதவிகளை தொடர்ச்சியாக வழங்குவது ஆகியவை குறித்து தெளிவான வாக்குறுதிகள் வழங்கப்பட வேண்டும். அனைத்து பணயக் கைதிகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும். உலக நாடுகள் முன் வைக்கும் நிபந்தனைகள் - உறுதிமொழிகள், பாலஸ்தீன மக்களுக்கு நன்மை செய்வதாக அமைய வேண்டும்.

இந்த நேரத்தில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த செய்தியை உங்களிடம் நான் பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வருகின்ற 14-ஆம் நாள், தமிழக சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நடைபெற இருக்கிறது. இந்தக் கூட்டத் தொடரில், காசாவில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதலைக் கண்டித்தும், அங்கு உடனடியாக போர் நிறுத்தம் தேவை என்பதை வலியுறுத்தியும், அதற்கான முயற்சிகளை இந்திய அரசு எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்தும், சட்டப் பேரவையில் தீர்மானம் கொண்டு வரப்படும்.

இந்தத் தீர்மானம் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக இருக்கும்; அரசியல் வேறுபாடுகளைக் கடந்து, அனைத்துக் கட்சியினரும் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பார்கள் என்று நான் முழுமையாக நம்புகிறேன். இந்த கூட்டம் மூலமாக, காசா மீதான இஸ்ரேல் தாக்குதலுக்கு என்னுடைய கடுமையான கண்டனத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பாவி மக்கள் உயிர் இழப்பது உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும்" இவ்வாறு அவர் பேசினார்.





# காஸா வெற்றி!

## நம்பிக்கையின் பலம்...

# ஹமாஸ் சாதித்தது என்ன?

**பாலஸ்தீன்** விடுதலைப் போர் என வருகின்றபோது நாம் 1914ஆம் ஆண்டிலிருந்தே - இந்த வரலாற்றைப் பார்க்க வேண்டும்.

1914 முதல்தான் யூதத் தீவிரவாதிகள், தங்கள் தீவிரவாத செயல்களைத் தொடங்கினார்கள்.

பாலஸ்தீனின் கிராமங்களில் வாழ்ந்த மக்களை குண்டுகளை வீசி, பீதியைக் கிளப்பி மக்களை தங்கள் இல்லங்களிலிருந்து விரட்டி அடித்தார்கள். அந்த இடங்களைக் கையகப் படுத்தி தங்களைக் குடியமர்த்தி கொண்டார்கள்.

பாலஸ்தீனில் வாழ்ந்த மக்கள் அதற்குப் பின்னால் ஒரு 200 ஆண்டுகால சதி இருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ளவில்லை.

மூன்றாண்டுகள் கடந்த பின்புதான் பால்ஃபர் பிரகடனம் 1917 என்பது பற்றிய செய்திகள் மக்களுக்குத் தெரியவந்தன.

அந்நிலையில் முதல் உலகப்போர் 28 ஜூலை 1914 முதல் 11 நவம்பர் 1918 வரை உக்கிரமாக நடந்துகொண்டிருந்தது.

அப்போது ஆங்கிலேயர்களுக்கு எதிரி நாடுகளின் இரகசியங்களை சேகரித்துத் தந்துதான் இந்த பால்பர் பிரகடனம் என்பதைப் பெற்றார்கள்.

இந்த பால்பர் பிரகடனம் என்பது, யூதர்களுக்கு ஒரு தனி நாடு கிடைக்க - பிரிட்டன் என்ற ஆங்கில நாடு உதவும் என உறுதி தந்தது. அதுவும் பாலஸ்தீனில் அந்த நாடு கிடைக்க உதவி செய்யும் என உறுதி தந்தது.

எல்லா பித்தலாட்டங்களையும் செய்திட தயாராக இருந்தது.

இதற்கு வகை செய்யும் வகையில் முதலாம் உலகப்போர் முடிவில், உதுமானிய கிலாபத் தோல்வியடைந்தது.

பாலஸ்தீன் நிலப்பரப்பு ஆங்கில நாட்டின் பாதுகாப்பின் கீழ் ஒப்படைக்கப்பட்டது. 1917இல் ஜெரூசலம் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டது. இது அவர்கள் யூத தீவிரவாதிகளுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிட வாய்ப்பளித்தது.

அவர்கள், யூதத் தீவிரவாதிகளின் எல்லாத் தீவிரவாத செயல்களையும் ஆதரித்தார்கள். பாலஸ்தீன் மக்கள் கொஞ்சம், கொஞ்சமாக இடம் பெயர்ந்தார்கள். அந்த இடங்களை யூதத் தீவிரவாதிகள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள்.

இதனை அரபுக்கள் - அல்லது பாலஸ்தீன மக்கள் எதிர்த்தார்கள். ஆங்கிலேயர்கள் தங்கள்

ஆயுத பலத்தைப் பிரயோகித்து எதிர்த்த பாலஸ்தீன மக்களை அடக்கிப் போட்டார்கள். யூதத் தீவிரவாதிகளை அரவணைத்தார்கள். அவர்களுடைய இட ஆக்கிரமிப்பை பாதுகாத் தார்கள்.

இந்நிலையில் இரண்டாம் உலகப்போர் மூண்டது. செப்டம்பர்-1, 1939இல் தொடங்கி செப்டம்பர்-21,1945 வரை நீடித்தது.

இதன் முடிவிலும் - பாலஸ்தீன் மீண்டும் ஆங்கில நாட்டின் பரிபாலனத்தின்கீழ் வந்தது. தொடர்ந்து உலகெங்கிலிலுமிருந்து யூதத் தீவிர வாதிகள் வரவழைக்கப்பட்டு குடியமர்த்தப் பட்டார்கள்.

போர்களைத் தவறியதால் அப்போதிருந்த League of Nations என்ற ஐக்கிய நாடுகள் கூட்டணி கலைக்கப்பட்டது. 1944-1945 இப்போது இருக்கும் ஐக்கிய நாடு சபை United Nations Organization செயலில் வந்தது.

இந்த சபையும் பாலஸ்தீனை ஆங்கில நாட்டின் பாதுகாப்பில் ஒப்படைத்தது.

இதே ஐக்கிய நாடுகள் சபை 1948இல் பாலஸ்தீனை இரண்டாகப் பிளக்கும் தீர்மானம் 181-ஐ நிறைவேற்றியது. பாலஸ்தீனின் ஒரு பெரும்பகுதியை வந்தேறிகளான யூதத் தீவிரவாதிகளுக்குத் தந்தது. தொடர்ந்து நடந்த யூதத் தீவிரவாதத்தால் 8,50,000 பாலஸ்தீன பூர்வ குடிகள் விரட்டியடிக்கப்பட்டார்கள். அவர்கள் தங்கள் தாயகம் திரும்பிட இயலவில்லை இன்றளவும். ஆனாலும் தீவிரவாத செயல்களை இஸ்ரேல்-அதாவது யூதத் தீவிரவாத செயல்களை நிறுத்தவில்லை. தொடர்ந்து, தங்கள் தீவிரவாத செயல்களை நடத்திக்கொண்டே இருந்தார்கள். பாலஸ்தீன மக்கள் அவர்களின் பூர்வீக குடியிருப்புகளிலிருந்து விரட்டியடிக் கப்பட்டனர். அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டனர். இதற்கு ஐக்கிய நாடுகள் சபையும், ஆங்கில நாடும், தன்னை வல்லரசு என அறிமுகப்படுத்திய அமெரிக்காவும் முழு அளவில் ஒத்துழைத்தன.

**இஸ்ரேல் Vs அரபு நாடுகள் போர்**

இஸ்ரேலின் இடைவிடா ஆக்கிரமிப்புகள், அட்டூழியங்கள் இவற்றை எதிர்த்த அரபு நாடுகள், சிரியா, எகிப்து, ஜோர்டான் ஆகியவை இஸ்ரேலை 1967இல் தாக்கின. ஆறே நாட்கள் நடந்த இந்தப் போரில் அரபு நாடுகள் தோற்றன. பல பகுதிகளை இந்த அரபு நாடுகளின் பகுதிகளை இஸ்ரேல் தன்வயப்படுத்தியது.

ஜோர்டான் நாட்டின் கைகளிலிருந்த மேற்குகரை ஜெரூசலம் இஸ்ரேலின் கைகளுக்குச் சென்றன.

எகிப்தின் சினாய் பெனின் சுலா, காஸா ஆகியவை இஸ்ரேலின் கைகளுக்குச் சென்றன. சிரியாவின் கோலான் கையிட்ஸ் இஸ்ரேலின் கைகளுக்குச் சென்றது. இஸ்ரேல் மேற்குகரை, கிழக்கு ஜெரூசலம் ஆகிய இடங்களில் 6,70,000 யூதர்களைக் குடியமர்த்தியது, வீடுகளைக் கட்டித்தந்தது. பூர்விகக் குடிகளை விரட்டி யடித்தது.

**1973 எகிப்து இஸ்ரேல் போர்**

1973ஆம் ஆண்டு அக்டோபர் 6ல் நடந்த ஒரு திடீர் தாக்குதலில் இஸ்ரேல் தோற்றது. ஆனால் திடுதிப்பென காலில் வீழ்ந்தது. ஒரு போர் ஒப்பந்தத்தைக் கொண்டுவந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டது.

அமெரிக்காவின் தலையீட்டின் கீழ், எகிப்தின் சினாய் பெனின்சுலா, ஜோர்டானின் ஜெரூசலம், சிரியாவின் கோலான் கைட்ஸ் ஆகியவை ஐக்கிய நாட்டுப் படைகளின்கீழ் ஒப்படைக்கப்பட்டன.

ஆனால் இஸ்ரேல் இவை தனது பகுதிபோல் பயன்படுத்தி வருகின்றது.

இந்த இடங்களை மீட்க இந்த அரபு நாடுகள் இன்றளவும் முயற்சி செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது ஈரானின் உதவியைப் பெற்ற ஹிஸ்புல்லா எடுத்த முயற்சி களை, இந்த மூன்று நாடுகளும் ஆதரிக்கவில்லை.

அதேபோல், ஜெரூசலத்தை மீட்க ஹமாஸ் முதலாய இயக்கங்கள் எடுத்த முயற்சிகளையும் இந்த நாடுகள் ஆதரிக்கவில்லை. மாறாக, மறைமுகமாகவும் நேரடியாகவும் இஸ்ரேலுக்கு உதவிகளைச் செய்து வருகின்றன.

இந்த நாடுகள், தங்கள் சொந்த பலத்தை வளர்த்துக்கொள்வதற்குப் பதிலாக, இஸ்ரேலை யும் அமெரிக்காவையும் நம்பி நிற்கின்றன.

இன்னும் ஒருபடி மேலே போய் 2020ஆம்

ஆண்டில் அமெரிக்க அதிபர் கொண்டுவந்த அப்ரஹாம் ஒப்பந்தம் என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்துப்போட்டன. இந்த ஒப்பந்தம் நட்பு ஒப்பந்தம் என பிரச்சாரம் செய்யப்பட்டாலும் இது இஸ்ரேலுக்கு எழுதிதந்த அடிமை சாசனம் என்பதே உண்மை.

இந்த நிலையில் பாலஸ்தீன மக்கள், அவர்கள் மீது, இஸ்ரேல் கட்டவீழ்த்தவிடும் கொடூர கொலைகள், ஆக்கிரமிப்புகள், கைதுகள், சிறைபடுத்துதல், சித்திரவதைச் செய்தல், இவை எதையுமே கண்டுகொள்வதுமில்லை. கண்டுகொள்ளப்படவில்லை.

இஸ்ரேலிய படுகொலையாளர்கள் அல்-அக்ஸா என்ற முஸ்லிம்களின் முதல் கிப்லாவை சேதப்படுத்துகின்றார்கள். அதில், யூத அயைடாளங்களைப் பதிக்கின்றார்கள். இதை அரபு நாடுகள் கண்டுகொள்ளவில்லை. அல்குத்ஸ் என்ற ஜெரூசலத்தைக் காப்பாற்றிட வேண்டிய பொறுப்பு ஜோர்டானுக்கு உண்டு. அந்தப் பொறுப்பை ஜோர்டான் தொடர்ந்து புறக்கணித்தே வருகின்றன.

பல யூத அமைப்புகளும், இயக்கங்களும் அல்-அக்ஸாவை இடித்துவிட்டு, அங்கே சாலோமன் ஆலயம் ஒன்றை கட்டப்போவதாக அறிவித்துள்ளன. அதற்காக மக்கள், இயக்கங்களை கட்டி வருகின்றன. யூதத் தீவிரவாத பெண்கள், Women for Temple என்றொரு அமைப்பைக் கட்டி வருகின்றார்கள்.

உலகெங்கிலும் பல்வேறு யூத அமைப்புகள் இதற்காக பெரிய அளவில் நிதியை திரட்டி வருகின்றார்கள்.

எப்படி பாபரி மஸ்ஜித் இடிப்பு ஓர் வெகுஜன மக்கள் இயக்கமாக ஆக்கப்பட்டு வந்ததோ அதேபோல் நடைபெறுகின்றது. இந்த அரபு நாடுகள், எதையும் கண்டுகொள்வதே இல்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக, டிரம்ப் இஸ்ரேலின் தலைநகராக ஜெரூசலமிருக்கும் என அறிவித்தார். தனது முதல்கட்ட ஆட்சியின் போது, (2017-2021)

அப்போது இஸ்ரேலின் தலைநகரமாகிய டெல்அவீவிலிருந்த அமெரிக்காவின் தூதரகத்தை ஜெரூசலத்திற்கு மாற்றினார். அதன்பின் நெதன்யாஹூ ஜெரூசலத்தை மைய்யமாகக் கொண்டே தன் ஆட்சியை நடத்துகின்றான்.

அண்மையில், அக்டோபர் 10,2025இல் இஸ்ரேலுக்கும் காஸா போராளிகளுக்குமிடையில், போர் நிறுத்தம் வந்தது. அதை மைய்யமாகக் கொண்டு அமெரிக்க அதிபர் டிரம்ப் இஸ்ரேலுக்குச் சென்றார். அங்கு, இஸ்ரேலின் நாடாளுமன்றத்தில் அக்டோபர் 3-இல் உரை நிகழ்த்திடும்போது எத்தனையோ பேர், ஜெரூசலம், இஸ்ரேலின் தலைநகராக அமையும் என்று பேசினார்கள்.

ஆனால், நான்தான் ஜெரூசலத்தை இஸ்ரேலின் தலை நகராக ஆக்கினேன் எனப் பீற்றிக் கொண்டார்.

ஆனாலும், அரபு நாடுகளுக்கு உறைக்கவில்லை. இந்த டிரம்ப்க்கு 5 டிரில்லியன் டாலர்களைக் கொட்டிக் கொடுத்தார்கள். இப்போது மீண்டும் பதவி ஏற்றபோது.

ஆனால் இதே அரபு நாடுகள், தாங்கள் அறிக்கை விடும்போதெல்லாம் ஜெரூசலத்தை தலைமையகமாகக் கொண்டு ஒரு தனி பாலஸ்தீனம் அமைய வேண்டும். அதுவே பாலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு எனப் பிரச்சாரம் செய்கின்றனர். டிரம்ப் பீற்றிக்கொண்டபோது அதனை கண்டிக்கவோ மறுத்து கூறவோ இவர்களுக்கு திராணி இல்லை.

இஸ்ரேலின் நாடாளும் மன்றத்தில் பேசிவிட்டு நேரே எகிப்திலுள்ள ஷாம் அல்ஷேஹ் சென்றார் அமெரிக்க அதிபர் டிரம்ப். அங்கு அரபு நாடுகள் அவருக்கு ஜால்ரா போட்டன. அங்கேயும் டிரம்ப் இடம் இதை மறுத்துச் சொல்லவில்லை. அன்றுதான் அக்.13,2025இல் தான் போர் ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆனால் அதில் ஹமாஸோ இஸ்ரேலோ கையெழுத்துப்போடவில்லை.

**துருக்கி அதிபர் ரிசப் எருதுகான்**

இவர் தன்னை கடைசி கலீபாவின் கொள்ளுப் பேரன் எனப் பீற்றிக் கொண்டவர். 68,7229 அப்பாவி பாலஸ்தீன முஸ்லிம்கள், காஸாவில் கொலை செய்ததை கண்டும் காணாததைப் போல் இருந்தபேடி. அவ்வப்போது ஓர் அறிக்கையை விட்டு தன் இருப்பை அடையாளம் காட்டிக் கொண்டவர்.



இவர் அடிக்கடி விட்ட அறிக்கைகள் ஒன்றில், ஜெரூசலம் பாலஸ்தீனர்களுக்குச் சொந்தம், என்றொரு அறிக்கையை விட்டார்.

அடுத்த வாரமே நெதன்யாஹூ ஜெரூசலத்தில் யூத புத்தாண்டு விழாவிற்கு ஓர் ஏற்பாடு செய்து, அதில் அமெரிக்காவைச் சார்ந்த சிலரை வைத்துக் கொண்டு இப்படி அறிக்கை விட்டான்.

எருதுகான் அவர்களே!

ஜெரூசலம் எங்களுக்குச் சொந்தம். அதில் சொந்தம் கொண்டாடிட முற்பட்டால் விபரீதமான விளைவுகளைச் சந்திப்பீர். இது எனது தெளிவான எச்சரிக்கை என்றார். பிணம் தின்னும் கழுகு நெதன்யாஹூ விட்ட சவாலை தட்டிக்கேட்க நாதி இல்லாத சோற்றால் அடித்த பிண்டமாகவே உலா வந்தார், வருகின்றார். எருதுகான், இந்தப் போரில் அதாவது, இரண்டு ஆண்டுகளாக இஸ்ரேலுக்கும் ஹமாஸ் போராளிகளுக்கும் இடையே நடந்த போரில் இஸ்ரேலுக்கு ஆயுதங்கள், உணவு பொருள்கள், பெட்ரோல் ஆகியவை சென்றடைய எருதுகானின் துருக்கி பெரியஅளவில் உதவி செய்தது. இஸ்ரேலுடன் துருக்கி வியாபாரமும் செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதியாக துருக்கியின் துறைமுகத்தில் வந்து நின்ற கப்பல்களில், இஸ்ரேலுக்கு பொருள்கள் செல்லும் என்றால் அந்தக் கப்பல்களில் நாங்கள் வேலை செய்திட மாட்டோம் என வேலை நிறுத்தத்தில், ஈடுபட்டார்கள். துருக்கி வாழ் தொழிலாளர்கள் பலமுறை வீதிக்கு வந்து போராடினார்கள். அதன்பின்னரே இஸ்ரேல் உடனான வர்த்தகங்களைக் நிறுத்துவதாக அறிவித்தார் எருதுகான். ஆனாலும் நிறுத்திய தாகத் தெரியவில்லை.

**ஈமானின் பலம் - Power of Faith**

ஆக கடைசி உதுமானிய கலீபாவின் கொள்ளுப்பேரன் என்ற நிலையிலிருந்து தரந்தாழ்ந்து, நயவஞ்சகர்களின் பட்டியலுக்குப் போய்விட்டார் என்பதே உண்மை.

ஆனால், அத்தனை துரோகங்களுக்கு மிடையே இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்டு, ஷஹாதத் என்ற "இறைவனின் பாதையில் உயிரைத் தருவதே இப்போது நோக்கம்" என வாழ்ந்து வருபவர்களே அனைத்துச் சூழ்ச்சிகளையும் முறியடித்து வருகின்றார்கள். ஆகவே ஹமாஸ் முதலாய இஸ்லாமிய இயக்கங் களே ஒரே தீர்வு என்றாகிவிட்டது.

டேவிட் செல்ஃபோன் என்ற எழுத்தாளன் Power of Faith ஈமானின் பலம் என்றார். David Selbourne Losing Battle with Islam.

**ஆக இன்றைய சூழலில் - குறிப்பாக அரபு நாடுகள் அமெரிக் காவின் அடிமைகளாக - ஆகி விட்டதால், அல்-அக்ஸா, அல்குத்ஸ் ஆகிய பகுதிகளைக் காப்பாற்றிட இருக்கும் ஒரே வழி - இஸ்லாமிய இயக்கங்களே. குறிப்பாக காஸா விலும் மேற்குகரையிலும் போராடும் இயக்கங்களே தீர்வு.**

இது ஹமாஸ் முதலாய இயக்கங்களின் முதல் சாதனை. அல்லாஹ் அவர்களுக்கு எல்லா பலங்களையும் அருள்வானாக. ஹமாஸ்-இன் வெற்றியை மீண்டும் உயிர்பெறும் இஸ்லாமிய எழுச்சி என்கின்றார்கள் மேலை நாட்டு எழுத்தாளர்கள்.

**வீழ்ந்தது இஸ்ரேல் மீதிருந்த பிம்பம்**

வெல்ல முடியாதவர்கள்; மிகையான நுண்மான் நுழைபுலம் கொண்டவர்கள். எங்கும், எதிலும் நுழைந்து விடுவார்கள் யூதர்கள். இரகசியங்களைக் கடத்திச் சென்று விடுவார்கள் என்ற மகா பிம்பங்கள்.

பயங்கரமான கருவிகள் வழி எல்லா தனி மனிதனின் தகவலையும் திரட்டி விடுவார்கள் என்ற ஒரு பெரும் பெயர் அல்ல பீதி, பயம்.



இஸ்ரேல் வான்வெளி பாதுகாப்பில் முதல் இடத்தில் இருக்கின்றது. அதன் வான்வெளி தடைகளைத் தாண்டி எந்த ஏவுகணையும், எந்த ஆளில்லா விமானமும் உள்ளே சென்றுவிட முடியாது. என்றொரு விளம்பரம். அதைக் கொண்டு இஸ்ரேலின் வான்வெளி பாதுகாப்பு விபரங்கள் உலகெங்கும் விற்பனை செய்யப் பட்டது. அபார கொள்ளை. இதில் மிகையான விற்பனை IRON DOME என்ற ஐரண்ட் டோம் என்பதுதான். ஆனால் அது கடந்த பல ஆண்டு களாகவே, இஸ்ரேலுக்குள் செல்லும், ஏவுகணை களைத் தடுத்திடவில்லை. மாறாக, நொறுங்கி வீழ்ந்து இஸ்ரேலிய இராணுவத்திற்கே பெரிய இழப்புகளை ஏற்படுத்தியது. இப்போது இதன் விற்பனை அம்பேல்!

அடுத்து "Arrow Arrow" "ஆரோ, ஆரோ" என்றொரு வான்வெளித் தடையைக் கண்டு பிடித்துவிட்டதாகப் பீற்றிக்கொண்டார்கள். அதுவும் இந்த இரண்டு வருடம் நடந்த போரில் இஸ்ரேலைக் காப்பாற்றிடவில்லை. தோற்றுப்போனது. இதனால் இதன் விற்பனையும் நின்றுபோனது.

தொடர்ந்து தாட் 'Thaad' என்றொரு வான்வெளித் தடையை அறிமுகப்படுத்தியது. இது அமெரிக்காவின் அபாரக் கண்டுபிடிப்பு என்றார்கள். அதனை நாங்கள் மேம்படுத்தி வைத்திருக்கின்றோம் என்றார்கள்.

**12 நாள் போரில் ஜூன் 13-24, 2025**

ஈரானின் துல்லியத் தாக்குதலில், இந்தத் "தாட்" வான்வெளி தடையும், தோற்றுப்போனது. ஈரான் தான் குறி வைத்த அனைத்தையும், சரியாகத் தாக்கியது.

எல்லா முயற்சிகளும் தோற்றுப்போன நிலையில் அமெரிக்காவை ஏவிப் பார்த்து, அமெரிக்கா தன்னுடைய B2 என்ற வலுவான விமானங்களை ஏவி ஈரானின் அணு உலைகளைத் தாக்கியது. அப்போதுதான் தெரிந்தது ஈரானின் தரை தளங்கள் குண்டுகள் நுழைத்திட இயலாத தளங்கள் என்று. ஈரான் பதிலுக்கு கத்தரில் இருந்து அமெரிக்க தளம் மீது பெரியதொரு தாக்குதலை நடத்தியது. அங்கே கத்தரில் அமெரிக்காவின் வான்வெளித் தடைகள் தோற்றன. உடனே அமெரிக்காவும், இஸ்ரேலும் ஈரானிடம் மண்டியிட்டு எழுதப்படாத போர் நிறுத்ததத்தை கடைபிடித்தன.

இப்படி இஸ்ரேல் அமெரிக்கா இவற்றின் வான்வெளி தடைகள் முறியடிக்கப்பட்டன.

இஸ்ரேலின் ஆயுத விற்பனை உலக அங்காடியில் வீழ்ந்தது. வெல்ல முடியாதவர்கள் என்ற பிம்பம் உடைந்து உருக்குலைந்தது.

அக்டோபர்-7,2023 தாக்குதலின்போது, ஹமாஸ், இஸ்ரேலின் எல்லா உளவுபார்க்கும் நிறுவனங்களையும், கருவிகளையும் ஒன்றாகவே வீழ்த்திவிட்டுத்தான் காஸா வளாகத்தில் புகுந்து 258 பேரை பிணை கைதிகளாக அழைத்து வந்தது. ஆக அக்டோபர்-7,2023இல் மிகப்பெரிய வெற்றி ஹமாசுக்கு.

**இப்போது இஸ்ரேலின் முழக்கம் - Total Victory - முழு வெற்றி**

இந்த முழு வெற்றி என்பதில்

1. இஸ்ரேல் முன் வைத்தவை, ஹமாஸ்-ஐ முற்றாக ஒழிப்பது. அவர்களின் ஆயுதங்களைக் கைப்பற்றுவது, அவர்களை நிராயுதபாணி ஆக்கிடுவது.

2. அவர்கள் கட்டமைத்து வைத்திருக்கும் சுரங்கப்பாதைகளையும், பாதாள அரங்கங்களையும் அழிப்பது.

3. காஸாவை முழுமையாகக் கைப்பற்றுவது. அதில் வாழும் மக்களை வெளியேற்றி உலகின்




இதர பாகங்களில் குடியமர்த்துவது.

4. ஹமாஸ் அக். 7,2023இல் அழைத்துச் செல்லப்பட்டவர்களை - இராணுவ நடவடிக் கைகள் மூலம் மட்டுமே விடுதலை செய்வது.

ஆனால், இவற்றுள் எதுவுமே நடக்கவில்லை. இஸ்லாத்தை முன்வைத்தால் நேரடியாக ஹமாஸ் முதலாயப் போராளிகள் குழுக்கள் அறுதி வெற்றியைப் பெற்றிருக்கின்றன.

அல்லாஹ் அவர்களுக்கு வெற்றியைத் தந்திருக்கின்றான்.

இறுதியாக அக்.-10,2025 வெள்ளிக்கிழமை மதியம் 1 மணிக்கு வந்த போர் நிறுத்தம், இஸ்ரேலை காப்பாற்றிட அமெரிக்கா மேற்கொண்ட பெரும் முயற்சி.

10.10.2025 வெள்ளிக்கிழமை மதியம் 1 மணிக்குப் போர் நிறுத்தம், 1.30 மணிக்கு காஸா மக்கள் ஜூம்ஆ தொழுதார்கள். 60,000 உறவினர் களை இழந்த இவர்களால் எப்படி இறைவன் பக்கம் நிற்க முடிந்தது. அதுதான் ஈமானின் பலம்.

**இஸ்ரேலின் தோல்விகளைப் பட்டியலிட்ட இஸ்ரேல் ஆய்வாளர்கள்**

இதனை நாம் எப்படிப் புரிந்துகொள்ள வேண்டும் என்றால், இஸ்ரேலின் பர்மர் சமர்ப்பித்த ஆய்வில் தெரியவந்தது. இந்த ஆய்வு பின்னர் ஹீப்ரு மொழிப் பத்திரிகையிலும் தொடர்ந்து ஆங்கிலப் பத்திரிகைகளிலும், வெளிவந்தது. அதில் நாம் மேலே குறிப்பிட்ட முக்கிய தோல்விகளை முதலில் குறிப்பிடு கின்றனர். பின்னர் பிரதமர் நெதன்யாஹு சொன்னதையும், சொல்லாதவற்றையும் குறிப்பிட்டுள்ளார்.

அவை, அழைத்துச் செல்லப்பட்டவர்கள் விவகாரத்தில் முழு தோல்வி அவர்கள் எங்கே இருந்தார்கள் என்பதைக்கூட கண்டுபிடிக்க இயலவில்லை.

சில முனிசிப்பாலிட்டிகள் மீது 2 லட்சம் டன் குண்டுகளைப் போட்ட பின்பும் தோல்வி.

அழைத்துச் செல்லப்பட்டவர்களைவிட விடுதலை செய்ய போராளிகள் தயாராக இல்லை என்றாய் - இது பொய் போராளிகள் பேச்சுவார்த்தை மூலம் அழைத்துச் செல்லப் பட்டவர்களை விடுவிக்க தயாராகவே இருந் தார்கள். இறுதியில் நாம் தோற்று பேச்சு வார்த் தையில் ஈடுபட்டுதான் அழைத்துச் செல்லப் பட்டவர்களை விடுவித்தோம்.

இதில் போராளிகள், எப்போதும் நம்பத் தகுந்தவர்களாகவே இருந்தார்கள். தாங்கள் தந்த வாக்குறுதிகளை எப்போதும் மீறியதே இல்லை. இதில் அவர்கள் உலக அளவில்

போற்றப்படுகின்றார்கள் நாம் (இஸ்ரேலியர்கள் உலக மக்களால் தூற்றப்படுகின்றோம்.

போராளிகள் இஸ்ரேலிய சிறையிலிருந்த பாலஸ்தீன் மக்களை விடுவிப்பதுதான் தாங்கள் இலட்சியம் என்றார்கள் அதில் வெற்றி பெற்றார்கள். இஸ்ரேல் விடவே மாட்டோம் என அடம்பிடித்தவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டியதாயிற்று.

அழைத்துச் செல்லப்பட்ட இஸ்ரேலியர்களை நாம்தான் அங்கு - காஸாவில் வீசிய 2 லட்சம் டன் குண்டுகளால் கொன்றோம். இப்போது உடலை வைத்தே அரசியல் நடத்துகின்றோம். இதில் நமக்கு வெட்கமில்லை. உலகம் நம்மை உமிழ்கிறது.

தொடக்கத்திலேயே இதே பேச்சு வார்த்தைக்கு ஒத்துக்கொண்டிருந்தால் அத்தனை பேரும் உயிரோடு வந்திருப்பார்கள். இத்தனை நாளும் - எங்களை ஏமாற்றினீர்கள். வீதிக்கு வந்து தினமும் போராடிய அந்தக் குடும்பங்களை அடித்து துவைத்தீர், உங்கள் இராணுவத்தை விட்டுவிட்டு.

**ஃபியாடல் ஃபி - பொய்கள்**

எகிப்தின் கரையோரமுள்ள 14 கிலோ மீட்டர் தூரமுள்ள ஃபியாடல் ஃபி என்ற இடத்திற்குக் கீழ்தான் போராளிகளின் முக்கிய சுரங்கப்பாதைகள் இருக்கின்றன என மாபெரும் கதையை கட்டிவீட்டீர். அதனை கையகப்படுத்தி விட்டால், ஹமாஸ் ஒரே அடியில் வீழ்ந்துவிடும் என்றீர். பெரும் பணமும், மனித உழைப்பும் அங்கே கொண்டு கட்டடப்பட்டது. ஆனால் அங்கு நீங்கள் கட்டிய கதையைப்போல் எதுவும் இல்லை. ஹமாஸ் உங்களை முழுமையாக ஏமாற்றி விட்டார்கள்.

அடுத்து, ரஃபாவும் கான்யூனுஸும்தான் போராளிகளின் முக்கியத்தளம். இவை இரண்டையும் கையகப்படுத்தினால், எல்லாம் முடிந்துவிடும் என்றீர்கள் காலமெல்லாம், கான்யூனுஸில் தாக்குதல் நடத்தி ஆயிரக் கணக்கான அப்பாவி மக்களைக் கொலை செய்தது அல்லாமல் எதுவும் நடக்கவில்லை. கான்யூனுஸை கடைசிவரை கைப்பற்றிட இயலவில்லை.

ஹமாஸ் தலைவர்களைக் கொலை செய்து விட்டால் முடிந்தது கதை என்றீர். இஸ்மாயில் ஹனயாவை கொலை செய்தீர். யஷ்யா சின்வர் வீரமரணத்தை அடைந்தார். முஹம்மத் டைஃப் அவர்களை கொலை செய்தீர். இந்தக் கொலை







The declaration of State of Israel in 1948.

களெல்லாம், போராளிகளை உறுதி செய்தனவே அல்லாமல் பவீனப்படுத்திடவில்லை.ஒவ்வொரு கொலைக்கும் பின் அவரகள் வீர சபதமேற்றார்கள் நமது இராணுவத்தை பிணமாக்கினார்கள். தங்கள் தாக்குதலின் வேகத்தைக் கூட்டினார்கள்.

முடிவில் இப்போது இருக்கும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை பற்றியும் மாபெரும் பொய்யைக் கட்டவிழ்த்துவிட்டீர்கள்.

ஹமாஸ் ஆயுதத்தை கீழே வைத்துவிட்டு, காஸாவை விட்டு வெளியேறிவிடும். இனி காஸாவில் போராளிகள் குழு இருக்காது. காஸா இராணுவ நடவடிக்கைகள் அற்ற பூமியாக மாறிவிடும் என வாக்களித்தீர். இப்படி நிபந்தனைகள் ஒப்பந்தத்தில் எங்கேயுமில்லை.

மொத்தத்தில் இஸ்ரேல் மக்களை பொய்களிலே மூழ்கடித்துவீட்டீர். இஸ்ரேலின் மக்கள் ஏமாளியாக ஆகிப் போனார்கள் என்றார்கள் ஆய்வறிக்கையை தயார் செய்த ரோனை பெர்க்டோன்.

மற்றொரு வெள்ளி, அல்குத்ஸ் ஹமாஸின் 747 நாள் போரின் விளைவாக உலக மக்கள் யார் கொடுமைக்காரன் என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

அவர்கள் கோடிக்கணக்கில் காஸா மக்களுக் காகக் களத்தில் இறங்கினார்கள். அத்தனை மக்களும் Free Free Palestine என்றே கோஷ மிட்டார்கள். இதனால் மறக்கப்பட்டுவிட்ட அல்குத்ஸ் பிரச்சனையும், இஸ்ரேலில் ஆக்கிரமிப்பும் உலகப் பிரச்சனை ஆக ஆனது.

ஒரு கணிப்பின்படி பாலஸ்தீன் கொடி பறக்காத ஐரோப்பிய வீதிகளே இல்லை. இல்லங்களே இல்லை. பல்கலைக்கழக நிகழ்வுகள் இல்லை. நாடாளும் மன்றங்கள் இல்லை என்றானது. அண்மையில் உலகில் நடந்த தேர்தல்கள் அனைத்தும் “காஸா”வை மையப் படுத்தியே நடந்தன. காஸா மக்களை - பாலஸ்தீன மக்களை ஆதரித்தவர்களே ஜெயித்தார்கள்.

பாலஸ்தீன பிரச்சனை எந்த அளவுக்கு நாடாளும் மன்றங்களிலே பிரதிபலித்தது என்றால், பல நாடாளு மன்றங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாலஸ்தீன் கொடியைப்போல் ஆடை அணிந்து வந்தார்கள். இது 68,000 ஷஹீதுகளின் சாதனை.!

**சரியான புரிதல்**

உலகெங்கும் யூதர்களே இஸ்ரேலின் அநியாயங்களைப் பொறுத்திட இயலாமல் நெதன்யாஹுவுக்கு எதிராக கிளர்ந்தார்கள்.

யூதத் தீவிரவாதிகளான Zionists Against Zionism என்ற ஜீயோனிஸ்ட்டுகள் ஜீயோனிஸ்ட்டு களுக்கு எதிராக என்றொரு அமைப்பைத் தொடங்கி இஸ்ரேலுக்கு எதிராகத் தீர்மானங் களை நிவேற்றினார்கள்.

அதில் மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட

வேண்டிய யூத இளைஞர்கள் பலர் எங்களுக்கு இதுவரை சொந்த நாடு ஒன்று உண்டு, அது இஸ்ரேல் என நம்பி வந்தோம். அதை அரபுகள் பிடுங்கிக்கொள்ளப் பார்க்கின்றார்கள் என்று நம்பினோம். அதானல்தான் நாங்கள் இந்தப் போர்களை ஆதரித்தோம்.எங்கள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இப்படித்தான் பாடங்கள் சொல்லித் தரப்பட்டன.

ஆனால், இப்போதுதான் எங்களுக்குப் புரிகின்றது. நாங்கள் பூர்வஜென்ம குடிமக்களை விரட்டி அடித்தும், கொலை செய்தும் பிடுங்கிக் கொண்டு அவர்கள் இடத்தில் வாழ்ந்திருக்கின்றோம் என்று, அதனால்தான் நாங்கள் இஸ்ரேலை விட்டு வெளியேறுகின்றோம் என்றார்கள்.

### இளைஞர்கள் இஸ்ரேலைவிட்டு வெளியேற்றம்

அண்மையில் அக்டோபர் 20/21-22-2025களில் நடந்த இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில் RIC என்ற ஆய்வு நிறுவனம் Research Information Centre ஓர் ஆய்வை சமர்ப்பித்தது. அதில் 2022க்கும் 2024க்குமிடையில் 1,22,500 இஸ்ரேலியர்கள் - இஸ்ரேலை துறந்து வெளிநாடுகளில் குடியேற சென்று விட்டனர். இதில் 40% சதவிகிதம் 20க்கும் 29க்கும் இடைப்பட்ட வயதினர். இதனை இதுவரைக்கும் வெளியேறும் அலை என அழைத்து வந்தோம். இது அலை அல்ல. இது சுனாமி எனக் குறிப்பிட்டிருந்தது.


### ஐ.நா. முதல் குற்றவாளி

இஸ்ரேல் வாழும் இளைஞர்கள் இன்று காஸாவில் நடந்த கூட்டுப்படுகொலைகளுக்கு முதல் காரணம். ஐக்கிய நாடுகள் சபைதான் காரணம் என்கின்றார்கள். அதுதான் பாலஸ்தீன மக்களுக்குச் சொந்தமான இடத்தைப் பிளந்து யூதர்களை குடியமர்த்தியது. ஆக ஐ.நா.தான் முதல் குற்றவாளி என்கின்றார். உண்மையும் அதுதான்.

ஐக்கிய நாடுகள் சபையில் நம்பவர் 25,1948இல் தோற்றுப்போன பாலஸ்தீன் தீர்மானத்தை மீண்டும் நவம்பர் 29,1948இல் கொண்டுவந்து அடாவடியாக நிறைவேற்றிய அமெரிக்கா இரண்டாவது குற்றவாளி என்பது உலக அரங்கிலும் உறுதியானது.

இது 69,000 ஷஹீத்களின் சாதனை. அவர்கள் மரணிக்கவில்லை, வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். உலக மக்களை இயக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போதும் தங்கு தடையின்றி பணம், ஆயுதம், அபார குண்டுகள் ஆகியவற்றைத் தந்தது அமெரிக்காதான். ஆகவே அஃதோர் பரம்பரை இரண்டாம் குற்றவாளி.


அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

"ஹஜ்" பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

16 ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குழு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி 21-1965 இல் கொலை செய்து விட்டார்கள்.

தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887

# BBCயின் பித்தலாட்டம்

**கடந்த** *19/10/2025* அன்று BBC தனது பேஸ்புக் பக்கத்தில் பேரரசுகளின் கல்லறை என்ற தலைப்பில் ஆப்கானிஸ்தான் குறித்து கட்டுரை வெளியிட்டு இருந்தது. அதில் ஆப்கானிஸ்தான் மக்கள் பிரிட்டிஷ் ராணுவத்தையும் சோவியத் மற்றும் அமெரிக்க படைகளை வீழ்த்தியது குறித்தும் செய்தி வெளியிட்டு இருந்தது. இந்த கட்டுரை ஆப்கானிஸ்தான் வெளியுறவு துறை அமைச்சர் அமீர்கான் முத்தக்கி இந்திய வருகையை ஒட்டியும் பக்ரான் விமான தளத்தை அமெரிக்கா கேட்டும் ஆப்கானிஸ்தான் அரசு அதற்கு மறுப்பு தெரிவித்ததையும் ஒட்டி முக்கியத்துவம் பெறுகிறது.

ஒரு காலத்தில் உலகிலேயே கொடூர மானவர்கள் என்ற பட்டம். எவ்வளவு மோசமாக சித்தரிக்க முடியுமோ அவ்வளவு மோசமாக ஊடகங்களிள் சித்தரிப்பு. அவர்களை மோசமாக சித்தரித்து ஆயிரக்கணக்கில் திரைப்படங்கள். நம் தமிழ்நாட்டில் கூட கமலஹாசனின் விஸ்வரூபம் என்ற திரைப்படம்.

உலகில் எங்கும் ஆப்கானிஸ்தான் போராளி களை இழிவுப்படுத்தி எடுக்கபட்ட திரைப் படங்களுக்கு எதிர்த்து யார் குரல் கொடுத்த தாகவும் தெரியவில்லை ஆனால் தமிழகம் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தது. அதற்கு முக்கிய காரணம் அவர்கள் குறித்து குலாம் முஹம்மது அவர்கள் கொண்டு வந்திருந்த இலக்கியங்கள் ஆப்கன் முஜாஹிதுகள் தியாக வரலாறு மற்றும் தாலிபனின் பிடியில் போன்ற புத்தகங்கள். இந்த செய்திகளை அந்த வெளியுறவு துறை அமைச்சருக்கு கொண்டு சேர்த்திருந்தால் நன்றாக இருந்து இருக்கும்.

உலகம் முழுவதும் அவர்களை மோசமாக சித்தரித்து அமெரிக்க ஐரோப்பா ஊடகங்கள் பரப்பி கொண்டு இருந்த வேளையில் அவர்கள் அதை குறித்து கிஞ்சிற்றும் கவலைப்படவில்லை. பதில் சொல்லி நேரத்தை வீணடித்து கொண்டும் இருக்காமல் நவீன சிலுவை படையினரை தோற்க்கடிப்பதில் குறியாக இருந்தார்கள். இது அவர்கள் போராளிகளுக்கு கற்று தரும் பாடமாக உள்ளது யார் என்ன சொன்னாலும் அதற்கு விளக்கம் கூட தராமல் உன் பணியை செய்தால் மட்டும் போதும் என்பதே அது.

இந்தியாவில் கூட ஏதாவது கொடூர செயல்களை செய்தால் தாலிபனுடன் ஒப்பிடு வதும் பொதுவுடைமை வாதிகள் இங்குள்ள அடிப்படை வாதிகளை குறிக்க நூலிபன்ஸ் என்ற பதத்தையும் சொல்லும் அளவுக்கு உள்ளது. அலகாபாத் நீதிமன்றம் தாடி தொடர்பான ஒரு தீர்ப்பில் தாலிபனிசத்தை இங்கு அனுமதிக்க முடியாது என்ற வார்த்தை பதத்தை பயன்படுத்தினர்.

ஆனால் யாரெல்லாம் அவர்களை கொடுங் கோலர்களாக சித்தரித்தனரோ அவர்கள் எல்லாம் அவர்களை வரவேற்கும் நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர். இந்த நிலையில் தான் BBC இந்த கட்டுரை வெளியிட்டு உள்ளது. அவர்கள் பிரிட்டிஷ், சோவியத், அமெரிக்கா போன்ற நாடுகளை வீழ்த்திய செய்தியை பதிவிட்டு விட்டு ஆப்கானிஸ்தான் ஒன்றும் வீழ்த்த முடியாதது அல்ல என்று தனது ஆற்றாமையை வெளிப் படுத்தி உள்ளது.

அதில் ஒன்று என்னவென்றால் ஆப்கானிஸ் தான் மீது படை எடுத்த நாடுகளின் தவறான முடிவுகளால் தோற்றதாக graveyard of emperors என்ற புத்தகத்தை எழுதிய டேவிட் ஆஷ்பி கூறியதாக பதிவிட்டுள்ளது. ஒரு நாடு தவறான முடிவு எடுத்து இருக்கலாம் எல்லா நாடுமே எப்படி தவறான முடிவு எடுக்கும். அமெரிக்கா உள்ளே வந்த போது ரஷ்யா எச்சரித்தது. இருந்தும் வந்தார்கள் என்றால் எப்படி எல்லாம் திட்டம் போட்டு இருப்பார்கள். அதுவும் நேட்டோ படையையும் சேர்த்து கொண்டு.

ஆப்கானிஸ்தானியர்கள் வீழ்த்த முடியா தவர்கள் அல்ல என்ற தனது ஆற்றாமையை வெளிப்படுத்த மத்திய காலத்தில் மன்ன ராட்சியில் சில காலம் சில மன்னர்கள் ஆப்கானிஸ்தானை ஆண்டதை சொல்லி திருப்தி பட்டு கொள்கிறது. தற்போது மூன்று வல்லரசு களும் அவர்களை ஆக்கிரமிக்க வந்ததன் நோக்கம் ஆப்கானிஸ்தான் வளமானது என்றெல் லாம் இல்லை. இஸ்லாத்தில் பிடிப்புள்ள மக்கள் வாழ்கிறார்கள் அவர்களை எப்படியாவது அழிக்க வேண்டும் என்று தான்.

ஆக்கிரமிப்பாளர்களை போராளிகள் வீழ்த்தியதும் இஸ்லாத்தை கொண்டுதான்




# FIR 59 – Terrorist Offence ஆனதா?

**இப்பகுதியில்,** FIR 59-இல் கூறப்பட்டுள்ள குற்றச்செயல்கள் Section 15 UAPA-இன் வரையறைக்குள் வரும் "terrorist acts" ஆகுமா? என்பதைப் பார்க்கிறோம்.

இதற்காக, குற்றப்பத்திரிகையில் (charge sheet) குறிப்பிடப்பட்டுள்ள பெரும் சதி (overarching conspiracy) குறித்த குற்றச்சாட்டுகள் உண்மை எனக் கருதுவதாக முன்னெடுக்கிறோம். அதாவது, குற்றச்சாட்டுகள் உச்ச நிலைக்கு எடுத்துக் கொண்டாலும், அவை Section 15 UAPA-இன் இரண்டு முக்கிய கூறுகளை பூர்த்தி செய்கிறதா என்பதே சோதனை:

குற்றம் செய்யப்பட்டது இந்தியாவின் ஒருமைப்பாடு (unity), ஒருங்கிணைப்பு (integrity), பாதுகாப்பு (security), பொருளாதார பாதுகாப்பு (economic security), அல்லது சுயாட்சி (sovereignty)-ஐ அச்சுறுத்தும் நோக்கத்துடன்; அல்லது

குற்றம் செய்யப்பட்டது இந்திய மக்களின் ஓர் பகுதியை அச்சுறுத்தும் நோக்கத்துடன் (strike terror in any section of people in India).

Prosecution வாதம் என்னவெனில்:

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆயுதங்களை வாங்கி, கலவரங்களைத் தூண்டினர். அரசாங்கத்தை CAA-ஐ ரத்து செய்ய வற்புறுத்துவதற்காகவும், Donald Trump-ன் இந்தியா வருகை நேரத்தில் சிறுபான்மையினருக்கு எதிரான அநீதிகள் நடந்ததாக பொய்யான பிரசாரம் செய்யவும் இந்தச் செயல்கள் நடந்தன என்பதே!

**Chargesheet (16.09.2020 - FIR 59)** கூறியது:

"இந்தக் கலவரங்கள் Delhi-யை முடக்கவும் (paralyse), நிலைகுலையச் செய்யவும் (destabilise), சிதைக்கவும் (disintegrate) திட்டமிடப்பட்டன. மேலும், வன்முறை மூலம் அரசாங்கத்தை முடக்கி, CAA-வை ரத்து செய்ய வற்புறுத்துவதே அவர்களின் நோக்கம்."

**Prosecution-**ன் கூற்றுப்படி, குற்றச்செயல்கள்:

பெரிய அளவிலான மக்களை நோக்கி (wider audience) நடத்தப்பட்டவை,

சின்னமாகக் கருதப்படும் இலக்குகளை (symbolic targets) - குடிமக்கள் உட்பட - தாக்கியவை,

அசாதாரண வன்முறை (extra-normal violence) மூலம், சமூகத்தில் பயம், பாதுகாப்பின்மை ஏற்படுத்தி, மேலும் பெரும் மோதல்களுக்கு தள்ளும் வகையில் அரசியல் நோக்கத்துடன் பிரசாரம் செய்யப்பட்டவை.

குற்றப்பத்திரிகை (chargesheet) சாட்சியங்களைக் கொண்டிருந்தாலும்: இந்தியாவின் unity, integrity, security, economic security, sovereignty-ஐ அச்சுறுத்தும் எந்தவித நோக்கமும் (intention) காணப்படவில்லை.

அதிகபட்சமாக, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அரசாங்கத்தை பழிக்கச் செய்ய (defame the government of India) முயன்றதாகவே தெரிகிறது. ஆனால் இது Section 15-இல் கூறிய சட்ட வரம்பை (legal threshold) அடைவதில்லை.

முந்தைய பகுதிகளில் பார்த்தபடி, பல தீர்ப்புகள் public order-ஐ பாதிப்பது மற்றும் security of India-ஐ பாதிப்பது என்கிற வேறுபாட்டை தெளிவுபடுத்துகின்றன. இங்கே நடந்த கலவரம், அதிகபட்சமாக law and order disruption தான். இது வடகிழக்கு டெல்லியின் சில பகுதிகளுக்கு மட்டுமே (restricted localities) ஏற்பட்டது. இதை இந்தியாவின் ஒருமைப்பாடு, பாதுகாப்பு, சுயாட்சி-ஐ பாதித்தது எனச் சொல்ல முடியாது.

மேலும், chargesheet-ல்:

எந்த அரசு நிறுவனமும் (government institution), சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த நபரும் (public importance figures), தேசிய அடையாளச் சின்னங்களும் (symbolic targets) தாக்கப்பட்டதாகக் கூறப்படவில்லை.

Economic Security குறித்த வாதமும் நிலைக்காது. குற்றச்செயல்கள் இந்தியாவின் நிலப்பரப்பு எல்லைகளில் (territorial borders) எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தும் அளவுக்கு இல்லை.

"மக்களிடையே பயத்தை ஏற்படுத்துதல்..." - பிரிவு 15

மற்றொரு கேள்வி என்னவென்றால், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மக்களின் ஒரு பிரிவில் பயத்தை ஏற்படுத்தும் சதியினை செய்தார்களா, அல்லது அவர்களின் செயல்கள் மக்களின் ஒரு பிரிவில் பயத்தை ஏற்படுத்தும் வகையில் இருந்ததா என்பதே.

உச்ச நீதிமன்றம் TADA சட்டத்தின் சார்பில் தீர்மானித்தபோது, பலவிதமான குற்றச் செயல்கள் மக்களிடம் பயம் மற்றும் பாதுகாப்பின்மையை உருவாக்கும் விளைவைக் கொண்டிருப்பதாகக் கூறப்பட்டது. எடுத்துக்காட்டாக, பல மாநிலங்களில் போலீசார் குற்றப் பின்னணி அதிகமுள்ளவர்களை (history-sheeters), அவர்கள் கும்பலின் உறுப்பினர்களாக இருந்து ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியில் வாழும் மக்களை அச்சுறுத்தியுள்ளனர் என்பதைக் காரணம் காட்டி வெளியேற்ற (extern) செய்யும் சட்டங்கள் உள்ளன. இச்செயல்கள் உள்ளூர் மக்களிடையே பயம், அச்சம் அல்லது நடுக்கத்தை ஏற்படுத்தினாலும், அவை தேசிய அளவில் தாக்கம் ஏற்படுத்தாது, எனவே அவை சட்ட ரீதியில் தீவிரவாத குற்றமாக கருதப்பட முடியாது.

CBI v. Nalini வழக்கில், நீதிபதி Wadhwa பின்வருமாறு குறிப்பிட்டார்:

"554. ராஜீவ் காந்தியின் கொலை மூலம் பயம் ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படலாம், ஆனால் பயத்தை ஏற்படுத்தும் நோக்கம் இருந்ததா என்பது கேள்வியாக உள்ளது, அதற்கு எந்த ஆதாரமும் இல்லை."

அதே வழக்கில், நீதிபதி K.T.Thomas பின்வருமாறு குறிப்பிட்டார்:

"59. மேற்கண்ட சூழ்நிலைகளிலிருந்து, சதியாளர்கள் எப்போதாவது இந்திய அரசாங்கத்தை சட்டப்படி நிறுவப்பட்ட நிலையில் மீறி செயல்பட நினைத்தனர் என்று நாங்கள் முடிவு செய்ய முடியவில்லை. மேலும், அவர்கள் எப்போதாவது மக்கள் அல்லது அவர்களுள் ஒரு பிரிவில் பயத்தை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டிருந்தனர் என்று சொல்ல முடியாது.

அவர்கள் செய்த செயல் 18 பேரின் மரணத்தை ஏற்படுத்தி, அது இந்திய மக்களிடம் பெரும் பயத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகிறது. ஸ்ரீபெரும்புதூரில் நடந்த அந்தக் கொடூரச் சம்பவம் இந்தியா முழுவதும் அதிர்ச்சியும் பயமும் கிளப்பியது என்பதில் எங்களுக்கு சந்தேகமில்லை. ஆனால், ராஜீவ் காந்தியைத் தவிர வேறு எந்த இந்தியரின் மரணத்தையும் விரும்பினர் என்ற ஆதாரம் இல்லை. முன்கூட்டியே ஊகித்திருக்கலாம்.

ஆனால் அது வேறொரு விஷயம்; அதை வைத்து அவர்கள் யாரையும் ராஜீவ் காந்தியைத் தவிரக் கொல்ல விரும்பினர் அல்லது மக்களில் பயம் ஏற்படுத்த நினைத்தனர் என்று நாம் கூற முடியாது."

*“60. மாற்றாக, சிவராசன் மற்றும் LTTE தலைவர்கள் கூடுதல் உயிரிழப்புகள் நிகழலாம் என்று அறிந்திருந்தாலும், அது அவர்கள் மக்களில் பயம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் செய்தார்கள் என்று சொல்ல முடியாது.”*

*“61. சதியாளர்கள் இந்திய அரசாங்கத்தை மீற முயன்றனர் அல்லது இந்திய மக்களில் பயத்தை ஏற்படுத்த முயன்றனர் என்பதற்கான போதுமான ஆதாரம் இல்லை. எனவே, TADA பிரிவு 3-இல் குற்றவியல் தண்டனை வழங்க முடியாது.”*

இதனால், வெறும் பயம், அச்சம் அல்லது பதற்றத்தை ஏற்படுத்துவது மட்டுமே போதாது. அது ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கோ அல்லது பொதுமக்களுக்கோ பயத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செய்யப்பட வேண்டும், மேலும் அது நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப் பாட்டை பாதிக்கும் அளவிற்கு இருக்க வேண்டும் என்பதே சட்டத்தின் விளக்கம்.

**FIR 59-இல் முதல் Chargesheet**

FIR 59-இல் முதலாவது chargesheet-ல், Special Cell வாதம் என்னவென்றால்,

“குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் CAA-வை ரத்து செய்ய அரசை வற்புறுத்துவதற்காக கலவரங்களை ஏற்படுத்த சதி செய்துள்ளனர்.”

ஆனால் chargesheet-இல் உள்ள பொருட்கள், CAA ரத்து செய்யும் வாதத்தை முன்னெடுத்தவர்கள், ஹிந்து சமுதாயத்தில் பயத்தை ஏற்படுத்த நினைத்தனர் என்பதற்கான நம்பகமான ஆதாரங்களை வழங்கவில்லை.

மாறாக, கொல்லப்பட்டவர்கள், தாக்கப் பட்டவர்கள் மற்றும் சொத்து சேதம் ஏற்பட்ட வர்கள் பெரும்பாலும் முஸ்லீம் மக்கள். மேலும், பல மசூதிகள் சேதமடைந்தன மற்றும் சிறுபான்மையினருக்கு அதிக பாதிப்பு ஏற்பட்டது. முஸ்லீம் மக்கள் அதிகமாக உள்ள இடங்களில் முஸ்லீம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கலவரங் களை ஏற்படுத்தி, பெரும்பாலும் முஸ்லீம்களை கொன்று, மசூதிகளை எரித்தல் போன்றவை, முஸ்லீம்களுக்கு எதிரான சட்டத்தை எதிர்க்கும் நோக்கில் நடந்ததாகக் கூறுவது நீதிமன்றங்களால் கவனிக்கப்பட்டது.

**குற்றங்கள்**

**குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் செய்த குற்றங்கள்:**

- **ஆயுதங்களுடன் கலவரத்திற்கு சதி செய்தல்,**
- **தீ வைப்பு மற்றும் சொத்து சேதம்,**
- **கடுமையான காயம் ஏற்படுத்தல்,**
- **கொலைக்குச் சதி செய்தல்.**

IPC இந்திய தண்டனைச் சட்டம் அல்லது உடல் சேதத்திற்கு வழிவகுக்கும் மிக ஆபத்தான நிலையை உருவாக்குவதற்கான செயல்களை தண்டிக்கிறது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் CAA-வை ரத்து செய்ய முயன்ற போது உலக ளாவிய ஆபத்தான நிலைகளை உருவாக்கி னார்கள். ஆனால், இவை தீவிரவாதக் குற்றமாக கருதப்படமாட்டாது. Section 15 UAPA-ஐ இந்தக் குற்றங்களுக்கு பொருத்துவது சட்டத்தை தவறாக பயன்படுத்துவது ஆகும்.

**UAPA மற்றும் Due Process (நீதிமுறை உரிமைகள்)**

இந்த பகுதியில், CrPC-இல் இருந்து UAPA எடுத்துக்கொண்ட வித்தியாசமான விதிகள் மற்றும் அதன் மூலம் accused-ன் fair trial உரிமை பாதிக்கப்படுவது ஆராயப்படுகின்றது.

**நீண்டகால காவல்**

குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டால், accused-ஐ போலீஸ் அல்லது நீதிமன்ற காவலில் வைக்கலாம், ஆனால் சட்ட விதிகளால் நிர்ணயிக் கப்பட்ட காலத்திற்கு மட்டுமே. விசாரணை முடிந்ததும், investigating agency chargesheet-ஐ நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும். Chargesheet-இல் போதுமான ஆதாரம் இருந்தால், accused-ஐ மேலதிக நீதிமன்ற காவலுக்காக அனுப்பி விசாரணை ஆரம்பிக்கலாம். ஆதாரம் இல்லா விடில், accused உடனடியாக விடுவிக்கப்படுவர்.

**அரசாங்க அதிகாரம்**

அரசாங்கத்தின் அதிகாரம் பொறுப்புகள் நிறைந்த பரந்து விரிந்ததாகும். தனது குடிமக்களின் freedom / liberty, மிக முக்கியமான அடிப்படை உரிமை, இது பொறுப்புடன் பயன்படுத்தப்பட வேண்டும். Chargesheet தாக்கல் செய்யப்படு வதற்கு முன் pre-chargesheet detention பயன் படுத்தும்போது, அரசு accused மீது குற்றம்

சத்தியப்படுத்தப்படாத நிலையில் காவலில் வைக்கிறது. விசாரணை மற்றும் விசாரணைக்குள் தடைகளைத் தவிர்க்க, accused-ஐ தற்காலிகமாக வைக்கலாம், ஆனால் மிக நீண்டகாலம் காவலில் வைக்க சட்டம் அனுமதிக்காது.

**CrPC விதிகள்**

Chargesheet தாக்கல் செய்யப்படாத நிலையில், accused-ஐ 60-90 நாட்கள் வரை காவலில் வைக்கலாம். 60/90 நாட்களில் chargesheet தாக்கல் செய்யப்படாவிட்டால், Section 167(2) படி statutory bail வழங்கப்பட வேண்டும். Statutory bail வழங்கப்பட்ட பின்னர் chargesheet தாக்கல் செய்யப்படுவதால், bail ரத்து செய்யப்படாது.

UAPAபடி, விசாரணைக்கான காலம் (chargesheet தாக்கல் செய்யும் நேரம்), குற்றச் சாட்டுகள் மரணம், ஆயுள் சிறை அல்லது குறைந்தது 10 ஆண்டுகள் சிறை சண்டையுடன் தொடர்புடையவை என்றால், 90 நாட்கள் என்பதில் இருந்து 180 நாட்களாக நீட்டிக்கப் பட்டுள்ளது.

இது CrPC-ல் கொடுக்கப்பட்ட காலக்கெடு விலிருந்து முற்றிலும் விலகியிருக்கிறது மற்றும் குற்றச்சாட்டாளருக்கு கடுமையான பாதிப்பை உண்டாக்குகிறது. பாதுகாப்புத் துறையின் வரையறை நீட்டிப்பை எதிர்த்து மனு தாக்குதல் செய்யும் உரிமையை தடுக்கும் செயல் இது.

முதல் 90 நாட்களுக்குமேல் காவல் நீட்டிப்பை சீராக பரிசோதிக்கக் கட்டுப்பாடாகச் செய்ய, UAPA சட்டத்தின் பிரிவு 43D(2) அரசு தரப்பு வழக்கறிஞரை (Public Prosecutor) அந்த நீட்டிப்பை தேவையானதாக நிரூபிக்கச் செய்ய கோருகிறது.

இந்த கட்டுப்பாடு, ஒரு அரசு தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தின் சுதந்திர அலுவலராக இருப்பதால், சுயமாகவும் நீதி உணர்ச்சியுடனும் விசாரணையின் முன்னேற்றத்தை ஆய்வு செய்யும் மற்றும் ஒருவரின் தொடர்ந்த கைதானது நியாயமானதா என பரிசீலிக்கும் என்கிற முன்மதிப்பில் செயல்படுகிறது. இந்த சுதந்திர மான மனப்பயன்பாட்டின் மதிப்பை வலியுறுத்தி, உச்ச நீதிமன்றம் ஹிதேந்திர விஷ்ணு தாகூர் வழக்கில் TADA-வில் உள்ள இணையான விதியைக் குறித்து கூறியது:

*23. ... சட்டமன்றம் (Legislature) விசாரணை அதிகாரியிடம் நேரம் நீட்டிப்பை கோரும் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க, ஒரேடியாக விட்ட தாகக் கருத்துகள் தெரியவில்லை. இந்த விதி, விசாரணைகளை விரைவாக முடிக்கச் செய்யும் சட்ட நோக்கத்துடன் ஒத்துப்போகும் விதமாகும். மற்றும் போலீசின் விருப்பப்படி தேவையில்லாத நீண்ட விசாரணைக்குள் குற்றச்சாட்டாளரை தொடர்ந்த கைதிலேயே வைக்க அனுமதிக்காது.*

சட்டமன்றம் எதிர்பார்க்கிறது விசாரணை மிக விரைவாக முடிக்கப்பட வேண்டும் என்று; ஆனால், விசாரணையை முடிக்க கூடுதல் நேரம் தேவைப்பட்டால், விசாரணை முகமை முதலில் அரசு தரப்பு வழக்கறிஞரிடம் (Public Prosecutor) ஆய்வை சமர்ப்பித்து, விசாரணை யின் முன்னேற்றத்தை அவரிடம் சமர்ப்பித்து, குற்றச்சாட்டாளரை மேலும் கைதில் வைத்திருப் பதற்கான காரணங்களை விளக்க வேண்டும்.

அரசு தரப்பு வழக்கறிஞர் (Public Prosecutor) மாநில அரசின் முக்கிய அலுவலராக உள்ளார். மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மாநிலம் அவரை நியமிக்கிறது. அவர் விசாரணை முகமைக்கு உறுப்பினராக இல்லை; அவர் ஒரு சுதந்திர அதிகாரி.

விசாரணை முகமை நீதிமன்றத்திற்கு நேரம் நீட்டிப்பை கோரும்போது, அரசு தரப்பு வழக்கறிஞர் (Public Prosecutor) சுயமாக தனது மனதைப் பயன்படுத்தி, விசாரணையை முடிக்க அனுமதிக்கச் செய்யும் நோக்கத்தில் மனுசார் நிலையை பரிசீலிக்க வேண்டும்.

அவர் ஒரு 'போஸ்ட் அலுவலகம்' அல்ல; அவர் சமர்ப்பித்த காரணங்களை ஏற்றுக் கொள்ளவும், ஏற்காது மறுக்கவும் உரிமையுடன் இருக்கிறார். விசாரணை முறையாக முன்னேற வில்லை என்றால் அல்லது தேவையில்லாத, நோக்கமில்லாத தாமதம் ஏற்பட்டிருந்தால், அவர் நீதிமன்றத்திற்கு எந்த அறிக்கையும் சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

இந்த நீட்டிப்பின் கடுமையான விளைவுகள் குற்றச்சாட்டாளரின் சுதந்திரத்திற்கு பங்கம் ஏற்படுவதால், ஹிதேந்திர விஷ்ணு தாகூர் வழக்கில் உச்ச நீதிமன்றம், குற்றச்சாட்டாளருக்கு மாநிலத்தின் காவல் நீட்டிப்பின் கோரிக்கையை பரிசோதித்து எதிர்க்கும் உரிமையை வழங்குவது அவசியம் கூறியது,

*21.* அரசு தரப்பு வழக்கறிஞர் (Public Prosecutor) திட்டமிட்ட நீதிமன்றத்தில் (Designated Court) காலம் நீட்டிப்புக்காக அறிக்கை சமர்ப்பிக்கும் போது, அந்த அறிக்கை குற்றச்சாட்டாளருக்கு தெரிவிக்கப்பட வேண்டும், இதனால் குற்றச் சாட்டாளர் தனது அனைத்து சட்ட ரீதியான காரணங்களை முன்வைத்து நீட்டிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்க வாய்ப்பு பெறுவார்.

*22.* இருப்பினும், குற்றச்சாட்டாளருக்கு தெரிவிக்காமல் நீதிமன்றம் எந்த நீட்டிப்பையும் வழங்கக்கூடாது.

**மூடிய உறையில் வழக்குரைஞர் அறிக்கை!**

பின்பு, உச்ச நீதிமன்றம் Sanjay Dutt v. State வழக்கில் (CBI, Bombay) பாதுகாப்புத் தரப்பின் காவல் நீட்டிப்பை எதிர்க்கும் பங்கு குறித்து மிகவும் குறைவான அணுகுமுறையை ஏற்றுக் கொண்டது. உச்ச நீதிமன்றம் கூறியது:

*53.* (2)(a) TADA சட்டம் பிரிவு 20(4)(bb) குற்றச்சாட்டாளரை 167(1) CrPC-க்கு ஏற்ப நீதிமன்றத்தில் முன்னிறுத்த வேண்டுமென்று மட்டுமே கோருகிறது. இதன்மூலம் *180* நாட் களுக்கு மேலான நீட்டிப்பிற்கு முன்னர் குற்றச் சாட்டாளருக்கு அறிவிப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். குற்றச்சாட்டாளருக்கு நேர்மறை காரணங்களை எழுதி அறிவிப்பதில்லை; நீதிமன்றத்தில் அவரை முன்னிறுத்தி விசாரணை நீட்டிப்பு குறித்து பரிசீலிக்கப்படுவதாக கூறுவது போதும்.

Sanjay Dutt வழக்கை வைத்து கொண்டு, UAPA சட்டத்தின் கீழ் காவல் நீட்டிப்பை எதிர்க்கும் வழக்குகளில், நீதிமன்றங்கள் குற்றச் சாட்டாளரின் உரிமைகளை மிகவும் குறைத் துள்ளன.

**Syed Shahid Yousuf v. NIA வழக்கில், டெல்லி உயர் நீதிமன்றம் கூறியது:**

*42.* காவல் நீட்டிப்பது பற்றி, காவல் நிலை யத்தில் குற்றம் சாட்டப்பட்டவர், அரசு தரப்பு வழக்கறிஞரின்(PP) அறிக்கையை பெறுவதற்கான உரிமைகள் இல்லை. அந்த அறிக்கையும் நீதிமன்றத்தில் நடக்கும் விசாரணைகள் பற்றிய குறிப்புகள் அடங்கியதாக மட்டுமே இருக்கும்.



**Sharjeel Imam v. State of NCT of Delhi வழக்கிலும் இதே நிலை:**

குற்றச்சாட்டாளர் அறிக்கையை எதிர்க்க உரிமையில்லை. Khalid v. State வழக்கில், அறிக்கை மறைக்கப்பட்ட காரணம் விசாரணை பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக.

Ishrat Jahan v. State வழக்கிலும் இதே காரணங்களை ஏற்றுக் கொண்டது.

**Audi Alteram Partem: காவல் நீட்டிப்புக்கு எதிராக மனு தாக்கல்**

இந்த அடிப்படை உரிமையும் குற்றச்சாட் டாளருக்காக முற்றிலும் குறைக்கப்பட்டுள்ளது. குற்றச்சாட்டாளருக்கு Section 43D UAPAஇன் கீழ் அறிவிப்பு உரிமை உண்டு மற்றும் விசாரணை அதிகாரியின் நீட்டிப்பை எதிர்க்க வாய்ப்பு உள்ளது.

குற்றச்சாட்டாளர் காவல் நீட்டிப்பின் காரணங்களை அறியாத நிலையில் “கேள்வி கேட்கும் உரிமை” பயனற்றதாக மாறுகிறது. UAPA இன் கீழ், குற்றச்சாட்டாளரின் காவல் நீட்டிப்பு, விசாரணை அதிகாரியின் விண்ணப் பத்தை மட்டும் பொறுத்து செய்யப்பட முடியாது; நீதிமன்றத்தின் தீர்மானத்தின் அடிப்படை அரசு தரப்பு வழக்கறிஞரின் அறிக்கையே ஆகும். குற்றச் சாட்டாளரை நீதிமன்றத்தில் முன்னிறுத்தி, அவர் தன்னுடைய கைது அடிப்படையை எதிர்க்கும் வாய்ப்பை வழங்காதது, நியாயமான கேள்விக் கேட்கும் உரிமையை mock செய்கிறது.

இன்ஷா அல்லாஹ் தொடரும்...!

Source: UNCERTAIN JUSTICE a Citizens Committee Report on the North East Delhi Violence 2020

*தமிழில்:* **Adv. Jasmine Fathima**



# உச்ச நீதிமன்றம் உண்மையான தீவிரவாதத்தைத் தடுக்கத் தவறிவிட்டது

**பிராமிணிஸ்ட்டுகள் இந்தியா முழுவதும் குண்டுவெடிப்புகளை நடத்தினார்கள். பின்னர் முஸ்லிம்கள் தாம் அந்தக் குண்டுகளை வைத்தார்கள் என இடைவிடாமல் பிரச்சாரம் செய்தார்கள். ஏன் முஸ்லிம்கள் குண்டு வைக்கின்றார்கள் எனக் கேட்டால், பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டதற்கு பழி தீர்க்கின்றார்கள் என்று முதலிலும், பின்னர் குஜராத் இனப்படுகொலைக்குப் பழி வாங்குகின்றார்கள் என்றும் கூறினார்கள்**

நான் என்னுடைய முந்தைய நூலாகிய கர்கரேயைக் கொலை செய்தது யார் என்ற நூலில் குறிப்பிட்டதைப்போல் கடந்த 10 ஆண்டுகளாக நாட்டில் நடந்த இந்து முஸ்லிம் கலவரங்கள். அதாவது 19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த கலவரங்கள், இந்துக்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இடையேயுள்ள தவறான எண்ணங் களால் அல்லது காழ்ப்புணர்ச்சிகளால் ஏற்பட்டவை அல்ல.

அதேபோல் அவை திடுதிப்பென ஏற்பட்ட காரணங்களால் நடந்தவையுமல்ல. மாறாக அவை சில பிராமிணிஸ்ட்டுகளால் வேண்டுமென்றே திட்டமிட்டு நடத்தப்பட்டவை. இவை வகுப்பு வாத வைரஸ் சமுதாயத்தை அரித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்ற கீழான எண்ணத்தால் நடத்தப்பட்டவை.

அவர்கள் – அந்த பிராமிணிஸ்ட்டுகள் – இந்த வழிமுறையை 19–ஆம் நூற்றாண்டில் இருந்தே கடைப்பிடித்து வருகின்றார்கள். இந்தக் காலக்கட்டத்தில்தான் மகாத்மா ஜோதி பாய் பூஃலேயும், பெரியார் இராமசாமி அவர்களும், இன்னும் பலரும் பிராமிணர் களுக்கு எதிராகத் தொடங்கிய இயக்கங்கள் நாட்டின் பல பகுதிகளுக்கு தழைத்தோங்கிக் கொண்டிருந்தன.

இந்தத் தலைவர்கள், பாமர இந்து மக்களிடம் உங்களுடைய எல்லாப் பின்னடைவுகளுக்கும் பிற்போக்குத் தனத்திற்கும் பிராமிண சமுதாய கட்டமைப்புத்தான் காரணம் என நம்ப வைத்திருந்தார்கள். இந்தப் பிரச்சாரத்தில் அவர்கள் வெற்றியடைந் திருந்தார்கள்.

இந்த இயக்கங்கள் மக்களிடையே சிறந்த

வரவேற்பைப் பெற்றுக் கொண்டே இருந்தது. மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வுகள், மக்களிடையே இந்த இயக்கங்களுக்குக் கிடைத்த வெற்றி இவை பிராமணர்களை மிகவும் கவலையடையச் செய்தது.

அவர்கள் பாமர இந்துக்களின் (மக்களின்) கவனத்தை இந்த இயக்கங்களிடமிருந்து திசை திருப்பிட வழிகளைத் தேடிக் கொண்டே இருந்தார்கள். இதில் மிகவும் அதிகமான முயற்சி களைக் கொட்டினார்கள்.

இதில் இந்து முஸ்லிம் பிரச்சனை அவர்களுக்கு மிகவும் எளிதான தீர்வாகத் தென்பட்டது. இதனால் வகுப்பு வாதத்தை வளர்க்க தங்களால் இயன்றதையெல்லாம் செய்தார்கள். அதற்காகக் கடினமாகஉழைத்தார்கள். இதைச்செய்யும்போது தாங்கள் இதில் மறைத்து வைத்திருக்கும் சதியை மக்கள் கண்டு கொள்ளாமலிருக்க என்னென்ன செய்ய வேண்டும் என்பதையும் கவனமாக ஆய்வு செய்தார்கள். இதில் பாமர மக்களைச் சதா சர்வ காலமும் வகுப்பு வாதத்தில் மூழ்கிடச் செய்வதே அவர்களுக்கு சிறந்த உபாயமாகப்பட்டது. இதனால் அடிக்கடி வகுப்புக் கலவரங்களை உருவாக்கி அதில் பாமர இந்துக்களை ஈடுபடுத் திக் கொண்டே இருந்தார்கள். இதனால் காலப் போக்கில் வகுப்புக் கலவரங்கள் இடைவிடாமல் நடந்துகொண்டே இருந்தன.

இந்தச் சதியின் வழி அவர்கள் முதலில் சமுதாயங்களைத் தங்கள் கைகளில் வைத்துக் கொள்வதற்கும், கலாச்சார ரீதியாக தாங்கள் சொல்வதே கலாச்சாரம் என்றும், மதம், மதச் சடங்குகள் இவற்றிற்கு மக்கள் தங்களையே சார்ந்திருக்க வேண்டும் என்றே விரும்பினார்கள்.

இடைவிடாமல் நடந்த இந்து முஸ்லிம் வகுப்புக் கலவரங்கள், அவர்களுக்குப் பல நல்ல விளைவுகளை ஏற்படுத்தித் தந்தது.

இந்தக் கலவரங்கள் பாமர மக்களின் கவனத்தை திசை திருப்பியதுடன், அவை தாங்கள் விரும்பும் அரசியல் அதிகாரத்தைப் பெறவும் பயன்படும் என்ற நம்பிக்கையைத் தந்தது.

இந்தக் கலவரங்களால் பாமர இந்து இளைஞர்கள் அவர்கள் பக்கம் திரும்பினார்கள். காலப்போக்கில் அவர்களின் கைத் தடிகளாகப் பயன்பட்டார்கள். அதில் பெருமைக் கொண்டார்கள். இதில் எல்லா ஜாதியைச் சார்ந்தவர்களும், ஒன்று போல் அவர்களைச் சுற்றி வந்தார்கள்.



**எஸ்.எம். முஷ்ரிஃப், IPS**
முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல்,
மகாராஷ்டிரா காவல்துறை

இந்நிலையில் அரசியல் அதிகாரத் தைப் பெற முடியும் என்ற நம்பிக்கை மிகவும் அழுத்தமானது.

அரசியல் அதிகாரத்தை மனதில் வைத்துக்கொண்டு, அவர்கள் வகுப்புவாதத் தீயை முடிந்தமட்டும் மூட்டிவிட்டார்கள். இதற்காக பாபரி மஸ்ஜித் (காசி–மதுரா பள்ளி வாசல்கள்) இது போன்றவற்றைப் பயன்படுத்தினார்கள், தீவிரப்படுத்தினார்கள்.

இறுதியாக அவர்கள் மத்தியில் அதிகாரத்தைப் பிடிப்பதில் வெற்றி பெற்றுவிட்டார்கள். அதேபோல் இன்னும் பல மாநிலங்களிலும், அதிகாரத்தைப் பிடித்துக் கொண்டார்கள். இத்தனையும் பாபரி மஸ்ஜித்–ஐ இடித்தபின் அவர்களுக்குச் சாத்தியமானது. இவற்றை இந்தியா விடுதலையடைந்த பின் பிராமிணிஸ்ட் டுகள் நிறைவேற்றிய வகுப்புவாத அரசியலின் விளைவுகள் எனலாம்.

பாபரி மஸ்ஜித்–ஐ இடித்தபின் ஒரு பொது கருத்து நிலவியது. அது முஸ்லிம்கள் அதிகமாக ஆத்திரமடைந்திருக்கின்றார்கள். இதனால் அவர்கள், ஒரு வகையில் அல்லது இன்னொரு வகையில், பழி தீர்ப்பார்கள் என்பதே அது.

மும்பையில் 1993–இல் கோவையில் 1998–இல் நடந்த குண்டு வெடிப்புகள் இந்தப் பொது கருத்தை உறுதிப்படுத்தின. இந்த இரண்டு குண்டுவெடிப்புகளுக்குப் பின்னாலும் ஒரு பெரிய சதி உண்டு, இவற்றில் பயன்படுத்தப்பட்ட வர்கள் பல கிரிமினல் கும்பல்களைச் சார்ந்த வர்கள். இந்த குண்டு வெடிப்புகளில் எந்தத் தீவிரவாத அமைப்புகளும் ஈடுபடவில்லை. ஆனால் பொதுமக்கள் இவையெல்லாம் தொடக்கம் தான் என்றே எடுத்துக் கொண்டார்கள். பொதுமக்கள் இப்படி எடுத்துக்


vaigarai velicham official

கொண்டதற்கான காரணங்கள் இல்லாமல் இல்லை.

மக்களின் இந்த மன ஓட்டத்தை சில பிராமிண அமைப்புகளும், மத்திய உளவுத் துறையும், கடவுள் தங்களுக்கு அனுப்பிய பொன்னான வாய்ப்பாக எடுத்துக் கொண்டார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அவர்களை மிகப்பெரிய பேய்களாகக் காட்டிடத் தலைப் பட்டார்கள். பின்னர் அவர்களே குண்டுவெடிப்பு களை நடத்தினார்கள். பழியை முஸ்லிம்களின் மேல் போட்டார்கள்.

பின்னர் 2002–இல் குஜராத் இனப் படுகொலை (அன்றைய முதலமைச்சர் மோடியின் தலைமையில் இது நடந்தது) இதில் குழந்தைகள், பெண்கள், வயோதிகர்கள் என 2000 முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானோர் காயம் பட்டார்கள், லட்சக்கணக்கானோர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். வீடற்றவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

குஜராத் இனப்படுகொலைகள் விதர்ப்பமாகச் சிந்திக்கும் பிராமிணிஸ்ட்டுகளுக்கும் மத்திய உளவுத் துறைக்கும் மிகுந்த மன தைரியத்தைத் தந்தது. அது நாம் என்ன செய்தாலும் நம்மீது எந்த நடவடிக்கையும் இருக்காது. ஏன் நம்மைச் சந்தேகப்படக்கூட மாட்டார்கள் என்பது தெளிவானது. இதனால் நாம் குண்டு வெடிப்பு நடத்தலாம். பழியை முஸ்லிம்கள் மேல் போடலாம் என்ற நெஞ்சுரத்தைப் பெற்றார்கள். 'Blast and blame Muslims' “குண்டு வைப்போம், முஸ்லிம்களைக்குற்றம் சாட்டுவோம்” என்பது ஒரு நிரந்தரக் கொள்கையாகவே மாறிப்போனது.

அரசியல் இதனிடையே பிரிதோர் இயக்கம் தோன்றியது, அதன் முக்கிய நோக்கம் இந்திய நிர்ணயச் சட்டத்தை உடைத் தெறிவதாகும். இது ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பிலுள்ள பயங்கரவாத பிராமணர்களால் தொடங்கப் பெற்றது. இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தை உடைத்தெறிந்து விட்டு, இந்த ஜனநாயக முறையை சீர்குலைப்பது, இந்தியாவை ஆரியவர்த் இந்து ராஷ்ட்டிரமாக மாற்றுவது அதன் இறுதி இலக்கு. இந்த அமைப்புதான் அபிநவ்பாரத். இந்த ஆரியவர்த் இந்து ராஷ்ட்டிரம், வேதங்களையும், ஸ்மிருதிகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுவதாகும்.

இதில் முக்கிய மூளையாகச் செயல்பட்டவர்கள் இணை இராணுவ அதிகாரியாக நமது இந்திய இராணுவத்தில் பணியாற்றிய கலோனல் பிரசாத் புரோகித், தயானந்த் பாண்டே இவர் ஜம்மு பீத் என்ற ஆசிரமத்தின் தலைமை மகந்த்– புஜாரி. இணை இராணுவ தளபதி பிரசாத் புரோகித் நமது இராணுவ கூடங்களிலிருந்து ஆர்.டி.எக்ஸ். வகை, வெடி பொருட்களை திருடி பிராமிண அமைப்புகளில் உள்ள தீவிரவாதிகளுக்கு கொடுப்பார். அத்தோடு அவர்களுக்குக் குண்டுகளைத் தயாரிப்பது குறித்த குறுகிய காலப் பயிற்சிகளையும் அளிப்பார்.

(ஆதாரம் – 2008 ஆம் ஆண்டில் மாலேகான் (மகாராஷ்ட்ரா) குண்டுவெடிப்பில் பதிவு செய்யப்பட்டக் குற்றப்பத்திரிகை. (Maharashtra ATS C.R. No. 18/2008) Filed in Mcoca Courtt in Ranuary 2009)

## ஹேமந்த் கர்கரேயின் புலனாய்வுக்குப் பின்

'பிற்றை நாள்களில் நடந்த நிகழ்வுகள், 2003 ஆம் ஆண்டு முதல், 2008 ஆம் ஆண்டு வரை நடந்த குண்டுவெடிப்புகள் அனைத்தும், இந்தச் சதியின் வெளிப்பாடுகள் என்பதை உறுதி செய்தன.

மத்திய உளவுத்துறை (IB Intelligence Bureau) இந்தப் பிராமிணிஸ்ட், பயரங்கரவாதிகளுக்கு எல்லாவகையிலும் நடைமுறை உதவிகளை வழங்கிற்று. இந்த மத்திய உளவுத்துறை இதுபோன்ற சதிகளை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்வதற்காகவே இருக்கின்றது. ஆனால், அது, அபிநவ் பாரத், ஆர்.எஸ்.எஸ். இவற்றின் கிளை அமைப்பு இவையெல்லாம் தீட்டிய சதித் திட்டங்களை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லிடவில்லை. முற்றாக மறைத்துவிட்டது.

மாறாக, மத்திய உளவுத்துறை, இந்தக் குண்டுவெடிப்புகள் நடந்து முடிந்தவுடன் முஸ்லிம் அமைப்புகளின் பெயர்களை உடனேயே ஊடகங்களுக்குத் தந்துவிடும். அந்த முஸ்லிம் அமைப்புகளின் பெயர்கள், ஜெய்சே முஹம்மத் – ஹாஜி, ஹரக்கத்துல் ஜிஹாத், லஷ்கர் இ–தொய்பா. சிமி – இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம் என்பனவாக அமையும். இப்படி இஸ்லாமிய அமைப்புகளின்

பெயர்களைச் சொன்ன பின்பு, மாநிலங்களில் செயல்படும், தீவிரவாதத் தடுப்பு சிறப்புப் படையின் வழி சில அப்பாவி முஸ்லிம்களைக் கைது செய்து விடுவார்கள். இந்த மாநில தீவிரவாதத் தடுப்பு சிறப்புப் படைகள், மத்திய உளவுத் துறையின் எடுபிடிகளே அல்லாமல் வேறில்லை.

ஊடகங்களிலிருக்கும் இந்த பிராமணிஸ்ட்டு விஷமிகள், காவல்துறை தரும் பொய்ச் செய்திகளுக்கு மிகப்பெரிய விளம்பரங்களைத் தருவார்கள்.

சில மாதங்களுக்குப் பின்னால், ஒரு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும். இந்தக் குற்ற ப்பத்திரிகை, அந்த முஸ்லிம்களைச் சித்திரவதைச் செய்து பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப் படையில் இருக்கும். அதேபோல் போலியாக உருவாக்கப்பட்ட பஞ்ச நாமாக்களின் வழியு மிருக்கும்.

சில மாதங்கள் கழித்து, இன்னொரு குண்டுவெடிப்பு நடக்கும். இதே முறைமைப் பின்பற்றப்படும். இப்படி தொடர் குண்டு வெடிப்புகளின் வழி ஒரு சூழலை உருவாக்கி னார்கள். அதன்வழி எல்லாக் குண்டுவெடிப்பு களையும், முஸ்லிம்களே செய்கின்றார்கள் என்று மக்களை நம்ப வைத்துவிட்டார்கள். எந்த அளவுக்கு என்றால், முஸ்லிம்களில் சிலரே நம்மவர்களில் சிலர்தான் இஸ்லாத்தை தவறாகப் புரிந்துகொண்டு, இப்படிக் குண்டு வெடிப்புகளை நடத்துகின்றார்கள் என எடுத்துக்கொண்டார்கள். இல்லை நம்பினார்கள்.


காலப்போக்கில் சில முஸ்லிம் அமைப்புகள் இஸ்லாத்தில் இதுபோன்ற வன்முறைகளுக்கு வழி இல்லை. சில வழிகெட்டுப் போன முஸ்லிம்கள்தாம் இதைச் செய்கின்றார்கள் எனப் பேசிடத் தொடங்கினார்கள். அறிக்கை களை அடிக்கடி விட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த அறிவிப்புகளால் இந்தக் குண்டுவெடிப்பு களை நடத்திய மத்திய உளவுத்துறை, ஆர்.எஸ்.எஸ்., அபிநவ் பாரத் இவற்றிலுள்ள பிராமிணிஸ்ட்டுகள் மிகவும் மகிழ்ச்சியடைந் தார்கள்.

தங்கள் திட்டங்களின் வெற்றி குறித்து 'சபாஷ்' போட்டுக் கொண்டார்கள். அவர்களுடைய இறுதி இலக்கு, குழப்பங் களையும் கொந்தளிப்பு களையும் உருவாக்குவதாகவும். அவற்றை மையமாகக் கொண்டு இருக்கின்ற ஜனநாயக அமைப்பை சீர் குலைப்பதாகும். அதன்பின்னர் அவர்கள் நினைக்கும் ஆரியவர்த் இந்து ராஷ்ட்ராவை நிலைநாட்டுவதாகும். இன்னும் சில குண்டு வெடிப்புகள் நடந்திருக்குமேயா னால், அவர்களின் இலக்கு எப்போதோ கைக்கூடி இருக்கும். ஆனால், அது நடக்க வில்லை.

ஹேமந்த் கர்கரே (மராட்டிய மாநில தீவிரவாதத் தடுப்புக் காவல் சிறப்புப் படையின் தலைவர்) வந்தார். இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகத்தைக் கண்டெடுத்து உலகுக்கு அறிவித்தார்.

ஜூன் 2008 –ஆம் ஆண்டு ஹேமந்த் கர்கரே மராட்டிய மாநிலத்தின் தீவிரவாதத் தடுப்புப் படையின் தலைவராகப் பொறுப்பேற்றார். செப்டம்பர் திங்கள் 2008ஆம் ஆண்டு மாலேகான் குண்டுவெடிப்பு நடந்தது.

**- தொடரும்**






ஆய்வுக் கட்டுரை

தொடர்

# தமிழகத் துறைமுகங்களில் கப்பலோட்டிய கீழக்கரை முஸ்லிம்கள்





டாக்டர். **ஜெ.ராஜா முகமது**
உதவி இயக்குநர், (ஓய்வு)
தமிழ்நாடு அருங்காட்சியகத்துறை


**சேது** நாட்டுத் துறைமுகங்களுக்குள் சங்க காலத்திலிருந்து சமீபகாலம் வரை கடல் கடந்த நாட்டு வாணிபத்தில் சிறந்து விளங்கியது கீழக்கரை ஆகும். கடல் கடந்த நாடுகளுடனான வாணிபம் மட்டுமின்றி, முத்துக் குளித்தல், சங்கு குளித்தல், உப்புக் காய்ச்சுதல், போன்ற அனைத்து கடல்சார்ந்த தொழில்களிலும், கீழக்கரை சிறப்புடன் விளங்கியது. கீழக்கரையின் நிலவியல் அமைப்பு, இப்பகுதி கடலின் ஆழம் ஆகியன கீழக்கரையின் கடல் வாணிப நடவடிக் கைகளுக்கு சாதகமாக இருந்தது. கீழக்கரையை "கொற்கை" என சில ஆசிரியர்கள் எழுதி இருப்பது பிழையாகும். (கொற்கை என்பது திருநெல்வேலி மாவட்டம் தாமிரபரணி ஆற்று முகத்து வாரத்தில் இருந்த பாண்டிநாட்டுத் துறைமுகமாகும்)

மன்னார் வளைகுடாப் பகுதியில் பெருமளவில் நல்ல லாபத்துடன் முத்துக் குளித்தல் நடைபெற்றதை பெரி புளூசு (கி.பி.80) தாலமி (கி.பி.130) போன்ற நூல்களின் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. இதில் கீழக்கரைப் பகுதியும் அடங்கும். இப்பகுதியில் கிடைத்த சிறந்த முத்துக்களை வாங்கிச் செல்ல அரேபிய நாட்டு வணிகர்கள் இங்கு வந்து சென்றனர். இஸ்லாம் தோன்றிய பின் அரேபியரின் குடியிருப்புக்களோடு தமிழ் முஸ்லிம் குடியிருப்புக்களும் கீழக்கரைத் துறைமுகப் பகுதியில் தோன்றின. இப்பகுதியில் கடல் வாணிபம் செழித் தோங்கியது. இடைக்கால பாண்டிய மன்னர் களின் ஆட்சியில் கீழக்கரையிலிருந்து மேற்கு கடற்கரைத் துறைமுகங்கள் மற்றும் நாகப் பட்டினம், அதிராம் பட்டினம், முத்துப் பேட்டை, தென்கிழக்கு ஆசிய நாடுகள், இலங்கை மற்றும் அரேபிய நாட்டுத் துறைமுகங்களுக்கும் வாணிபம் நடைபெற்று வந்தது. இதில் அரேபிய தமிழக முஸ்லிம் வணிகர் ஈடுபட்டிருந்த செய்தி தெரிய வருகிறது. கல்வெட்டுக்களில், 'நினைத்ததை முடித்தான்பட்டினம்" (1545) கீழக்கரை என இவ்வூர் அழைக்கப்படுகிறது. 1531ஆம் ஆண்டு கல்வெட்டொன்று இத்துறைமுகத்தில் பதினென் விஷயத்தார் என்னும் வணிகக் குழுவினர் தங்கி வாணிபம் செய்து வந்ததைக் குறிப்பிடுகிறது.

இதில் முஸ்லிம் வணிகர்களும் அடங்குவர். 13-16ஆம் நூற்றாண்டுகளில் சீனாவுடன்

வாணிபம் நடை பெற்று வந்ததற்கான சான்றுகள் இப்பகுதியில் கிடைத்துள்ளன. ஆண்ட பாண்டிய மன்னர்களிடமும், பின்னர் வந்த நாயக்கர், வேநாட்டு மன்னர், பரமக்குடி, தும்பிச்சி நாயக்கர் ஆகியோரிடமும் கீழக்கரை முஸ்லிம்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இதன் காரணமாக இப்பகுதியில் முத்துக்குளிப்பு முஸ்லிம் குத்தகைதாரர் ஒருவரின் பொறுப்பில் விடப்பட்டு இருந்தது. போர்த்துகீசியரின் பதிவேடுகளில் இவர் 'நயினார்' என்று குறிக் கப்படுகிறார். பெயர் குறிக்கப்படவில்லை. பொதுவாக ஐரோப்பியரின் வணிகப் பதிவேடு களில் மரக்காயர்கள் என்று குறிக்கப்படுகிறது. பெரும்பாலும் தனிமனிதர்களின் பெயர்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

1522ம் ஆண்டு வாக்கில் போர்த் துகீசியர் கீழக்கரைப்பகுதிக்கு வந்து முத்துக்குளித்தலில் உரிமை கொண்டாடினர். கீழக்கரைத் துறைமுகத்தில் வாணிபம் செய்து வந்த முஸ்லிம் களை அச்சுறுத்தி தங்களது அனுமதிச் சீட்டு (கர்த்தாஸ்) பெற்ற பின்பே முஸ்லிம்களின் கப்பல்கள் செலுத்தப்பட வேண்டுமெனவும் நிர்ப்பந்தப்படுத்தினர். முஸ்லிம் வணிகர்கள் போர்ச்சு கீசியரின் அச்சுறுத்தல்களுக்கு இணங்க வேண்டியதாயிற்று.

முத்துக்குளிப்புக் குத்தகையாளரான நயினார் ஆண்டுக்கு 3000 பர்தோஸ் (போர்ச்சுகீஸிய பணம்) போர்ச்சுகீசியருக்கு செலுத்தி தனது முத்துக்குளிப்பு நடவடிக்கையை தக்க வைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. மேலும், கீழக்கரை துறைமுகத்தில் 50 போர்ச்சுகீசிய போர் வீரர்களை நிறுத்தி வைத்தனர். கீழக்கரையை மையமாகக் கொண்டு இலங்கையுடன் வாணி பத்தைப் பெருக்கிக் கொள்ளத் திட்டமிட்ட போர்ச்சுகீசியர் கீழக்கரை முஸ்லிம் வணிகர் களின் கடல் வாணிப நடவடிக்கையில் குறுக்கிட்டனர்.

முஸ்லிம்களின் கப்பல்கள் கீழக்கரை யிலிருந்து அரிசி, துணி வகைகளை ஏற்றிச் சென்று இலங்கையிலிருந்து பாக்கு மற்றும் வாசனைதிரவியங்களைக் கொண்டு வந்தன. இதில் முஸ்லிம் வணிகர்களுக்கு நல்ல வருவாய் கிடைத்தது. இதைப் புரிந்து போர்த்துக் கீசியர் முஸ்லிம்களின் வணிக நடவடிக்கைகளை தங்களது பலத்தினால் ஒடுக்கினர்.

மேலும், முத்துக்குளிப்பு, சங்குக் குளிப்பு தொழில்களையும் கைப்பற்றிக் கொண்டனர். இவ்வாறாக போர்ச்சுகீசியரின் வருகை நூல் கீழக்கரை துறைமுகத்தில் முஸ்லிம்களின் வாணிபமும், கடல் சார்ந்த தொழில்களும் பெரிதும் பாதிக்கப்பட்ட போர்ச்சுகீசியர் மட்டுமின்றி தொடர்ந்து தென்னிந்திய கடற் பகுதிக்கு வந்து ஆதிக்கம் செலுத்திய டச்சுக் காரர்கள், ஆங்கிலேயர் ஆகியோரது அச்சுறுத்த லாலும் முஸ்லிம்களின் வாணிபம் பாதிக்கப் பட்டது. 17-18ம் நூற்றாண்டுகளில் டச்சுக் காரர்கள் இப்பகுதியில் கடல் சார்ந்த தொழில்களில் இக்கால கட்டத்தில் கீழக்கரைத் துறைமுகத்திலிருந்து வாணிபம் செய்து வந்த முஸ்லிம்களைக் குறித்த சில அரிய குறிப்புக்கள் நமக்குக் கிடைக்கின்றன.

### பெரியதம்பி மரக்காயர் குடும்பம்

போர்ச்சுகீசியர் மற்றும் டச்சுக்காரர்களின் பொருளாதாரப் போட்டிக்கு ஈடு கொடுக்க முடியாத மரக்காயர் பலரது கப்பல்கள் கரையொதுங்கி விட்டிருந்த நேரத்தில், பலம் பொருந்திய ஒரு வணிக நிறுவனத்தையே கதிகலங்க வைத்தது கீழக்கரை பெரிய தம்பி மரக்காயர் குடும்பம். தமிழகத்து முஸ்லிம்களின் கடல் வாணிப வரலாற்றில் பெரியதம்பி மரக்காயர் குடும்பம் போன்று பிரிதொரு செல்வாக்கு மிக்கதொரு வணிகக் குடும்பம் இவர்களது காலத்திற்கு முன்னும், பின்னும் நமக்குத் தென்படவில்லை.

சீதக்காதி எனப் போற்றப்படும் கீழக்கரை பெரு வணிகர் இக்குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

17-ம் நூற்றாண்டில் சேதுபதி மன்னர்கள் மிகப்பெரிய அரசியல் சக்தியாக உருப்பெற்றிருந் தனர். சேது நாட்டுத் துறைமுகங்களிலிருந்து கடல் கடந்த நாடுகளுடனான நடைபெற்று வந்த வாணிபம் நிறைவாக நிலையில் மதுரை நாயக்கர் போர்ச்சுக் கீசியருக்கு ஆதரவு அளிக்க, சேதுபதி டச்சுக்காரரின் அணியில் இருந்தார். அரசியல் குழப்பங்களைப் பயன்படுத்திக் கொண்ட டச்சுக்காரர்கள் சேதுபதியுடன் பல ஒப்பந்தங்கள் செய்து கொண்டனர். இந்த வணிக ஒப்பந்தங்கள் முஸ்லிம் வணிகரின் நலனுக்கு எதிராக அமைந்தன. ஒப்பந்த ஷரத்


vaigarai velicham official

துக்களை மீறி சேதுபதி மன்னர் மரக்காயர் வணிகர்களுக்கு பல்லாற்றாறும் உதவி செய்து வந்தார். மேலும் பெரியதம்பி மரக்காயரின் குடும்பத்தினரை அரசு பொறுப்புக்களில் அமர்த்தினார். கீழக்கரை பகுதியின் வணிக, வரி வசூல் பொறுப்பு பெரியதம்பி மரக்காயர் குடும்பத்திற்கு வழங்கப்பட்டது.

மேலும் மரக்காயர் அனைவரது வாணிப நடவடிக்கைகளுக்கும் அரசின் ஆதரவு கிட்டியது. இத்தகையதொரு அரசியல் ஆதரவு தமிழக முஸ்லிம்களுக்கோ, அவர்களது வணிக நடவடிக்கைகளுக்கோ தமிழகத்தில் அப்போது ஆட்சியிலிருந்த வேறு எந்த மன்னரிடமும் கிடைக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. அரசியல் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக சேதுபதி மன்னர்கள் டச்சுக்காரருடன் பல ஒப்பந்தங்கள் செய்து கொண்டனர். ஆனால், இந்த ஒப்பந்தங்களில் பெரியதம்பி மரக்காயர் குடும்பம் குறித்த செய்திகள் நிறைய ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது சிறப்பானதொரு செய்தியாகும்.

பெரியதம்பி மரக்காயர் என்பது ஒரு தனிநபரின் பெயர் அல்ல. கீழக்கரையை சேர்ந்ததொரு முஸ்லிம் வணிகக் குடும்பத்தில் தொடர்ச்சியாக பலருக்கு இந்தப் பட்டப் பெயர் இருந்துள்ளதை டச்சுப் பதிவேடுகள் மூலம் அறிகிறோம். வள்ளல் சீதக்காதியின் வழி வந்தோர் கடந்த இரண்டு தலை முறைக்கு முன்புவரை குடும்பத்தில் மூத்தவருக்கு பட்டத்து பெரியதம்பி என்ற விருதுப் பெயரை வைத்துக் கொண்டனர் என்பது கள ஆய்வில் தெரிய வருகிறது.

1682ஆம் ஆண்டு முதல் 1715ஆம் ஆண்டு வரையிலான காலவரையறைக்குட்பட்ட டச்சுப் பதிவேடுகளில் 'பெரியதம்பி மரக்காயர்" என மூன்று பேர் தொடர்ச்சியாகக் குறிப்பிடப் படுகின்றனர். இவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இப்பகுதியில் அரசியல் பொருளாதார விஷயங் களில் பெரும் பங்கு வகித்ததை டச்சுப் பதிவேடுகள் சிறப்பித்துப் பேசுகின்றன. முதலாமவர் 169ல் இறந்து விடுகிறார். அடுத்தவர் அடுத்த பத்து ஆண்டுகளில் இறந்து விடுகிறார். தொடர்ந்து மூன்றாமவர் குறிப்பிடு கிறார். இவர்களுள் இரண்டாடாமவரே 'வள்ளல் சீதக்காதி' என்னும் (ஷேக் அப்துல் காதிறு -செய்தக்காதிறு) பெரியதம்பி ஆவார்.


கீழக்கரை பெரியதம்பி மரக்காயர் குடும்பம் சேது நாட்டு கடல் வாணிபத்திலும் அரசியலிலும் முதன்மை பெற்று விளங்கியதை ஆங்கிலேயர் மற்றும் டச்சுக்காரர்க ளிள் வணிகப் பதிவேடுகள் எடுத்து ரைக்கின்றன. முதல் (மூத்த) பெரியதம்பி மரக்காயர் பெயர் 1682ஆம் ஆண்டு முதல் டச்சு மற்றும் ஆங்கிலேயரின் பதிவேடுகளில் இடம் பெறுகிறது. கீழக்கரையில் பெரும் கப்பல் வணிகர் எனவும், கீழக்கரைப் பகுதியில் ஆங்கிலேயரின் வணிக நடவடிக்கைகளுக்கு சேதுபதி மன்னரிடம் அனுமதி பெற்றுத் தந்தவர் எனவும், கீழக்கரையில் கப்பல் கட்டும் தளம் வைத்திருந்தவர் எனவும் பெரியதம்பி மரக்கா யரை (பெத்ததம்பே மர்க்கான்) ஆங்கிலேயரின் பதிவேடுகள் குறிப்பிடுகின்றன.

விஜயரகுநாத பெரியதம்பி என்று அழைக்கப் பட்ட இந்த மரக் காயர் சேதுபதி மன்னர் ஆட்சிக்குட்பட்டிருந்த கடற்கரைப் பகுதியின் வரி வசூல் அலுவலர் எனவும், இப்பகுதியின் பெரும் கப்பல் வணிகர் எனவும், டச்சுக்காரர் களின் பதிவேடுகள் அறிமுகப்படுத்துகின்றன. ஐரோப்பியரின் பதிவேடுகளில் முதலாவதாக குறிக்கப்படும் இந்த பெரிய தம்பி மரக்காயர், இரண்டாவதாக குறிக்கப்படும் பெரியதம்பி யான ஷேக் அப்துல் காதிறு என்னும் செய்தக் காதிறு மரக்காயர் - வள்ளல் சீதக்காதியின் சகோதரர் என டச்சுப் பதிவேடுகள் தெரிவிக் கின்றன. ஆனால் சமகால இலக்கியங்கள், பிற் கால கல்வெட்டுகள், ஆவணங்கள் ஆகியவற்றின் குறிப்புகளைக்கொண்டு முதலாமவர் சீதக்காதியின் தந்தை என சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எவ்வாறாயினும் இதுகுறித்து மேலும் பல ஆவணங்களை ஆய்வு செய்யும் பணி நமது கவனத்தில் இருந்து வருகிறது.

பெரியதம்பி மரக்காயர் (முதல்) பல கப்பல்களுக்கு சொந்தக்காரராக விளங்கினார். கீழக்கரையிலிருந்து தனது கப்பல்களின் மூலம் இலங்கை, பாரசீக வளைகுடா துறைமுகங்கள், தென்னிந்தியாவின் ஏனைய துறைமுகங்கள் ஆகியவற்றிலும் வாணிபம் செய்து வந்தார்.

- அடுத்த இதழில்...

# காஸா வெற்றி!
## ட்யூப்பில் நமது நேயர்களின் கருத்து




**Comments**

ஸலாமுஅலைக்கும்

4

@mohamedmahroof8280 • 1 day ago
ஐயா அவர்களே ஹமாஸ் ஆயுதங்களை கொண்டு போராடுகிறார்கள் நீங்கள் பேனாவை கொண்டு போராடுகிறீர்கள் உங்கள் ஆர்வத்துக்கும் கவலைகளுக்கும் எங்களின் நன்றிகள் அல்லாஹ் சுபஹானல்லாஹ் உங்கள் ஈமானை மேலும் மேலும் பலப்படுத்தவும் امين امين امين يا رب العالمين

6

@AhamedFaleel-q4j • 3 days ago
போர் தொடக்கம் முதல்இறுதிவரை தெளிவாக உண்மைச்செய்தியை நமக்கு வழங்கியதையிற்று நன்றி ஐஸாமுக்குமுல்லாஹ் ஹைரன்.மேலும் நீண்ட ஆயுளையும் நல்லாறோக்கியத்தையும் வேண்டி விடைபெறுகிறேன்.sri lanka

9

@MohamedRafi-bp8pg • 4 days ago
அஸ்ஸலாமு அலைக்கும் 733. நாட்களாக தொடர்ந்து கா மற்றும் போர் சம்மந்தமான செய்திகளை வழங்கிய உங்களுக்கும் அல்லாஹநற்கிருபை செய்வானாக. மேலும் இஸ்ரேலின் உண்மையான இழப்புகளை வருங்கலாங்களில் ஆய்வு செய்து தருமாறு கோருகின்றோம்

2

@mohamedlebbemohamedazhar2872 • 4 days ago
ஒவ்வொரு நாளும் உங்கள் செய்திகளை எதிர்பார்த்து காத்துக் கொண்டு இருக்கிறேன்.

5

@bmz8018 • 1 day ago
இந்த வெற்றியில் தங்களுக்கும் மகத்தான பங்குண்டு.எல்லாம்வல்ல அல்லாஹ் தங்களுக்கு எல்லாவளமும்,நலமும் பெற்றுவாழ அருள்புரிவானாக.

6

@Rih_lateefa1 • 1 day ago
அல்ஹம்துலில்லாஹ்🤍
இவ்வளவு பொறுமையும் சகிப்புதன்மையும் கொண்ட மக்களிடம் படுதோல்வி அடைவதை தவிர வேறு வழியில்லை. வெற்றி யாருக்கு என்பது அரபுகளுக்கு புரிந்திருக்கும்.
அல்லாஹ் தஆலா பாலஸ்தீன காசா மக்களின் இழப்பீட்டை ஈருலகிலும் ஈடு செய்ய போதுமானவன்🤍
இந்த வெற்றி செய்தியை உண்மை தன்மையுடன் எங்களிடம் பகிர்ந்து வரும் உங்களுக்கும் உங்கள் டீமிற்கும் அல்லாஹ் தஆலா மென்மேலும் அருள்பரிவானாக🎉

3

@mohamedlebbemohamedazhar2872 • 4 days ago
ஒவ்வொரு நாளும் உங்கள் செய்திகளை எதிர்பார்த்து காத்துக் கொண்டு இருக்கிறேன்.


5


@UWAISBAWA • 3 days ago
இத்தனை நாட்களாக பலஸ்தீன் சிறந்த செய்திகளை தொகுத்து வழங்கியதற்காக எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்


1





vaigarai velicham official



@mohamedlebbemohamedazhar2872 • 4 days ago
ஒவ்வொரு நாளும் உங்கள் செய்திகளை எதிர்பார்த்து காத்துக் கொண்டு இருக்கிறேன்.
5


@AbdulSalam-xs6rp • 4 days ago (edited)
இரண்டாண்டுகளாக தொடர்ச்சியாக செய்திகளைத் தொகுத்து உண்மை நிலவரங்களை வெளிச்சமிட்ட உங்களுக்கு மிக்க நன்றி.


@khajamohideenpichaimohamed8023 • 3 days ago
அஸ்ஸலாமு அலைக்கும் பாலஸ்தீனம் போர்நிருத்தத்தை நோக்கிசெல்வதாக தாங்கள்தான் ஒருவாரத்திற்குமுண்பிருந்தே விளக்கமாக தெரியபடுத்திவந்தீர்ள் உங்கள்வாக்கைஅல்லாஹ் கபூல்செய்துவிட்டான் மிக்க மகிழ்ச்சி எங்களுக்கு நம்பிக்கதந்தீர்கள் அல்லாஹ் தாங்களுக்கு பூரண உடல்நலத்தை தந்து உங்களின் பனிதொடரதுவாசெய்கிறோம்
4


@khajamohideenpichaimohamed8023 • 3 days ago
அஸ்ஸலாமு அலைக்கும் பாலஸ்தீனம் போர்நிருத்தத்தை நோக்கிசெல்வதாக தாங்கள்தான் ஒருவாரத்திற்குமுண்பிருந்தே விளக்கமாக தெரியபடுத்திவந்தீர்ள் உங்கள்வாக்கைஅல்லாஹ் கபூல்செய்துவிட்டான் மிக்க மகிழ்ச்சி எங்களுக்கு நம்பிக்கதந்தீர்கள் அல்லாஹ் தாங்களுக்கு பூரண உடல்நலத்தை தந்து உங்களின் பனிதொடரதுவாசெய்கிறோம்
4


@AbdulSalam-xs6rp • 4 days ago (edited)
இரண்டாண்டுகளாக தொடர்ச்சியாக செய்திகளைத் தொகுத்து உண்மை நிலவரங்களை வெளிச்சமிட்ட உங்களுக்கு மிக்க நன்றி.
30


@AhamedFaleel-q4j • 3 days ago
போர் தொடக்கம் முதல்இறுதிவரை தெளிவாக உண்மைச்செய்தியை நமக்கு வழங்கியதையிற்று நன்றி ஜஸாமுக்குமுல்லாஹ் ஹைரன்.மேலும் நீண்ட ஆயுளையும் நல்லாறோக்கியத்தையும் வேண்டி விடைபெறுகிறேன்.sri lanka
9





## நூல் அன்பளிப்பு

கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில் கடந்த 19-9-2025 அன்று முஹம்மது அவர்களின் ஸீரத்துன் நபி மாநாடு நடைபெற்றது.
இதில் கும்பகோணம் சுவாமி அவர்களுக்கும், பரங்கிப்பேட்டை கவுன்சிலர் அருள்முருகன் அவர்களுக்கும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம், இஸ்லாமிய நாகரிகம், பிராமணர்கள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் என்ற நூல்கள் வழங்கப்பட்டது.



# ஹுதைபிய்யா (ஹஜ்ரி-6, துல்கஅதா)

ஜூலை மாத தொடர்ச்சி...

**அபூஜந்தல் மீது கொடுமை:**

இவ்வாறு ஒப்பந்தம் எழுதிக் கொண்டிருக்கும் போது சுஹைல் இப்னு அம்ரின் மகன் (ஒப்பந்தம் செய்கிற குறைஷிகளின் பிரதிநிதி) அபூஜந்தல்(ரழி) மக்காவின் கீழ்ப்புறமாக வெளியேறி கையில் விலங்குகளுடன் முஸ்லிம் களுக்கு மத்தியில் வந்து விழுந்தார். அவரைப் பார்த்த தந்தை சுஹைல் நபிகளாரை நோக்கி "இது நான் உம்மிடம் நிறைவேற்றக் கோரும் முதல் விஷயமாகும். இவனை நீர் திருப்பி அனுப்பிவிட வேண்டும்' என்று கூறினார். நபியவர்கள் "நாம் இன்னும் இப்பத்திரத்தை எழுதி முடிக்கவில்லையே" என்று கூறினார்கள். அதற்கு சுஹைல், "நீர் அப்படி செய்யவில்லை என்றால் அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நான் எவ்விஷயத்திலும் உம்மிடம் உடன்படிக்கை செய்து கொள்ளமாட்டேன்" என்று பிடிவாதம் பிடித்தான். அதற்கு நபியவர்கள், "இக்கோரிக் கையை நீ எனக்கு நிறைவேற்றிக் கொடு" என்று கூறினார்கள். ஆனால், அவன் "நான் ஒருக்காலும் நிறைவேற்றித் தரமாட்டேன்' என்று முரண்டு பிடித்தான். நபியவர்கள் "இல்லை நீ எனக்கு நிறைவேற்றியே ஆகவேண்டும்" என்று கூறினார்கள். ஆனால், அவன் "அது என்னால் முடியாது" என்று முற்றிலுமாக மறுத்து விட்டான். பிறகு உரையாடல் நடந்துக்கொண்டிருக்கும் போதே தன்னிச்சையாக அபூஜந்தலின் முகத்தில் அறைந்து அவரது கழுத்தைப் பிடித்து இணை வைப்பவர்களிடம் திரும்ப ஒப்படைக்க சுஹைல் இழுத்துச் சென்றான்.

முஸ்லிம்களை விட்டு பிரியும்போது அபூஜந்தல் மிக உரத்தக் குரலில் "முஸ்லிம்களே! நான் இணைவைப்பவர்களிடமா திரும்ப கொண்டு போகப்படுகிறேன்? என் மார்க்கத்தில் என்னை அவர்கள் சோதிக்கின்றனரே!" என்று கதறினார். "அபூ ஜந்தலே! சகித்துக் கொள். நன்மையை நாடிக்கொள். உனக்கும் உன்னுடன் இருக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் விடுதலை யையும் மகிழ்ச்சியையும் நிச்சயமாக அல்லாஹ் தருவான். நாங்கள் இக்கூட்டத்தினருடன் சமாதான உடன்படிக்கை செய்திருக்கிறோம். அதை நிறைவேற்றுவது எங்கள் மீது கடமை. அவர்களும் அல்லாஹ்வின் பெயர் கூறி இந்த உடன்படிக்கையைச் செய்திருக்கிறார்கள். எனவே, நாங்கள் மோசடி செய்ய முடியாது" என்று நபியவர்கள் கூறினார்கள்.

உமர் (ரழி) அபூ ஜந்தலுக்கு அருகில் சென்று "அபூ ஜந்தலே! இவர்கள் இணை வைப்பவர்கள்! இவர்களின் உயிர் நாயின் உயிருக்கு சமமானது" என்று கூறியவராக தன் வாளின் கைப்பிடியை அபூ ஜந்தலுக்கு அருகில் கொண்டு சென்றார்கள்.

உமர் (ரழி) கூறுகிறார்கள்: அவர் என் வாளை எடுத்து தன் தந்தையைக் கொன்று விடுவார்

என நான் ஆதரவு வைத்தேன். ஆனால், அவர் தந்தையின் மீதுள்ள பாசத்தால் கொல்லாமல் விட்டுவிட்டார். ஆக, வாளுக்கு இப்போது வேளை இல்லை. இதே நிலையில் ஒப்பந்தப் பத்திரமும் எழுதி முடிக்கப்பட்டது.

**உம்ராவை முடித்துக் கொள்வது:**

நபி (ஸல்) அவர்கள் ஒப்பந்தப் பத்திரத்தை முடித்தவுடன் தம் தோழர்களிடம் எழுந்து சென்று "குர்பானி பிராணியை அறுத்து பலியிடுங்கள்" என்றார்கள். ஆனால், அவர்களில் ஒருவர்கூட அதற்கு முன் வரவில்லை. நபி (ஸல்) மூன்று முறை கூறியும் எவரும் எழுந்து செல்ல வில்லை. ஆகவே, நபி (ஸல்) தம் மனைவி உம்மு ஸலமாவிடம் சென்று மக்கள் நடந்து கொண்டதைக் கூறினரர்கள். உம்மு ஸலமா (ரழி) "அல்லாஹ்வின் தூதரே! மக்கள் குர்பானியை நிறைவேற்ற வேண்டும் என்று நீங்கள் ஆசைப் படுகிறீர்களா? நீங்கள் சென்று யாரிடமும் பேசாமல் உங்கள் ஒட்டகத்தை அறுத்துவிட்டு, தலைமுடி இறக்குபவரை அழைத்து உங்கள் தலைக்கு மொட்டை அடித்துக் கொள்ளுங்கள்" என்றார்கள். நபியவர்கள் தம் மனைவி கூறிய வாறே எழுந்து சென்று யாரிடமும் பேசாமல் தம் ஒட்டகத்தை அறுத்து விட்டு, தலைமுடி இறக்குபவரை அழைத்து மொட்டை அடித்துக் கொண்டார்கள்.

இதைப் பார்த்த மக்கள் எழுந்து தத்தமது குர்பானி பிராணிகளை அறுத்துவிட்டு ஒருவர் மற்றவருக்கு மொட்டையிட ஆரம்பித்தார்கள். ஏழு பேர்களுக்கு ஓர் ஒட்டகம். ஏழு பேர்களுக்கு ஒரு மாடு என்பதாக அறுத்தார்கள். நபியவர்கள் அபூ ஜஹ்லுக்கு சொந்தமாக இருந்த ஓர் ஆண் ஒட்டகத்தை அறுத்தார்கள். அதன் மூக்கில் வெள்ளியினாலான ஒரு வளையம் இருந்தது.

இணைவைப்பவர்களுக்குக் கோபமூட்டு வதற்காக நபி (ஸல்) இவ்வாறு செய்தார்கள். பின்பு நபி (ஸல்) அவர்கள் மொட்டையடித்துக் கொண்டவர்களுக்கு மூன்று முறை பாவமன்னிப் புடைய பிரார்த்தனை செய்தார்கள். தலை முடியை குறைத்துக் கொண்டவர்களுக்கு ஒரு முறை பிரார்த்தித்தார்கள். நோயின் காரணமாக தலைமுடியை முன்கூட்டியே சிரைத்துக் கொண்டவர்கள் அதற்குப் பரிகாரமாக நோன்பு வைத்துக் கொள்ளலாம் அல்லது தர்மம் அல்லது குர்பானி கொடுத்துக் கொள்ளலாம் என்ற சட்டம் கூறப்பட்ட இறைவசனம் இந்த பிரயாணத்தின் போது கஅப் இப்னு உஜ்ரா (ரழி) என்ற நபித்தோழரின் விஷயத்தில் இறக்கப்பட்டது.

**பெண்களைத் திரும்ப அனுப்ப மறுத்தல்:**

முஸ்லிமான சில பெண்கள் ஹிஜ்ரா செய்து முஸ்லிம்களுடன் சேர்ந்து கொண்டனர். அவர்களின் உறவினர்கள் ஹுதைபிய்யா உடன்படிக்கையின்படி அவர்களைத் தங்களிடம் திரும்ப அனுப்புமாறு கேட்டுக் கொண்டனர். "ஒப்பந்தத்தில் ஆண் என்ற சொல்லையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, பெண்கள் இதில் கட்டுப்படமாட்டார்கள்" என்று காரணம் காட்டி நபியவர்கள் இக்கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார்கள். (ஸஹீஹுல் புகாரி)

இது விஷயமாகத்தான் அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்.

"நம்பிக்கையாளர்களே! (நிராகரிப்பவர்களில் உள்ள) பெண்கள் நம்பிக்கை கொண்டு (தம் கணவர்களை வெறுத்து) வெளியேறி உங்களிடம் வந்தால், அவர்களைச் சோதித்துப் பாருங்கள். அவர்களுடைய உண்மை நம்பிக்கையை அல்லாஹ்தான் நன்கறிவான். எனினும், (நீங்கள் சோதித்ததில்) அவர்கள் நம்பிக்கையாளர்கள்தாம் என்று உங்களுக்குத் தெரிந்தால், அந்தப் பெண்களை (அவர்களின் கணவர்களாகிய) நிராகரிப்பவர்களிடம் திரும்ப அனுப்பிவிடா தீர்கள். (ஏனென்றால் முஸ்லிமான) இப்பெண்கள் அவர்களுக்கு (மனைவிகளாக இருப்பதும்) ஆகுமானதல்ல; அவர்கள் இவர்களுக்கு (கணவர் களாக இருப்பதும்) ஆகுமானதல்ல. (எனினும், இப்பெண்களுக்காக அவர்கள்) செலவு செய்திருந்த பொருளை அவர்களுக்குக் கொடுத்து விடுங்கள். நீங்கள் அந்தப் பெண்களுக்கு மஹரைக் கொடுத்து, அவர்களைத் திருமணம் செய்து கொள்வது உங்கள் மீது குற்றமாகாது. தவிர, (உங்கள் பெண்களில் எவரும் நம்பிக்கை கொள்ளாதிருந்தால்) நம்பிக்கை கொள்ளாத அந்தப் பெண்களின் திருமண உறவை (நீக்காமல்) நீங்கள் பிடித்துக் கொண்டிருக்க வேண்டாம். (அவர்களை நீக்கி, அவர்களுக்காக) நீங்கள் செலவு செய்ததை (அப்பெண்கள் சென்றிருக்கும் நிராகரிப்பவர்களிடம்) கேளுங்கள். (அவ்வாறே நம்பிக்கை கொண்டு உங்களிடம் வந்துவிட்ட அவர்களுடைய மனைவிகளுக்குத்) தாம் செலவு செய்ததை அவர்கள் (உங்களிடம் கேட்கலாம்). இது அல்லாஹ்வினுடைய கட்டளை. உங்களுக்கிடையில் (நீதமாகவே)

தீர்ப்பளிக்கிறான்.

அல்லாஹ் (அனைத்தையும்) நன்கறிந்தவனும், ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.

(அல்குர்ஆன் 60:10)

மேலும்,

"நபியே! நம்பிக்கை கொண்ட பெண்கள் உம்மிடம் வந்து, "அல்லாஹ்வுக்கு எதனையும் இணைவைப்பதில்லை என்றும், திருடுவதில்லை என்றும், விபசாரம் செய்வதில்லை என்றும், தங்கள் (பெண்) சந்ததிகளைக் கொலை செய்வதில்லை என்றும், தம்முடைய கை கால்கள் அறிய (அதாவது: பொய்யெனத் தெரிந்தே) கற்பனையாக அவதூறு கூறுவதில்லை" என்றும், உம்மிடம் (பைஅத்து கொடுத்து) வாக்குறுதி செய்தால், அவர்களுடைய வாக்குறுதியைப் பெற்றுக் கொண்டு, நீங்கள் அவர்களுக்காக (முன்னர் அவர்கள் செய்துவிட்ட குற்றங்களுக்காக) அல்லாஹ்விடத்தில் மன்னிப்பைக் கோருங்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவனும் கிருபையுடையவனுமாக இருக்கிறான்." (அல்குர்ஆன் 60:12) என்ற வசனத்தின் மூலம் ஹிஜ்ரா செய்து வந்த பெண்களை நபி (ஸல்) அவர்கள் சோதித்தார்கள். "யார் திருமறையில் கூறப்பட்ட நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டார்களோ அவர்களிடம் நான் உங்கள் ஹிஜ்ராவை ஏற்றுக் கொண்டேன்" என்று கூறுவார்கள். அவர்களைத் திரும்ப அனுப்ப மாட்டார்கள்.

இந்த வசனத்தில் இறக்கப்பட்ட சட்டத்தின் படி முஸ்லிம்கள் மக்காவிலிருந்த தங்கள் இணைவைக்கும் மனைவிகளை விவாகரத்து செய்தனர். அன்றைய தினத்தில் உமர் (ரழி) இணைவைக்கும் இரு மனைவிகளை விவாகரத்து செய்தார்கள். அவ்விருவரில் ஒருவரை முஆவியாவும் இன்னொருவரை ஸஃப்வானும் மணம் முடித்துக் கொண்டனர். (அதுவரை முஆவியாவும் ஸஃப்வானும் இஸ்லாமைத் தழுவவில்லை.)

**ஒப்பந்த அம்சங்களின் விளைவுகள்:**

இதுவரை ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கையை நாம் பார்த்தோம். எவர் ஒருவர் இந்த அம்சங்களையும் அதன் பின் விளைவுகளையும் நன்கு ஆழமாக சிந்தித்துப் பார்ப்பாரோ, அவர் இந்த உடன்படிக்கை முஸ்லிம்களுக்கு மகத்தான வெற்றிதான் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்வார்.

அதாவது, குறைஷிகள் முஸ்லிம்களின் எந்த கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ளாமல் அவர்களை எப்படியாவது வேரோடு அழித்து விட வேண்டுமென்பதிலேயே குறிக்கோளாக இருந்தனர். என்றாவது ஒரு நாள் அந்நோக்கம் நிறைவேறும் என்று எதிர் பார்த்திருந்தனர். முடிந்தளவு தங்கள் முழு ஆற்றலையும் பயன்படுத்தி இஸ்லாமிய அழைப்புப் பணி மக்களை சென்றடையாமல் தடுத்தனர். அரபு தீபகற்பத்தில் அனைத்து அரபுகளின் உலக விஷயங்களுக்கும், மதக் காரியங்களுக்கும் தலைமைபீடமாக இருந்தனர்.

இறுதியாக இவர்கள் சமாதான ஒப்பந்தத்திற்குப் பணிந்து வந்ததே முஸ்லிம்களின் ஆற்றலை அவர்கள் ஏற்றுக் கொண்டதற்கும், இனி முஸ்லிம்களை எதிர்க்க குறைஷிகளிடம் ஆற்றல் இல்லை என்பதற்கும் தெளிவான ஆதாரமாகிவிட்டது. ஏனெனில் எதிரிகள் பொருளாதாரத்தையே ஆற்றலாக பார்ப்பார்கள். அதன் மீதான ஈர்ப்பும், இழப்பைப் பற்றிய அச்சமும் அவர்களின் நிம்மதியை குலைக்கும். முஸ்லிம்களுக்கும் இதுவே நடக்கும். எப்போது எனில், அல்லாஹ்விடத்தில் தாங்கள் சிறந்தவர்கள் என்ற பெயரையும் அங்கீகாரத்தையும் பெறுவதை விட்டுவிட்டு பொருளாதாரத்திற்கு அதிமுக்கியத்துவம் தரும் போது, தன் நலன் மட்டுமே பார்க்க தோணும். பிறகு பாதுகாப்பும், நிம்மதியும் குலையும்.

ஒப்பந்தத்தின் மூன்றாவது அம்சத்தின் மூலம் குறைஷிகள் தங்கள் உலக ரீதியான மற்றும் மத ரீதியான தம் தலைமைத்துவத்தை மறந்துவிட்டனர். இனி தம்மைப் பாதுகாத்துக் கொள்வதே அவர்களுக்கு பெரும் சுமையாகி விட்டது என்பதையும் நன்றாக விளங்கிக் கொள்ளலாம். ஏனைய மக்கள் மற்றும் அரபு தீபகற்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் இஸ்லாமை ஏற்றுக் கொண்டாலும் அதைப் பற்றி குறைஷிகள் இனி கவலைப்பட மாட்டார்கள். அதற்கு ஒரு முக்கியத்துவமும் கொடுக்க மாட்டார்கள். அது விஷயத்தில் எத்தகைய தலையீடும் செய்ய மாட்டார்கள் என்ற அளவுக்கு நிலைமை மாறி விட்டது. இது குறைஷிகளைக் கவனித்துப் பார்க்கும்போது மிகப்பெரிய தோல்வியும், முஸ்லிம்களைக் கவனித்துப் பார்க்கும்போது மிகப்பெரும் வெற்றியாகவும் அமைந்தது என்பதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்!

முஸ்லிம்களுக்கும் அவர்களின் எதிரிகளுக்கு மிடையே நடந்த போர்களின் நோக்கங்களும் குறிக்கோள்களும் முஸ்லிம்களைப் பொறுத் தவரை பொருட்களைச் சூறையாடுவதோ, உயிர்களை அழிப்பதோ, மக்களைக் கொன்று குவிப்பதோ அல்லது வாள் முனையில் இஸ்லாமை ஏற்றுக் கொள்ளும்படி எதிரியை கட்டாயப்படுத்துவதோ அல்ல. மாறாக, திணிக் கப்பட்ட இப்போர்களின் மூலம் முஸ்லிம்களின் ஒரே குறிக்கோள் என்னவெனில், மார்க்கம் மற்றும் கொள்கை விஷயத்தில் மக்களுக்கு முழு சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்பதுதான். அதாவது, மத சுதந்திரம்.

"(நபியே!) உங்கள் இறைவனால் அருளப் பட்ட இ(ந்த வேதமான)து முற்றிலும் உண்மை யானது. விரும்பியவர் (இதை) நம்பிக்கை கொள்ளலாம்; விரும்பியவர் நிராகரித்து விடலாம். (அதனால் நமக்கொன்றும் நஷ்டமில்லை.)"

(அல்குர்ஆன் 18:29/18:06/06:108)

இந்த சுதந்திரம் மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்றால், முஸ்லிம்களிடம் ஆட்சியதி காரம் இருக்க வேண்டும்.

தாம் நாடும் நோக்கத்திற்கும் மக்களுக்கும் மத்தியில் எந்த சக்தியும் குறுக்கிடக் கூடாது என்பதுவே ஆகும். ஆம்! முழுமையாக அந்நோக்கம் இந்த எளிமையான சமாதான ஒப்பந்தத்தின் மூலம் கிடைத்தது. ஒருவேளை மாபெரும் போர் நடந்து அதில் முஸ்லிம்களுக்கு மகத்தான வெற்றி கிடைத்தாலும் கூட இந்த நோக்கம் இந்தளவு நிறைவேறுமா என்பது சந்தேகமே. அல்லாஹ்வின் அருளால் இச்சுதந்தி ரத்தால் முஸ்லிம்களுக்கு அழைப்புப் பணியில் பெரும் முன்னேற்றமும் வெற்றியும் கிடைத்தது. இந்த ஒப்பந்தத்திற்கு முன் முஸ்லிம்களின் எண்ணிக்கை சுமார் மூவாயிரமாக இருந்தது. ஆனால், இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்து மக்கா வெற்றி கொள்ளப்பட்டபோது முஸ்லிம்களின் எண்ணிக்கை சுமார் பத்தாயிரமாக ஆகியது.

இந்த ஒப்பந்தத்தின் இரண்டாவது அம்சம் (பத்து ஆண்டுகளுக்குப் போரை நிறுத்திக் கொள்வது) முஸ்லிம்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியின் இரண்டாவது பகுதியாகும். அதாவது முஸ்லிம்கள் குறைஷிகளிடம் ஒருபோதும் தாமாக போரைத் தொடங்கியதில்லை. மாறாக, எப்போதும் குறைஷிகள்தாம் முதலில் போரைத் தொடங்கினர். அல்லாஹ் தன் திருமறையில்,

"தம் சத்திய உடன்படிக்கைகளை முறித்து (நம்) தூதரை (ஊரை விட்டு) வெளியேற்றவும் விரும்பி முயற்சித்த மக்களுடன் நீங்கள் போர் புரிய வேண்டாமா? அவர்கள்தாம் (இத்தகைய விஷமத்தை) உங்களிடம் முதலில் ஆரம்பித்தனர்." என்று குறிப்பிடுகிறான். (அல்குர்ஆன் 9:13)

ஆரம்பத்தில், முஸ்லிம்கள் எடுத்த பதில் இராணுவ நடவடிக்கைகளும், தொடர்ந்த அச்சுறுத்தலை இறுதியாக நிறுத்த எடுத்த இராணுவ நடவடிக்கைகளும் இயல்பானது. அது நீதிக்கானது. அதன் நோக்கம் என்னவெனில், குறைஷிகள் தங்கள் இஷ்டம் போல், ஏதாவது முற்கால பாரம்பரியத்தை பெருமை அடித்துக் கொண்டு செய்யும் தங்கள் வம்புத்தனத்தை விட்டு விட வேண்டும். அல்லாஹ்வின் பாதை யிலிருந்து மக்களைத் தடுப்பதை விட்டும் விலகிக் கொள்ள வேண்டும்; அனைவருடனும் சமாதானமாக நடந்துகொள்ள வேண்டும். ஏற்ற தாழ்வற்ற சமத்துவ வாழ்வில் ஒவ்வொருவரும் செயல்பட அனுமதிக்க வேண்டும். சட்டம் (Rule of Law) மற்றும் அறத்தை (Rule of Principle) மதிக்க வேண்டும் என்பது தான்.

பத்து ஆண்டுகள் போர் நிறுத்தம் என சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டதால் குறைஷிகளின் வம்புத்தனம், அகம்பாவம், அல்லாஹ்வை வணங்குவதிலிருந்து மக்களைத் தடுத்தல் ஆகிய அனைத்திற்கும் ஒரு முடிவு கட்டப்பட்டது. மேலும், போரை இதுநாள்வரை முதலாவதாக ஆரம்பித்து வந்தவர்கள் இப்போது தோற்று விட்டனர்; கோழையாகி விட்டனர். வலுவிழந்து விட்டனர்; பின்வாங்கி விட்டனர் என்பதற்கு ஒப்பந்தத்தின் இவ்வம்சம் தெளிவான ஆதாரமாகி விட்டது.

ஒப்பந்தத்தின் முதல் அம்சம் (வரும் ஆண்டு மக்காவிற்கு வந்து மூன்று நாட்கள் தங்கலாம். இந்த ஆண்டு திரும்பி செல்ல வேண்டும்) இந்த அம்சம் இதுநாள் வரை முஸ்லிம்களைக் குறைஷிகள் அல்லாஹ்வின் புனித பள்ளியி லிருந்து தடுத்து வந்ததற்கு ஒரு முடிவாக அமைந்தது. ஆகவே, இதுவும் குறைஷிகளுக்கு ஏற்பட்ட தோல்வியே ஆகும். இந்த அம்சத்தில் குறைஷிகளுக்கு சாதகமான, ஆறுதலான எதுவும் இருக்கவில்லை. ஆம்! அந்த ஆண்டு மட்டும் முஸ்லிம்களை மக்காவிற்கு வரவிடாமல் தடுக்க முடிந்ததைத் தவிர வேறெந்த சாதகமும்

அவர்களுக்கு இருக்கவில்லை.

இவ்வாறு மூன்று அம்சங்களைக் குறைஷிகள் முஸ்லிம்களுக்குச் சாதகமாகக் கொடுத்தனர். இதற்கு மாற்றமாக நான்காவது அம்சத்தில் இடம்பெற்ற, அதாவது மக்காவிலிருந்து யாராவது தப்பித்து மதீனா வந்தால் அவர்களைத் திரும்ப மக்காவிற்கு அனுப்பி விடவேண்டும். ஆனால், மதீனாவிலிருந்து யாராவது தப்பித்து மக்கா வந்தால் அவர்களைத் திருப்பி அனுப்ப மாட்டோம் என்ற ஒரே ஒரு அம்சத்தைத்தான் அவர்கள் தமக்கு சாதகமாக பெற்றுக் கொண்டனர்.


ஆனால், இதுவும் அவர்களுக்கு உண்மையில் சாதகமானதோ, பயன் தருவதோ கிடையாது. இன்றைய மொழியில் சொல்வதானால் "தாய் மதம் திரும்புதல்". "கர் வாப்ஸி". இது ஓர் அற்பமான விஷயம். இந்த நிபந்தனை "அவர்களிடம் மக்களை தக்கவைக்கும் கொள்கை இல்லை" என்பதை காட்டிக்கொடுத்தது. அதனால் தான் அவர்கள் வன்முறையில் இறங்கினர். எந்த ஓர் உண்மை முஸ்லிமும் அல்லாஹ்வை விட்டோ, அவனது தூதரை விட்டோ, மதீனாவை விட்டோ விலகிச் செல்ல மாட்டார். அப்படி சென்றாலும் அதில் முஸ்லிம்களுக்கு எந்த ஒரு நஷ்டமும் இடையூறும் இல்லை.

இஸ்லாமை விட்டு உள்ரங்கமாகவோ வெளிரங்கமாகவோ வெளியேறியவன் மட்டுமே முஸ்லிம்களை விட்டும் விலகிச் சென்று நிராகரிப்பாளர்களுடன் சேர்ந்து கொள்வான். அப்படி ஒருவன் மார்க்கத்திலிருந்து வெளியேறி விட்டால் முஸ்லிம்களுக்கு அவனிடம் எந்தத் தேவையும் இல்லை. நஷ்டமும் இல்லை. அவன் இஸ்லாமிய சமூகத்தை விட்டு பிரிந்து சென்று விடுவது, அதிலிருப்பதை விட மிகச் சிறந்ததே. இதைத்தான் நபியவர்கள் "யாரொருவர் நம்மிடமிருந்து விலகி அவர்களிடம் சென்று விடுவாரோ அல்லாஹ் அவரைத் தூரமாக்கி விடுவானாக" என்ற சொல்லின் மூலம் சுட்டிக் காட்டியுள்ளார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

மக்காவில் இஸ்லாமை ஏற்றுக் கொண்ட ஒருவரால் மதீனாவிற்கு வர இயலாது என்றாலும் அல்லாஹ்வின் பூமி விசாலமானது என்பதால் அவர் வேறு எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். மதீனா கிட்டாத போதே முஸ்லிம்கள் ஹபஷா சென்று தங்கவில்லையா? இதைத்தான் நபியவர்கள் "யார் அவர்களிலிருந்து நம்மிடம் வருகிறாரோ. அதாவது இஸ்லாமை ஏற்றுக் கொள்கிறாரோ அவருக்கு அல்லாஹ் வெகு விரைவில் நல்ல சூழ்நிலையையும் கஷ்டத்திலிருந்து விடுதலையும் தருவான்" என்ற சொல்லின் மூலம் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

இதுபோன்ற தற்காப்பு உடன்படிக்கையைக் குறைஷிகள் ஏற்படுத்திக் கொண்டது (மக்காவில் இருந்து மதீனாவிற்கு வந்தவரை திருப்பி அனுப்பிவிட வேண்டும். மதீனாவிலிருந்து மக்காவிற்கு வந்தவர் திரும்பி அனுப்பப்பட மாட்டார் என்பது) வெளிப்படையாக பார்க்கும் போது குறைஷிகளுக்கு இது கண்ணியமானதாகத் தெரிந்தாலும், உண்மையில் குறைஷிகள் எவ்வளவு நடுக்கத்திலும், சோர்விலும் தங்கள் சிலை வணக்கத்திற்கு ஏற்பட்ட கதியைப் பார்த்து அச்சத்திலும் இருக்கின்றனர் என்பதற்கு இது தெளிவான ஆதாரமாகும்.





vaigarai velicham official

தங்களின் மதக் கட்டமைப்பு அழியும் அபாயத்தில் இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர். ஆகவேதான், இதுபோன்ற ஒரு அற்பமான தற்காப்பு அம்சத்தை தம் உடன்படிக்கையில் இடம்பெறச் செய்தனர். முஸ்லிம்களிடமிருந்து குறைஷிகளிடம் சேர்ந்து கொண்டவரை திருப்பி கேட்க மாட்டோம் என்று நபி (ஸல்) அவர்கள் பெருந்தன்மையாக கூறியது தம் மார்க்கத்தின் மீதும், அதை பின்பற்றியவர்கள் மீதும் தான் வைத்திருந்த முழுமையான நம்பிக்கைக்கு ஆதாரமாகும். எனவே, இதுபோன்ற நிபந்தனைகளைக் கண்டு நபி (ஸல்) அவர்கள் சிறிதளவும் அஞ்சவில்லை.

**முஸ்லிம்களின் துக்கமும், உமரின் தர்க்கமும்:**

மேற்கூறப்பட்ட இவைதான் இந்த சமாதான ஒப்பந்தத்தின் அம்சங்களாகும். எனினும், வெளிப்படையான இரு காரணங்களால் அனைத்து முஸ்லிம்களையும் துக்கமும், கவலையும் கடுமையாக ஆட்கொண்டது. "அல்லாஹ்வின் இல்லத்திற்குச் செல்வோம். அங்கு சென்று தவாஃப் செய்வோம்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆனால், அங்கு சென்று தவாஃப் செய்யாமலேயே எப்படி நம்மைத் திருப்பி அழைத்துச் செல்லலாம் என்பது முதல் காரணம்.

**இரண்டாவது காரணம்:** இவர்கள் (முஹம்மது) அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள். மேலும் சத்தியத்தில் இருக்கிறார்கள் அல்லாஹ் தன் மார்க்கத்தை உயர்வாக்குவான் என்று வாக்கும் அளித்துள்ளான் அப்படியிருக்க ஏன் குறைஷிகளின் நிர்ப்பந்தத்திற்குப் பணிய வேண்டும்? ஏன் சமாதானத்தில் தாழ்மையான நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்?

இந்த இரண்டு வெளிப்படையான காரணங்கள் பல சந்தேகங்களையும், பல எண்ணங்களையும், பல குழப்பங்களையும் கிளப்பின. இதனால் முஸ்லிம்களின் உணர்வுகள் காயமடைந்தன. சமாதான ஒப்பந்தத்தின் அம்சங்களைச் சிந்திக்க விடாமல் கவலையும் துக்கமும் தான் முஸ்லிம்களை ஆட்கொண்டிருந்தன.

ஆரம்பகால பிரச்சாரத்தில், மக்காவில் ஓரிறை கொள்கையை பின்பற்றியவர்களுக்கு அரசு அதிகாரம் என்பது எட்டா கனியாக இருந்தது. அதனால், முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு எட்டா கனியாக இருந்தது. அன்று இயக்கமாக இருந்து இன்று சொந்த பூமி, ராணுவம், வரிவசூல், நீதி என ஒரு நாடாக வளர்ந்து வலிமை பெற்றும் நமது மதீனா அரசால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களை அரவணைக்க முடியாதா? என்ற சலசலப்பு முஸ்லிம்களை பாதித்தது. மக்கா வாழ்வில் எதிர்கொண்ட கெடுபிடிகள், அச்சுறுத்தல், ஏளனம், இன்னல்கள், இழப்புகள், தொழுகைக்கு தடை, கொலை மிரட்டல், இறுதியாக கொலை என அனைத்தும் கண்முன் வந்து முஸ்லிம்களுக்கு கவலையை ஏற்படுத்தின.

ஏனைய மக்களைக் காட்டிலும் உமர் இப்னுல் கத்தாப்(ரழி) அவர்கள்தாம் அதிகக் கவலை கொண்டவராக இருந்திருக்க வேண்டும். ஏனெனில், ஒப்பந்தம் முடிந்தவுடன் அவர் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து பேசினார்கள். இதோ.......... அவர்களின் உரையாடல்:

**உமர் (ரழி):** அல்லாஹ்வின் தூதரே! நாம் சத்தியத்திலும் அவர்கள் அசத்தியத்திலும் இருப்பது உண்மைதானே?

**நபி (ஸல்):** ஆம்! (நாம் சத்தியத்தில் இருக்கிறோம் அவர்கள் அசத்தியத்தில் இருக்கிறார்கள்).

**உமர் (ரழி):** நம்மில் கொல்லப்பட்டவர்கள் சுவனத்திலும், அவர்களில் கொல்லப்பட்டவர்கள் நரகத்திலும் இருப்பார்கள். சரிதானே?

**நபி (ஸல்):** ஆம்! (நம்மில் கொல்லப்பட்டவர்கள் சுவனத்தில் இருக்கின்றனர். அவர்களில் கொல்லப்பட்டவர்கள் நரகத்தில் இருக்கின்றனர்).

**உமர் (ரழி):** அப்படியிருக்க நாம் ஏன் நம் மார்க்க விஷயத்தில் விட்டுக்கொடுத்து தாழ்வை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லாஹ் நமக்கும் அவர்களுக்கும் நடுவில் தீர்ப்பளிக்காமல் இருக்கும் இந்நிலையில் நாம் திரும்பிச் செல்வது எவ்வாறு நியாயமாகும்?

**நபி (ஸல்):** சுத்தாபின் மகனே! நான் அல்லாஹ்வின் தூதர் என்னால் அவனுக்கு மாறு செய்ய முடியாது. அவன் எனக்கு உதவி செய்வான். ஒருக்காலும் அவன் என்னைக் கைவிட மாட்டான்.

**உமர் (ரழி):** அல்லாஹ்வின் இல்லத்திற்கு வருவோம்: அதைத் தவாஃப் செய்வோம் என்று நீங்கள் எங்களுக்குக் கூறவில்லையா?

**நபி (ஸல்):** ஆம்! நான் கூறினேன். ஆனால் இந்த ஆண்டே வருவோம் என்று கூறினேனா?

**உமர் (ரழி):** இல்லை! அவ்வாறு கூறவில்லை.

**நபி (ஸல்):** *நிச்சயமாக நீ கஅபாவிற்குச் சென்று அதை தவாஃப் செய்வாய்.*

*பின்பு உமர் (ரழி) கோபத்துடன் அபூபக்ர் (ரழி) அவர்களிடம் வந்து நபி (ஸல்) அவர்களிடம் கேட்ட கேள்விகளைக் கேட்க, அபூபக்ர் (ரழி) அவர்களும் நபியவர்கள் கூறியவாறே உமருக்குப் பதில் கூறினார்கள். மேலும் "உமரே! நீ மரணிக்கும்வரை நபி (ஸல்) அவர்களைப் பற்றிப் பிடித்துக்கொள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அவர்கள் உண்மையில் தான் இருக்கிறார்கள்" என்று கூறினார்கள்.*

*இந்நிகழ்ச்சிக்குப் பிறகு*

*(நபியே! ஹுதைபிய்யாவின் சமாதான உடன்படிக்கையின் மூலம்) நிச்சயமாக நாம் உங்களுக்கு (மிகப்பெரிய) தெளிவானதொரு வெற்றியைத் தந்தோம். (அதற்காக நீங்கள் உங்கள் இறைவனுக்கு நன்றி செலுத்துவீராக!)*

*(அல்குர்ஆன் 48:1,2)*

*என்ற வசனம் அருளப்பட்டது. உடன் நபி (ஸல்) அவர்கள் ஒருவரை அனுப்பி அவ்வசனத்தை உமர் (ரழி) அவர்களிடம் ஓதிக்காட்டும்படி கூறினார்கள். அதைக் கேட்டு நபி (ஸல்) அவர்களிடம் வந்த உமர் (ரழி) "அல்லாஹ்வின் தூதரே! இது வெற்றியான விஷயமா?" என்று கேட்டார்கள். நபியவர்கள் "ஆம்" என்றவுடன் உமர் (ரழி) மனமகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றார்.*

*பின்பு, தான் செய்த காரியத்தை எண்ணி உமர் (ரழி) மிகவும் கவலையடைந்தார்கள். இதைப் பற்றி உமரே*

*இவ்வாறு கூறினார்கள்:*

*"நான் என் செயலை எண்ணி வருந்தி அதற்கு பரிகாரமாக பல நற்செயல்களைச் செய்தேன். அன்றைய தினம் நான் நபி (ஸல்) அவர்களிடம் நடந்து கொண்ட விதத்திற்காக எப்போதும் தர்மம் செய்து வந்தேன்; நோன்பு வைத்து வந்தேன்; தொழுது வந்தேன், அடிமைகளை உரிமையிட்டு வந்தேன்: நான் நபி (ஸல்) அவர்களிடம் பேசிய பேச்சை எண்ணி பயந்து பல நன்மைகளைச் செய்தேன். நான் பேசிய பேச்சு நன்மையாக மாற வேண்டும் என்பதே என் ஆதரவாக இருந்தது." (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம், இப்னு ஹிஷாம்)*

**ஒடுக்கப்பட்டோர் துயர் தீர்ந்தது:**

*நபி (ஸல்) அவர்கள் மதீனா திரும்பிச் சென்று விட்டார்கள். சில நாட்களுக்குப் பின் மக்காவில் வேதனை அனுபவித்துக் கொண்டிருந்த முஸ்லிம்களில் ஒருவரான அபூ பஸீர் (ரழி) என்பவர் காஃபிர்களிடமிருந்து தப்பித்து மதீனா வந்து தஞ்சமடைந்தார். இவர் குறைஷிகளின் தோழர்களான ஸகீப் கிளையைச் சேர்ந்தவர். இவரைப் பிடித்து வர குறைஷிகள் இருவரை மதீனாவிற்கு அனுப்பி வைத்தனர். அவ்விருவரும் நபி (ஸல்) அவர்களிடம் வந்து "நீங்கள் எங்களுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுங்கள்" என்றனர். நபியவர்கள் அபூபஸீரை அவ்விருவரிடமும் ஒப்படைத்து விட்டார்கள்.*

*"நம்பி வந்த இடம் தன்னை கைவிட்டு விட்டது. தன் உயிரை விட மேலாக ஏற்றுக் கொண்ட நபியவர்களே தன்னை அக்கிரமக்காரர்களிடம் ஒப்படைப்பது சரியா? இது சரியான தலைமை தானா?" என்ற குழப்பம் ஏதுமில்லை அபூ பஸீர் (ரழி) அவர்களுக்கு. ஏனெனில் இறைவனுக்காக தன்னையே இழக்க தயாராக்கி வந்தவர் இவர். தனது நபியின், தலைமையின் பொறுப்பை உணர்ந்தவர். உடன்படிக்கையை நிறைவேற்றுவது இஸ்லாமிய பண்பு. ஹுதைபிய்பா உடன்படிக்கை மதீனா மற்றும் மக்கா ஆட்சியின் எல்லைக்கு தான் பொருந்தும். மற்ற பகுதிகளுக்கு பொருந்தாது. இவை அனைத்தும் அவருக்கு புரிந்திருந்தது.*

*பிடித்துக் கொண்டு போக வந்த அவ்விருவரும் அபூபசீரை இழுத்துச் சென்றனர். மதீனாவின் சற்று தூரத்தில் இருந்த துல் ஹுலைஃபா-வுக்கு வந்து சேர்ந்தனர். இவ்விடம் நபி (ஸல்) அவர்கள் தங்கள் உம்ரா பயணத்திற்காக இஹ்ராம் ஆடையை உடுத்திய இடம்.*

*வந்தவர்கள் தங்கள் வாகனத்தை விட்டு இறங்கிய உடன் கொண்டு வந்திருந்த பேரீத்தம் பழங்களைச் சாப்பிட ஆரம்பித்தனர். அப்போது அபூபஸீர் (ரழி) அவ்விருவரில் ஒருவரிடம் "உன் வாள் மிக நன்றாக உள்ளதே!" என்றார். அதைக் கேட்ட அவன் தனது அவ்வாளை உருவி "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! இது மிகச் சிறந்த வாள். இதை நான் பலமுறை சோதித்துப் பார்த்திருக்கிறேன்" என்றான். அதற்கு அபூ பஸீர் (ரழி) "நான் அதைப் பார்க்க வேண்டும். காண்பி!" என்றார். அவன் அவரிடம்*

அந்த வாளைக் கொடுக்கவே அதை வாங்கி ஒரே வெட்டில் அவனது கதையை அவர் முடித்துவிட்டார். ஒரு காவல்காரனின் கதை முடிந்தது. இப்போது இங்கே வாள் என்ன வேலை செய்திருக்கிறது என பாருங்கள். உடன்படிக்கையின் போது தவறிய வாளுக்கான வாய்ப்பு இப்போது கச்சிதமாக முடிந்தது.

கொலையை பார்த்த மற்றவன் வெருண் டோடி மதீனா வந்து சேர்ந்தான். பயந்த நிலையில் பள்ளிக்குள் நுழைந்தான். அவனைப் பார்த்த நபியவர்கள், "இவன் ஏதோ ஒரு திடுக்கமான காட்சியைப் பார்த்து விட்டான்" என்று கூறினார்கள். நபியவர்களுக்கருகில் வந்த அவன் "என் நண்பன் கொலை செய்யப்பட்டு விட்டான். நானும் கொலை செய்யப்பட்டு விடுவேன்" என்று பதறினான். அந்நேரத்தில் அபூபசீரும் அங்கு வந்து சேர்ந்தார். அவர் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து "அல்லாஹ்வின் தூதரே! நிச்சயமாக அல்லாஹ் உங்கள் பொறுப்பை நிறைவேற்றிவிட்டான். நீங்கள் என்னை அவர்களிடம் அனுப்பிவிட்டீர்கள். பின்பு அல்லாஹ்தான் அவர்களிடமிருந்து என்னைப் பாதுகாத்தான்" என்று கூறினார். அதைக் கேட்ட நபியவர்கள்," இவரது தாய்க்கு ஏற்பட்ட நாசமே! இவர் போரை மூட்டி விடுவார் போலிருக்கிறதே! இவரை யாராவது பிடிக்க வேண்டுமே" என்றார்கள். நபியவர்களின் இப்பேச்சை கேட்டு சுதாரித்துக்கொண்ட அபூ பஸீர் (ரழி) "தன்னை மீண்டும் காஃபிர்களிடம் கொடுத்து விடுவார்கள்" என்று அறிந்து அங்கிருந்து வெளியேறி கடற்கரை ஓரமாக வந்து தங்கிக் கொண்டார்.

சில நாட்களுக்குப் பின் மக்காவில் இவரைப் போல் துன்பம் அனுபவித்து வந்த ஹூதைபிய்பா உடன்படிக்கையின் போது ஒப்படைக்கப்பட்ட அபூஜந்தல் இப்னு சுஹைல் (ரழி) மீண்டும் மக்காவிலிருந்து தப்பித்து இவருடன் வந்து சேர்ந்து கொண்டார். இவ்வாறே மக்காவில் முஸ்லிமானவர்கள் ஒவ்வொருவராக பலர் அபூபஸீர் (ரழி) அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டனர். இதனால் ஒரு புது அதிகார மையம் அதாவது ஒரு புது நாடே செங்கடல் கடற்கரை ஓரத்தில் உருவாகிவிட்டது. இதை மூன்றாவது நாடு (Third state) எனலாம்.

இங்கு இவர்கள் எடுப்பதே முடிவு. இவர்கள் ஷாம் நாட்டை நோக்கிச் செல்லும் குறைஷிகளின் வியாபாரக் கூட்டம் அவ்வழியாக வருவதைத் தெரிந்து கொண்டால் பழிக்கு பழியாக உடனடியாக அதைத் தாக்கி பொருட்களை கையகப்படுத்தி அதிகாரத்தை நிலைநாட்டினர். பின்பு அதில் உள்ள குறைஷிகளைக் கொலை செய்து விடுவார்கள். தாங்கள் தங்கியிருந்த பகுதியை கட்டுப்படுத்தி அதிகாரம் செலுத்தினர். இந்நடவடிக்கைகள் இஸ்லாமிய அரசான மதீனா அரசுக்கு மறைமுகமாக உதவிகரமாக அமைந்தது.

இதுபோன்ற சூழல் இஸ்லாத்தை மேலோங்க செய்யும் அறப்பணியாளர்களுக்கு நேர்வதை பார்க்கலாம். இயக்க தலைமை ஏதாவது ஒரு காரணத்தால் தனது ஊழியக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கும். விலக்கப்பட்டவருக்கோ தனி கூட்டமைப்பாக செயல்படும் வாய்ப்பு அமையும். ஆனால், தான் இலட்சியத்தை கற்ற தாய் அமைப்புக்கு எதிராக தமது செயலை ஆக்கி கொள்வது விரும்பத் தகாதது. தாய் அமைப்பிற்கு துணை புரியும் விதத்தில் ஊழியத்தை அமைத்து கொள்ள வேண்டும்.

புதிய சின்னஞ்சிறு திடீர் நாட்டின் நடவடிக்கையை ஒரு குடைச்சலாக கருதினர் குறைஷிகள். பெரும் துன்பத்திற்குள்ளான குறைஷிகள் நபி (ஸல்) அவர்களிடம் தூதனுப்பி அல்லாஹ்விற்காகவும் இரத்த உறவுக்காகவும் நாங்கள் உங்களிடம் கேட்கிறோம். யார் இஸ்லாமை ஏற்று உங்களிடம் வந்து விட்டார் களோ அவர் அபயம் பெற்றவராவார். (அவரைத் திரும்ப கேட்க மாட்டோம்) என்று கூறினர். அவர்களின் இக்கோரிக்கைக்கிணங்க நபியவர்கள் அந்த முஸ்லிம்களை மதீனாவிற்கு வரவழைத் தார்கள். குறைஷிகள் நிம்மதியடைந்தனர்.

(ஸஹீஹுல் புகாரி, ஜாதுல் மஆது, இப்னு ஹிஷாம்)

**குறைஷி மாவீரர்கள் இஸ்லாமைத் தழுவுதல்:**

இந்த ஒப்பந்தத்திற்குப் பின் ஹிஜ்ரி 7ஆம் ஆண்டு குறைஷிகளின் முக்கிய வீரர்களும் பிரமுகர்களுமான அம்ர் இப்னு ஆஸ், காலித் இப்னு வலீத் உஸ்மான் இப்னு தல்ஹா போன்றவர்கள் இஸ்லாமைத் தழுவினர். இவர்கள் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்தபோது "மக்கா தன் ஈரக் குலைகளை நம்மிடம் ஒப்படைத்துவிட்டது' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

# 25-9-2025 அன்று மயிலாடுதுறை, தஞ்சாவூர் மாவட்டங்களில் தாஃவா









**தஞ்சாவூர்** மாவட்டம், திருப்பனந்தாள், சிக்கல் நாயக்கன் பேட்டையில் கடந்த 25-9-2025 அன்று நமது டிரஸ்டின் மூத்த தாயும் தாஃவா களத்தில் கடந்த 50 ஆண்டுகளாக பார்வையிட்டுவரும் ஜக்கரிய்யா பாய் அவர்களும் அவர்கள் சார்ந்த நண்பர்களையும் சிக்கல் நாயக்கன் பேட்டையில் சந்தித்து அவர்களினுடைய குடும்பத்தாருக்கு இஸ்லாத்தை எப்படி கொண்டு செல்வது என்பது பற்றி கள ஆய்வு செய்யப்பட்டது.

திருப்பனந்தாளை சேர்ந்த ஆரம்பகால சமூக விடுதலைக்காக போராடிய உத்திராசு அவர்களை சந்தித்தோம் அவருடன் கடந்த கால நிகழ்வுகளை பகிர்ந்துக் கொண்டோம்.

அடுத்ததாக திருவாடுதுறையில் பேராசிரியர் A.E.M அபூபக்கர் அவர்களை சந்தித்தோம் இவர்களும் நம்மோடு தாஃவா களத்தில் 15 ஆண்டுகளாக பல நிகழ்வுகளில் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களும் அவரது குடும்பத்தார்களுக்கு இஸ்லாத்தை கொண்டு சேர்ப்பது என்பதாகவும், மாம்புள்ளியில் அவர்களுடைய சொந்த நிலத்தை பள்ளிவாசல் கட்டுவதற்காக தருவதற்காக இருக்கின்றார்கள் அது சம்மந்தம் திருலோகி என்ற ஊரில் இருக்கின்ற முஹம்மது அசார் அவர்களை சந்தித்து இஸ்லாத்தை எப்படி இன்னும் அதிகமான மக்களிடத்தில் கொண்டு செல்வதை பற்றி கலந்துரையாடினோம்.

இந்நிகழ்வில் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் செயலாளர் அப்துல் ரவூஃப், இஸ்லாமிய அழைப்பாளர் ஜக்கரிய்யா பாய், யாசர் அரஃபாத் (அன்பகம் மதரஸா நிர்வாகி) போன்றோர்கள் கலந்துக் கொண்டார்கள்.

- அன்பகம் தாஃவா குழு,
தஞ்சை மாவட்டம்

தொடர்

# பெற்றோருக்கு உரிமையானது நேரம்..!



பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**அல்லாஹ்** "மூன்று பேரை நியாயத் தீர்ப்பு நாளன்று பார்க்கமாட்டான். தன்னுடைய பெற்றோர்களுக்கு கீழ்ப்படியாதவர். மேனியை மினுக்கி ஆண்களைப்போல் உடை அணியும் பெண், தன் மனைவியின் விபச்சாரத்தை ஒத்துக்கொள்பவன்."

இன்னும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் மூன்று பேருக்கு சுவர்கத்தை தடுத்துவிட்டான். பெற்றோருக்குக் கீழ்ப்படியாத பிள்ளைகள், குடி பழக்கத்தில் மூழ்கிப் போனவர்கள், தான் அடுத்தவர்களுக்குச் செய்த உதவிகளைச் சொல்லிக் காட்டுபவன். - (அந்நசய், திர்மிதி, தராமி, அல்பானி சஹீஹ் என பித்தறிவிக்கப்பட்ட நபிமொழி.)

**தன் பெற்றோர்களை சபிப்பது மிகப்பெரிய பாவம்**

பெருமானார் (ஸல்) அவர்களிடம் கேட்கப் பட்டது, பெருமானார் (ஸல்) அவர்களே ஒருவர் எப்படி தன் பெற்றோரை சபிக்க முடியும். இதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் இப்படி பதில் சொன்னார்கள். ஒருவர் இன்னொருவரின் தந்தையை சபிக்கின்றார். அவர் இவருடைய தந்தையை சபிக்கின்றார். அத்தோடு அவரு டையை தாயையும் சபிக்கின்றார். (நவீ, அப்த் அல்)

இதன்பொருள் நீங்கள் உங்கள் பெற்றோர்களை எப்படி சபிக்கவும் திட்டவும் கூடாதோ அதேபோல் அடுத்தவர்களின் பெற்றோர்களை சபிக்கவோ, திட்டவோ கூடாது.

மூன்று வசனங்களும், மூன்று கட்டளைகளும் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறினார்கள்.

திருக்குர்ஆனில் மூன்று வசனங்கள் மூன்று கட்டளைகளோடு சம்மந்தப்பட்டவை. இதில் ஒன்று இல்லையென்றால், இன்னொன்று இல்லாமலாகிவிடும்.

முதலில் அல்லாஹ் கூறுகின்றான் :

"அல்லாஹ்வைக் கீழ்ப்படியுங்கள், அவனது தூதரையும் கீழ்ப்படியுங்கள். இதில், ஒருவர் அல்லாஹ்வைக் கீழ்ப்படிவேன், ஆனால் அவனுடைய தூதரைக் கீழ்ப்படிய மாட்டேன் என்றால், அல்லாஹ்வைக் கீழ்ப்படிவேன் என்பது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது."

இரண்டாவதாக அல்லாஹ் கூறுகின்றான்:

"அல்லாஹ்வை வணங்குங்கள், தொழுங்கள், ஸகாத்-ஐ வழங்குங்கள். அல்லாஹ்வை வணங்கு பவன் (தொழுபவன்) ஸகாத்-ஐ வழங்கவில்லை என்றால், அது அவனிடமிருந்து ஏற்றுக்கொள் ளப்பட மாட்டாது."

**மூன்றாவதாக** அல்லாஹ் கட்டளையிடு கிறான், அல்லாஹ்வுக்கு நன்றி சொல்லுங்கள், பெற்றோருக்கும் நன்றி செலுத்துங்கள். ஒருவன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறான். ஆனால் பெற்றோருக்கு நன்றி செலுத்தவில்லை எனறால் அல்லாஹ் அவனிடமிருந்து ஏற்றுக்கொள்ள மாட்டான்.

ஆகவே, "பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள், உங்கள் பெற்றோர்கள் உங்களிடம் திருப்தி அடைந்தால், (மகிழ்ந்தால்) அல்லாஹ்வும் உங்களிடம் திருப்தி அடைவான். (மகிழ்வான்)"



உங்கள் பெற்றோர்கள் உங்களைக் கொண்டு திருப்தி அடையவில்லை என்றால், அல்லாஹ்வும் உங்களிடம் திருப்திஅடைய மாட்டான்.

இப்னு உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள்:

பெற்றோர்கள் மனம் குமுறி அழுவது, பிள்ளைகள், அவர்களுக்குக் கீழ்ப்படியவில்லை என்பதன் ஒரு பகுதியாகும். அது மிகப்பெரிய தொரு பாவம். - முஸ்லிம் 1/103

ஆக அல்லாஹ்வின் திருப்தியையும், மகிழ்ச்சியையும் பெறுவது என்பது பெற்றோர் களை மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் வைத்துக்கொள்வதிலிருக்கின்றது.

பெருமானார் (ஸல்) அவர்கள் போதனைகள், நாட்டு நடப்பாக நிகழ்வில் இருந்த காலக் கட்டங்களில், பெற்றோர்கள் பேணப்பட் டார்கள். பாதுகாக்கப்பட்டார்கள்.

குடும்ப வாழ்விலிருந்து இஸ்லாமிய விழுமியங்கள் அகன்று, அகன்று, இதர கலாச்சாரங்கள் முஸ்லிம் குடும்ப வாழ்வை ஆக்கிரமிக்கத்தொடங்கியபோது, பெற்றோர்கள், பெரும் சுமையாகப்பட்டார்கள். இளவல்கள் அவர்களை விட்டுப்பிரிந்து, தனி ராஜ்ஜியம் நடத்திட தலைப்பட்டார்கள். அவர்களின் இந்த நிலைக்கு முஸ்லிம்களிடையே எழுந்த முதியோர் காப்பகங்கள், துணை நின்றன.

விலைமதிக்க முடியாத பெற்றோர்களை, சில சில்லரைகளை முதியோர் இல்லங்களுக்குத் தந்து, பெற்றோர்கள் என்ற சுமையை அந்த இல்லங்களில் இறக்கி வைத்து விடுகின்றோம் என திருப்திபட்டுக் கொள்கின்றார்கள்.

இது அந்தப் பெற்றோர்களிடம், தங்கள் பிள்ளைகள் மீது ஒரு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தும். அது, அல்லாஹ்வும், அவனது அறுதித்தூதரும், கற்றுத்தந்த பாடங்களின்படி பொன்னரிய மறுமை வாழ்வு கெட்டுப் போய்விடும்.

இது, இஸ்லாத்தின் வீழ்ச்சியால் குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட மிகப்பெரிய இழப்பாகும். வீழ்ச்சியாகும்.

முதியோர் நல மருத்துவர் ஒருவர் கூறுகின்றார்:

நீங்கள் உங்கள் வயதான பெற்றோர்களுக்காக பணத்தை ஒதுக்குகின்றீர்களோ இல்லையோ, நேரத்தை ஒதுக்குங்கள், அன்பை பறிமாறுங்கள். அவர்கள் பேசுவதை கேளுங்கள், கேட்டுக் கொண்டே இருங்கள். Listening is Healing அவர்கள் சொல்வதையெல்லாம் நீங்கள் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருப்பது அவர்களின் மனதிற்கு ஒரு பெரும் மருந்து என்கின்றார்.


அந்த Listening என்பது. அதாவது, கேட்டுக் கொண்டிருப்பது. with care and share - ஆழ்ந்து கேட்பதும், ஆங்காங்கே அப்படியா? சரிதான் என்ற வார்த்தைகளின் மூலம் அக்கறையோடு செவிமடுக்கின்றோம் என்ற திருப்தியை ஏற்படுத்திட வேண்டும்.


எந்த நிலையிலும் அவர்களை அலட்சியப் படுத்திவிடாதீர். அல்லாஹ் பாதுகாப்பானாக!

- தொடரும்.

- MGM

ஆங்கிலம் : **JOHN FEFFER** தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்






## இஸ்லாத்திற்கெதிரான மேலை நாடுகளின் மறு உயிர்பெற்ற போர்

**"The West's Resurgent War on Islam"**

ஜான் பெஃபர் கூறுகின்றார்கள்

கொலம்பஸ்-இன் உலகச் சுற்றுப் பயணம் முஸ்லிம்களுக்கெதிரான பயணம்தான். அமெரிக்காவின் இராணுவம் கட்டமைக்கப்பட்டது. முஸ்லிம்களை அழிப்பதற்குத்தான் என்றொரு பிரச்சாரம் தொடர்ந்தது. தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

அதன்பின்,

9/11 என்பதை மையமாகக் கொண்டு உலகெங்கும் முஸ்லிம்களின்மேல் ஒரு போரைத் தொடுத்தோம். உலகெங்கும் இஸ்லாமிய இயக்கங்களுக்குத் தடை, அதன் உறுப்பினர்களுக்கு சிறை, சித்திரவதை எனப் பல தாக்குதல்களைத் தொடர்ந்தோம்.

தொடர்ந்து முஸ்லிம்களைக் கொலை செய்திடும் எண்ணம் அமெரிக்கப் படைகளிடம், ஆழப்பதிந்திட வேண்டும் என்ற திட்டம் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டே இருந்தது. இதை அமெரிக்க இராணுவத்திற்குச் சொல்லித் தந்த பாடல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இந்தப் பாடல்கள் முஸ்லிம்கள் மேல் வெறுப்பை வளர்த்தன. அவர்களின் உயிர்களை மலிவாகக் காட்டின.

இந்தப் பாடல்களை அவர்கள் ஓய்வு நேரங்களில் பாடிக்கொண்டே இருந்தார்கள்.

1801இல் அமெரிக்கா வட ஆப்பிரிக்க நாடுகளின்மேல், மிகப்பெரிய போர்கள் பலவற்றைத் தொடுத்தது. அந்த நாடுகள், திரிபோலி அல்ஜீரிஸ், துனிஸ் என்பனவாகும். இந்த நாடுகளை அமெரிக்கா, முஸ்லிம் காட்டு மிராண்டி நாடுகள் என அழைத்தது. Muslim (Barbary States) ஏனெனில் இந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள். அமெரிக்கக் கப்பல்களைக் கொள்ளை அடித்தார்களாம். அந்தக் கப்பல் மாலுமிகளை, பிணைக் கைதிகளாக அழைத்துச் சென்றார்களாம். இந்தக் கட்டுக்கதைகளின் வழி அந்தப் போரை நியாயப்படுத்தினார்கள். நாலு வருடம் நடந்த இந்தப் போரில், அமெரிக்கப் படைகள் திருப் போலியின் துறைமுகம் டெர்னி (DERNE) வந்தடைந்தன. இது அமெரிக்கப் படைகளுக்கு நமது கப்பல் படையும் சாதிக்கும் என்ற எண்ணத்தை உருவாக்கிற்று. நமது நாட்டிலிருந்து வெகு தூரத்திற்கு அப்பால் வரை நம்மால் படை நடத்திட இயலும் என்ற நம்பிக்கையையும் கொடுத்தது.

ரோபர்ட் காகன் Robert Kagan என்ற வரலாற்றாசிரியரின் கணிப்பில் முஸ்லிம் காட்டு மிராண்டிகளுக்கெதிரான போர், அமெரிக்காவால் உலகை வசப்படுத்திட

இயலும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. அதுவரையும் தன்னால் உலகை வசப்படுத்திட இயலும் என்ற நம்பிக்கையில் தள்ளாடிக் கொண்டேதான் இருந்தது.

இன்னும் சிலர், இந்தப் போர், நாம் இனிவரும் நாட்களில் போர், தொடுக்கவிருக்கும் கெட்ட முஸ்லிம்களுக்கெதிரானப் போரில் உதவி செய்யும் என்றார்கள். இஃதோர் முன்னுதாரணமாக அமையும் (Precedent) எனக் குறிப்பிட்டார்கள்.

9/11 என அடையாளப்படுத்தப்படும், செப்டம்பர் 11, 2001க்குப் பின் பலரும் இந்தப் போர்களையும் மேற்கோள் காட்டி முஸ்லிம் நாடுகள் மீது தாக்குதல் நடத்துவதை நியாயப்படுத்தினார்கள்.

இன்னும் பல எழுத்தாளர்கள், அன்று கடல் கொள்ளையில் ஈடுபட்டவர்கள், முஸ்லிம் பழைமை வாதிகள் என்றும் இஸ்லாத்தை முன் வைத்துப் போராடியவர்கள் என்றும் மீண்டும் மீண்டும் எழுதிக்கொண்டே இருந்தார்கள். அப்படி எழுதியவர்கள் சட்டத்துறை பேராசிரியர் ஜோதன் டிர்லி, வரலாற்றாசிரியர் தாமஸ் ஜீவன், தாமஸ் ஜீவட், கிருஸ்தவ பழைமைவாத பத்திரிகையாளர் ஜேஷுவா லண்டன், வாஷிங்டன் மாநிலத்தின் கிருஸ்தவ கூட்டணியின் தலைவர் ரிக்போர்சியர், இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் இப்போது தாக்குதல் நடத்திட இவர்கள் பழைய வரலாற்றிற்கு இஸ்லாமிய சாயம் பூசினார்கள்.

முஸ்லிம்கள், குறிப்பாக இஸ்லாத்தைத் தூக்கிப் பிடிப்பவர்கள், அன்றே கடல் கொள்ளைக் காரர்களாக இருந்தார்கள் எனக் கதைகட்டி விட்டார்கள். (பார்க்க அடிக்குறிப்பு-2)

இந்தக் கதைகளை முன்வைத்து அன்றைக்கு நாம் தொடர்ந்த போர்களைப் போல் இன்றைக்கும், போர் தொடுக்க வேண்டும் என்றார்கள்.

அன்றைய நாள்களில் அதாவது 1801களில் 200 ஆண்டுகளுக்கு முன், முஸ்லிம்கள் மீது மேலை நாட்டவர்களும், அமெரிக்காவின் பத்திரிகையாளர்களும், வரலாாற்றிசிரியர்களும் கட்ட வீழ்த்திட்ட கட்டுக் கதைகளை அனைவரும் நம்பினார்கள், ஏன் சிலபல முஸ்லிம்களும் நம்பினார்கள்.

ஆனால், இன்றைய நாள்களில் முஸ்லிம்கள், தங்களுக்கெதிராக வளர்க்கப்படும் வெறுப்பையும், காழ்ப்பையும், நன்றாகவே அறிந்திருக்கின்றார்கள். அதற்காகச் செய்யப்படும் வரலாற்றுத் திரிபுகளையும் நன்றாகவே அறிந்திருந்தார்கள். அதனால் பழைய வரலாற்றைத் தோண்டி எடுத்தார்கள். உண்மையை வெளிக்கொணர்ந்தார்கள்.

1801இல் நடந்தது கடல்கொள்ளை அல்ல, அமெரிக்கா ஆயுதங்களைக் கடத்தி, வட ஆப்பிரிக்க நாடுகளை ஆக்கிரமிக்க செய்த ஏற்பாடுகளை தடுத்திட மேற்கொண்ட நடவடிக்கைகள். இந்த எதிர் நடவடிக்கைகளை வட ஆப்பிரிக்க நாடுகளின் கப்பல் படைகள்தான் நடத்தின.

ஆங்காங்கே நடந்த கடல் கொள்ளைகள் வழக்கமான கடல் கொள்ளையர்கள் மேற்கொண்ட கொள்ளைகள். அதற்கும் மதத்திற்கும் எந்தச் சம்மந்தமுமில்லை.

இப்படி முஸ்லிம்கள் முன் வைத்தத் தங்கள் கூற்றுக்கு ஏராளமான ஆதாரங்களைத் தந்தார்கள். அமெரிக்க எழுத்தாளர்களும், வரலாற்றாசிரியர்களும் தந்த ஆதாரங்கள் பொய்கள் என நிரூபித்தார்கள். இதனால் அமெரிக்கா 9/11 தாக்குதலுக்கு முன் வரலாறாக (Precedent) ஆக அந்த Muslim Barbary போர், கடல் கொள்ளை வரலாற்றைக் காட்டிட இயலவில்லை. அதேபோல் இனி எப்போதும் அதை ஓர் வரலாறாகக் காட்டிட இயலாது.

அதேபோல் அன்றைய நாட்களில் அடிமைகள் சந்தையும், அடிமை முறையும் செயலிலிருந்ததாக சொல்லி அன்றைய வட ஆப்பிரிக்க முஸ்லிம்களை மக்கள் மன்றத்தில் மலிவாகக் காட்டினார்கள் அமெரிக்காவும் அதன் அருவருடிகளும்.

ஆனால் அதே காலக்கட்டத்தில் மிகவும் குரூரமான அடிமை முறை செயலில் இருந்தது அமெரிக்காவிலும் மேலை நாடுகளிலும்தான். அந்தக் கொடுமையைச் சொல்லி மாளாது. அந்த நிறவெறிக் கொலைகளை இன்னும் அமெரிக்க வீதிகளில் அமோகமாகத் தாண்டவமாடுகின்றன.

அரசின் அதிகாரிகளும், காவல்துறையினரும் நடுரோட்டில் கறுப்பின மக்களை கொலை செய்யும் குரூரம் நித்திய நடப்புகள்.

கறுப்பர்கள் இப்போது அங்கே - அமெரிக்காவில் Black Lives matters "BLM" கறுப்பர்களின் உயிருக்கும் மதிப்புண்டு என்றொரு இயக்கத்தை நடத்தி வருகின்றார்கள்.

*இத்தனையும் வெளிச்சத்திற்கு வந்தாலும், அனைத்து அவமானத்தையும், தோல்வியையும் துடைத்துப் போட்டுவிட்டு இஸ்லாமோ ஃபோபியாவை வளர்த்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். அமெரிக்காவும் அதன் அடிமைகளான மேலைநாடுகளும்.*

*இன்ஷாஅல்லாஹ் தொடரும்.*
- MGM

**அடிக்குறிப்பு-1**

9/11 என்ற அமெரிக்காவின் இரட்டைக். கோபுரங்கள்தாக்கப்பட்டது. ஓர்அமெரிக்க உள்ளிருப்பு வேலை. அது அமெரிக்காவின் உளவுத்துறை - இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம் உலகின் மீதும் ஒரு முடிவற்ற போரை நடத்திட ஏற்பாடு செய்தது.

9/11 பரபரப்பில், அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சபையைக் கையிலெடுத்தது. ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிட கட்டாயப் படுத்தியது. அந்தத் தீர்மானந்தான் 1371.(2001)

இந்தத் தீர்மானம், ஒவ்வொரு நாடும், தீவிரவாதத்திற்கு எதிரான ஓர் சட்டத்தை நிறைவேற்றிட வேண்டும் என நிபந்தனை விதித்திற்று.

நமது நாட்டில் (POTA) பொடா என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டம் ஆயிரக்கணக்கான முஸ்லிம் இளை ஞர்களை சிறையில் அடைத்தது, அவர்கள் சித்திரவதைச் செய்யப்பட்டார்கள்.

இந்தச் சட்டம் குற்றம் சுமத்தப்பட்டவர் கொடுக்கும் வாக்குமூலங்கள் செல்லும் என்றொரு கொடுமையான பிரிவைக் கொண்டு வந்தது. அதேநேரத்தில் சித்திரவதைகளைச் செய்து, வாக்குமூலங் களை வாங்கும் சிறப்புச் சித்திரவதைக் கூடங்கள் உலகெங்கும் தொடங்கப்பட்டன.

நாமும் இந்தச் சிறப்புச் சித்திரவதைக் கூடங்கள் பற்றி ஓர் நூலை வெளியிட்டோம். (படியுங்கள், இந்தியாவின் சிறப்புச் சித்திரவதைக் கூடங்கள், வேர்கள் வெளியீட்டகம்)


இந்த சிறப்புச் சட்டங்களால் பல முஸ்லிம் இளைஞர்களின் இளமைப் பருவங்கள் பறிக்கப்பட்டன.

20 வருடம், 25 வருடம் சிறையில் வாடியபின், அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். எந்தக் குற்றமும் இல்லை, அவர்களுக்கு எதிராக எந்தச் சாட்சியமும் இல்லை என்று.

இதனிடையே இந்த இளைஞர்களின் குடும்பங்கள் சிதைந்து சின்னாபின்ன மாகின.

**அடிக்குறிப்பு-2**

இஸ்லாமோ ஃபோபியாவின் வரலாறு இன்னும் கொஞ்சம் முன்னே போகின்றது. 1801க்குப் போகின்றது. அதனை 2001ஆம் ஆண்டு நடந்த இரட்டைக் கோபுரத் தாக்குதலோடு கோர்த்து விடுகின்றார்கள். அதாவது 200 ஆண்டுகளாக அந்தப் பழைய பொய்யை தாலாட்டி சீராட்டி பரப்பி வருகின்றார்கள். எப்படி 9/11 என்பது கட்டுக்கதையோ, அதேபோல் Muslim Barbary போர்களும் கட்டுக் கதைகளே.







## சாதனை பெண்...

# பிரான்செஸ்கா அல்பானீஸ்

**இவர்** இத்தாலி நாட்டில் பிறந்து சட்டம் பயின்றவர். ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் வாழும் மக்களுக்காகப் போராடி வரும் ஒரு பெரும் வீரர்.

மனித உரிமைகள் படிப்பில் உச்சத்தைத் தொட்டவர். இப்போது, ஐக்கிய நாடுகள் சபையில் ஆக்கிரமிக்கப்பட்ட, பாலஸ்தீன பகுதிகளில் வாழும் பாலஸ்தீன மக்களுக்கான சிறப்புத் தூதர். மே 21, 2025 முதல் இந்தப் பதவியில் நியமிக்கப்பட்டார். ஏப்ரல் 2025இல் இந்தப் பதவிக்காலம் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது. இவர் பாலஸ்தீனில் பிணமாகக் குவிக்கப்படும் மக்களுக்குத் தீர்வை பின்வருமாறு அறிக்கை விட்டுள்ளார்.

“இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்திருக்கும் அனைத்து இடங்களிலிருந்தும் வெளியேறிட வேண்டும். பாலஸ்தீனர்களுக்கு தனி நாடு அமைய வேண்டும், அதுவரை எனது போர் தொடரும்.”

இத்தோடு “ஹேஹ்” குழுமம் - The Hague Group என்றொன்றை தொடங்கியுள்ளார்.

இந்த ஹேஹ் என்பது, உலக நீதிமன்றம் International Court of Justice இருக்கும் இடத்தைக் குறிக்கும். இந்த ஹேஹ் நெதர்லாந்து என்ற நாட்டில் உள்ளது. இந்த இடத்தின் பெயரால், ஏற்படுத்தப்பட்ட, குழுமத்தின் முக்கிய நோக்கம், எல்லா ஆளுமையையும் பெற்ற ஒரு தனி பாலஸ்தீன நாடு, நிலத்தில் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதாகும். இது வெறும் குழுமம் அல்ல, அஃதோர் இயக்கம். இதில் 8 நாடுகள் இணைந்து இந்த இயக்கத்தை முன்னெடுத்துச் செல்கின்றன. அவை,

1. பொலிவியா, 2. கொலம்பியா,
3. கியூபா, 4.ஹோண்ட்ராஸ்
5. மலேசியா, 6. நமிபியா
7. செனிகல், 8. சவூத் ஆப்பிரிக்கா.

பாலஸ்தீன பிரச்சனைக்குத் தீர்வு, தனி பாலஸ்தீனம்தான் என்பதில் உறுதியாக இருப்பவர், அந்தத் தீர்வை நோக்கி இயங்கிக் கொண்டிருப்பார்கள்,

இப்போது அக்டோபர் திங்கள் 2025 முதல் போர் நிறுத்தம் செயலில் வந்துவிட்டதால், இந்தத் தனிப் பாலஸ்தீனம் நோக்கிய இயக்கம் இன்னும் வேகம் பெற்று வருகின்றது.

**மேற்குகரை** – ஐக்கிய நாடுகள் சபை, பாலஸ்தீனை 1948இல் இரண்டாகப் பிளந்தபோது பாலஸ்தீனத்திற்கு அதாவது பாலஸ்தீன பூர்வ குடிகளுக்கு என ஒதுக்கப்பட்டதில் பிரதான இடத்தைப் பிடிப்பது மேற்குகரை என்ற வெஸ்ட் பேங்க்.

இது ஜோர்டான் ஆற்றங்கரையிலிருந்து தொடங்குகின்றது. ஜெருசலமும் பாலஸ்தீனின் முக்கியப் பகுதி. இந்த மேற்குகரை அன்று முதலே 1948 முதலே இஸ்ரேலின் ஆக்கிரமிப்பிற்கு ஆளாகி வருகின்றது. அநியாயங்களை


vaigarai velicham official

நாடு அரங்கேற்றி வருகின்றது.

இதனைத் தொடர்ந்து ஆவணப்படுத்தி வருபவர் அல்பானீஸ்.

இன்றைய பாலஸ்தீன் போர் அக்டோபர்,7, 2023இல்தான் தொடங்கியது. அதன் பின்னர் தான், உலக மக்களின் கவனம் பாலஸ்தீன் பக்கம் திரும்பியது.

ஆனால், பிரான்செஸ்கா அல்பானீஸ் அவர்கள், அதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே, அதாவது அக்டோபர் 18,2022களிலேயே பாலஸ்தீன் பற்றிய ஓர் அறிக்கையை - மேற்கு கரையில் நடக்கும் ஆக்கிரமிப்புக்களை மைய மாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபையில் தாக்கல் செய்தார்.

ஜூலை 2023இல் ஐக்கிய நாடுகள் சபையின் 30ஆவது மனித உரிமைக் குழு கூட்டம் நடந்தது. இதனை 53ஆவது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர் இருக்கை என்பார்கள். 30th Meeting of the 53rd Regular Session of the U.N. Human Rights Council.

இந்தக் கூட்டத் தொடரில் பிரான்செஸ்கா அல்பானீஸ் அவர்கள், ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்தார்கள். அதில் மேற்குகரை ஒரு திறந்தவெளி சிறையாகவேப் பயன்படுத்தப் படுகின்றது இஸ்ரேலால். அவர்கள் அதாவது மேற்குகரையில் வாழும் முஸ்லிம்கள் - தினமும் கொடுமைகளை, சித்திரவதைகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தெளிவுபடுத்தினார்கள்.

இந்த அறிக்கை அதாவது கள ஆய்வுகளின் அடிப்படையில் அமைந்த இந்த அறிக்கை மேலும் இப்படிக் கூறியது;

> **“1967 முதல் மேற்குகரையில் எட்டு லட்சம், 8,00,000 பாலஸ்தீன் முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதில் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளும் உண்டு. இந்த கைதுகளை காட்டுமிராண்டித்தனமாக நடவடிக்கைகளின் மூலம், இஸ்ரேலின் இராணுவமும், அதன் காவல்துறையும் செய்திருக்கின்றது. இஸ்ரேல் ஓர் நிறவெறி, மதவெறி நாடு என்பதற்கு இதைவிட அப்பட்டமான சாட்சியங்கள் வேறு வேண்டாம்” என்றது.**

**காஸா போர்**

காஸா போர் தொடங்கிய மறுநாளே (8-10-2023) இஸ்ரேல் தன்னை எதிர்த்த பாலஸ்தீன போராளிகளைக் குறி வைக்காமல், அப்பாவி காஸா வாழ் மக்களை குறி வைத்துத் தாக்கியது. உடனேயே பிரான்செஸ்கா அல்பானீஸ் ஓர் அறிக்கையில் “பெண்களும் குழந்தைகளும் குறி வைத்துத் தாக்கப்படுகின்றார்கள். இஸ்ரேல் ஓர் கூட்டுப்படுகொலையை - இனப்படுகொலையைத் தான் நடத்துகின்றது” எனக் குறிப்பிட்டார்கள். அத்தோடு “உலக நாடுகள் அப்பாவி மக்கள் குறிப்பாக பெண் களும், குழந்தைகளும் கொலை செய்யப்படு வதை தடுத்திட வேண்டும்” என்றும் அறைகூவல் விடுத்தார்.

பிப்ரவரி 2024இல் பிரான்ஸ் நாட்டு அதிபர் எம்மானுவேல் மார்க்கோன் அக்டோபர்-7,இல் நடந்ததுதான் யூத மக்களுக்கு எதிராக நடந்த மாபெரும் தாக்குதல் என அறிக்கை விட்டார்.

> **அவருக்கு உடனேயே பதில் தந்தார் பிரான்செஸ்கா அல்பானீஸ். அக்டோபர்-7இல் தாக்குதலும் அதில் இறந்தவர்களும் யூதர்கள் என்பதற்காக அல்ல, இஸ்ரேலின் தொடர் அடக்கு முறைகளால் ஒடுக்கப்பட்ட மக்களின் குமுறல் என்றார்.**

அவருடைய அறிக்கைகள் ஐக்கிய நாடுகள் சபையில் சமர்பிக்கப்பட்ட அறிக்கைகள்தாம், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர், அட்டோனியா குட்ரஸ் அவர்கள், ஹமாஸ்-ஐ ஓர் தீவிரவாத அமைப்பு என குறிப்பிடவில்லை. அப்படி அழைக்க மறுத்துவிட்டார். அவர் ஹமாஸ் 56 வருட மூச்சுத் திணறும் ஆக்கிர மிப்பிற்கு எதிராகப் போராடுகின்றார்கள்” என்றார்.

மார்ச்சு-26,2024இல் காஸாவில் நடப்பது இனப்படுகொலைகளை "Genocide" என நிரூபிக்கும் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தார். இது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை குழுமத்தின் 55 இருக்கையில் அல்பானீஸ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெளிவானது.

அதன்பின் இந்த கூட்டுப்படுகொலை - "Genocide" என்பது உலக அரங்கில் நிலைத்தது.

இஸ்ரேலுக்கு ஆயுதங்களை விற்பனை

செய்பவர்களும், இஸ்ரேலுக்காக ஆயுதங்களைத் தயாரிப்பவர்களும், கூட்டுப்படுகொலைகளுக்கு உடந்தையானவர்களே! என அந்த அறிக்கையில் தெளிவுபடுத்தினார்.

**கொலை மிரட்டல்கள்**

யூதத் தீவிரவாதிகள், பிரான்செஸ்கா அல்பானீஸ்-ஐ கொலை செய்துவிடுவோம். “பேஜர்” வழியாக அவரைக் கொலை செய்வதற்கு எங்களுக்கு உதவி செய்யுங்கள், அவரையும் அவருடைய குடும்பத்தினரையும் ஒட்டுமொத்த மாக கொலை செய்வோம் என்றெல்லாம் மிரட்டினார்கள்.

ஒவ்வொரு மிரட்டலுக்குப் பின்னரும் பிரான்செஸ்கா அல்பானீஸ்-ன் உறுதி அதிகமானதே தவிர குறையவில்லை.

அமெரிக்கா அவர்மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது. ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் அவர் அகற்றப்பட வேண்டும் என்றது. குறிப்பாக 2025 ஏப்ரலில் அவருடைய பதவிக் காலம் ஐக்கிய நாடுகள் சபையில் நீட்டிக்கப்பட வேண்டும் என்ற நிலை வந்தபோது, இயன்ற மட்டும் தடுத்துப் பார்த்தது, முடியவில்லை. இது ஐக்கிய நாடுகள் சபையைத் தன் சட்டைப் பைக்குள் வைத்துக் கொள்ளலாம் என்ற அமெரிக்க ஆதிக்கத்திற்கு கிடைத்தப் பேரிடி. அனைத்தையும் தாண்டி அவர் பயணிக்கின்றார்.

அவரை எதிர்க்கும் இஸ்ரேலிய - அமெரிக்க ஆங்கிலேய தீவிரவாதிகளைவிட அதிகமானோர் அவரைப் பாராட்டுகின்றார்கள்.

அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசை வழங்கிட வேண்டும் எனப் பல நாடுகள் பரிந்துரைத்துள்ளன.

அவர் அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையில் சமர்பித்த அறிக்கை ஒன்றை இங்கே தருகின்றோம்.

## பிரான்செஸ்கா அல்பானீஸ்-இன் தற்போதைய அறிக்கை

அறிக்கையை தயார் செய்து தாக்கல் செய்தவர் பிரான்செஸ்கா அல்பானீஸ். இவர் ஐக்கிய நாடுகளின் சபையின் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனத்திற்கான சிறப்புத் தூதர். Un Special Rapporteur on occupied palestinian territories. இவர்



தனது அறிக்கையில் காஸாவில் நடந்த கூட்டுப் படுகொலைகளை செய்ததில் 60க்கும் மேற்பட்ட நாடுகள் உடந்தையாக இருந்திருக்கின்றன. இந்த நாடுகள் தண்டனைக்குரிய குற்றத்தை செய்திருக் கின்றன.

Collective crime that enabled isreal to carryout, a massacre against palestinians in the gaza strip.

அதாவது, காஸாவில் பாலஸ்தீனர்களைக் கூட்டுப்படுகொலைகளைச் செய்தவற்குக் கூட்டாக உதவி செய்த தண்டனைக்குரிய குற்றம். இது இஸ்ரேல் கூட்டுப்படுகொலைகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்தன.

இந்த உதவிகள், இராணுவ உதவிகளாகவும், பொருளாதார உதவிகளாகவும் இராஜாங்க உதவிகளாகவும் வந்தன.

இஸ்ரேல் தொடர்ந்து (இடைவிடாமல்) ஆயுதங்கள், வெடிகுண்டுகள் இவற்றை அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய நாடுகளிடமிருந்து பெற்றது. கூட்டுப்படுகொலைகளைச் செய்வதற்கு ஆயுதங்களை வழங்கியதில் இந்த நாடுகளே முதன்மை இடத்தைப் பெறுகின்றன.

இன்னும் பல நாடுகள் - பிரான்ஸ், இந்தியா, இஸ்பெயின் ரோமேனியா ஆகிய நாடுகளும் தங்கள் பங்களிப்பை தந்தன. F35 போர் விமானங் களுக்ளு உதிரிபாகங்களையும் ஆயுதங்களை வழங்குவதிலும் இந்த நாடுகள் உதிரி பாகங்கள், ஆயுதங்கள் காஸாவை குண்டு போட்டு அழிப்பதில் உதவின. சவூதி, எகிப்து, ஜோர்டான் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவையும் கூட்டுப்படுகொலைகளுக்கு உதவி செய்தன.

பல நாடுகள் வேவுபார்க்கும் உதவிகளை செய்தன. குறிப்பாக (ஆங்கில நாடு, யுனைடெட் கிங்டம்) 600 வேவு பார்க்கும் விமானங்களை அனுப்பி வேவு பார்த்துத் தகவல்களைத் தந்தன. இந்த உளவுகள் களத்தில் அப்பாவிகளைக் கொலை செய்வதற்கு உதவி செய்தன.

இன்னும் 18 நாடுகள் "உர்வா" என்ற United Nations relief an works agency for palestinian refugees என்ற ஐக்கிய நாடுகளின் சேவை நிறுவனத்திற்கு தந்து கொண்டிருந்த பணத்தை நிறுத்தின. (இதில் பல அரபு நாடுகளும் உண்டு) - இந்த உதவி நிறுத்தம், இஸ்ரேல் பரப்பிய ஓர் பொய்யை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. அந்தப் பொய் : அக்டோபர்-7,2023 அன்று நடந்த தாக்குதலில் இந்த "உர்வாவில்" வேலை செய்தவர்களும் கலந்துகொண்டார்கள் என்பதை பின்னர் இது பொய் என நிரூபிக்கப் பட்டது. அதனால் பல நாடுகள் "உர்வா"வுக்கு நிறுத்திய உதவிகளை மீண்டும் வழங்கின. இந்த 18 நாடுகளையும் தவிர.

இந்தக் கூட்டுப் படுகொலைகளுக்கு உதவிய பெரிய ஆயுத கம்பெனிகளையும் இந்த அறிக்கை பட்டியிலிடுகின்றன. அவை லாக்கீடு மார்ட்டின் Leonardo லியோ நார்டோ Cateriller கேட்டரில்லர் Hyundai Heavy Industries கியுண் டேய் ஹெவி இன்டஸ்ட்ரீஸ் என்பனவாகும்.

பல தகவல் தொடர்பு கம்பெனிகளும் இந்தக் கூட்டுப்படுகொலைக்கு உதவியுள்ளன. Alphabet (கூகிள் என்பதின் தாய் நிறுவனம்) அமேசான், மைக்ரோஸாப்ட் பிளாடிர் Palantir.

இந்த நிறுவனங்கள் AI என்ற Artificial Intelligence (செயற்கை நுண்ணறிவை)-ஐ பயன்படுத்தி கொலைகளைச் செய்வதற்குப் பயன்படுத்தின. ஆனாலும் அழைத்துச் செல்லப் பட்டவர்கள் இருந்த இடத்தையும் காட்டித்தந்திட இயலவில்லை.

- இந்த அறிக்கை எப்படி இஸ்ரேலின் காஸா படுகொலைகள் - சர்வதேச உதவியுடன் நடந்தன என்பதைக் காட்டும்.


அதேநேரத்தில், அத்தனை மரணங்களுக் கிடையேயும் அந்த மக்கள் காட்டிய உறுதியைக் காட்டும். ஈமான் என்ற அல்லாஹ்வின் மீது அந்த மக்கள் கொண்ட பிடிப்பைக் காட்டும்.

அதேபோல் போராளிகள் எத்தகைய ஜாம்பவான்களையெல்லாம் வீழ்த்தி இருக்கின்றார்கள் என்பதைக் காட்டும்.

**ஜெரூசலம் முனிசிபாலிட்டி எச்சரிக்கை**

இஸ்ரேலியர்கள், தொடர்ந்து அல்-அக்ஸாவில் அகழ்வாராய்ச்சியை நடத்தி வருகின்றார்கள். இதனால் அக்அக்ஸாவின் சில பகுதிகள் இடிந்து வீழ்ந்துவிடும் அபாயம் நிலவுகிறது. அரபு நாடுகள் மௌனம் கலைக்க ஜெரூசலம் மக்கள் கோரிக்கை.



**"இஸ்ரேலின்** இனஅழிப்பு இன்னும் முடிவடையவில்லை": காசாவின் மருத்துவ மனைகளை திட்டமிட்டு அழித்ததற்கான சான்றுகள் - காசா நீதிமன்ற விசாரணை!

இஸ்தான்புல் பல்கலைக்கழகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற காசா நீதிமன்றத்தின் (Tribunal) இறுதி அமர்வில், நிபுணர்கள் அளித்த வலுவான சாட்சியங்கள், இஸ்ரேல் திட்டமிட்டுத்தான் காசாவின் மருத்துவ மனைகள் மற்றும் பொது சுகாதார அமைப்புகளை அழித்துள்ளது என்பதை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது. இது காசா மீதான "இன அழிப்பு" என்ற பெரிய கொள்கையின் ஒரு பகுதியாகும் என்று Anadolu செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இஸ்ரேலின் தாக்குதல்கள் பெரும்பாலும், மருத்துவமனைகள், மருத்துவ ஊழியர்கள், நீர் அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் வாழ்வதற்கான அடிப்படை ஆதாரங்கள் இவற்றை குறிவைத்த தாக்குதல்களாகவே உள்ளதாக மருத்துவர்களும், மனித உரிமை ஆர்வலர்கள் சாட்சியங்களை வழங்கினர்.

**பொதுமக்கள் மற்றும் மருத்துவ அமைப்புகள் மீது தாக்குதல்**

கடந்த வெள்ளிக்கிழமை (24/10/2025) காலை நடைபெற்ற "பொதுமக்கள் மற்றும் பொதுக் கட்டமைப்புகள் - மருத்துவ அமைப்புகள்" என்ற குழு அமர்வில், நான்கு மருத்துவ நிபுணர்கள் -

1. Doctors Without Borders (MSF) அமைப்பின் சர்வதேச தலைவர் டாக்டர் ஜாவித் அப்துல் மோனிம்,


2. துருக்கிய மருத்துவர் டாக்டர் தனேர் கமாசி,

3. நார்வே நாட்டைச் சேர்ந்த அவசர மருத்துவர் மற்றும் பேராசிரியர் டாக்டர் மேட்ஸ் கில்பெர்ட், மற்றும்

4. இங்கிலாந்தைச் சேர்ந்த மனநலம் பயிற்றுநர் குவின் டேனியல்,

ஆகியோர் கடந்த இரண்டு ஆண்டுகளில் காசாவில் நடைபெற்ற மனிதபிமானமற்ற சம்பவங்களை சான்றுகளுடன் விளக்கி, சர்வதேச பொறுப்புணர்வை கோரினர்.

# இஸ்ரேலின் இனஅழிப்பு இன்னும் முடிவடையவில்லை






vaigarai velicham official

**திட்டமிட்ட அப்பாவி மக்களின் மீதான தாக்குதல்**

காசாவின் மருத்துவமனைகள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் மீதான தாக்குதல்கள் எதேர்ச்சையாக நடந்தது அல்ல. மருத்துவ மனைகளை குறிவைத்து அழித்துள்ளனர். " ஒரு திட்டமிட்ட நோக்கத்தின் நேரடி இலக்குகள்" என்று தெளிவுபடுத்தினார் டாக்டர் ஜாவித் அப்துல்மோனிம்.

"நீதிமன்ற உறுப்பினர்களே, எங்கள் சுகாதார அமைப்பு தற்செயலாகச் சரிந்துவிடவில்லை. மருத்துவமனைகள் வேண்டுமென்றே தாக்கப் பட்டு அழிக்கப்படுகிறது. விநியோகங்கள் தடை செய்யப்படுகின்றன. சுகாதாரப் பணியாளர்கள் கொல்லப்படுகிறார்கள், வலுக்கட்டாயமாக தடுத்து வைக்கப்படுகிறார்கள். நீர் அமைப்பு களும் சுகாதார அமைப்புகளும் நாசமாக்கப் பட்டுள்ளது."

மேலும் மருத்துவ ஊழியர்களிடையே ஏற்பட்ட அதிர்ச்சியூட்டும் உயிரிழப்புகளை அவர் சுட்டிக்காட்டினார்.

அக்டோபர் 2023 முதல் 1,700-க்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் கொல்லப் பட்டுள்ளனர். MSF-இல், எங்கள் சகாக்களில் 15 பேர் காசாவில் இஸ்ரேலியப் படைகளால் கொல்லப்பட்டுள்ளனர்."

அவர் மேலும் கூறுகையில்,

"சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் உள்ள "அல்-அவுதா" என்ற மருத்துவமனை செயல்பாட்டில் தான் உள்ளது என்பதை இஸ்ரேலிய அதிகாரிகளுக்கு நாங்கள் திரும்பத் திரும்பத் தெரிவித்திருந்தோம், எனவே அது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுகிறது."

இந்தத் தாக்குதலில் MSF-இன் இரண்டு மருத்துவர்களான முகமது அபு-ஜைதா மற்றும் அஹ்மத் அஸ்-ஸஃபார் கொல்லப்பட்டதாக அவர் கூறினார்.

மேலும், சில நாட்களுக்கு முன்னர், "எங்கள் சகா அபாத் ஷபாப், அவர் ஒரு செவிலியர், தெளிவாகக் குறிக்கப்பட்ட MSF வாகன அணிவகுப்பு காசா நகரில் தாக்கப்பட்டது போது கொல்லப்பட்டார். வெளியேற அனுமதி பெற்றிருந்தும், அவர் தலையில் சுடப்பட்டார்" என்றும் அவர் கூறினார்.

டாக்டர். அபு-ஜைதாவின் அக்டோபர் 26 கைது உட்பட, மருத்துவப் பணியாளர்களைத் தடுத்து வைத்தல் மற்றும் காணாமல் போவது குறித்தும் அப்துல்மோனிம் விவரித்தார். குற்றம் சாட்டப்படாமல் அவர் இன்னும் சிறையில் இருப்பதாக அவர் கூறினார்.

"காசாவின் குடிநீர் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்களுக்குத் தேவையான எரிபொருள் தேவையின் மூன்றில் ஒரு பகுதியைக் கூட இஸ்ரேல் அனுமதிக்கவில்லை. இதனால், பல ஆண்டுகளுக்கு பிறகு காசாவில் மீண்டும் போலியோ நோய் கண்டறியப்பட்டது."

இதன் விளைவுகள் ஒவ்வொரு மருத்துவ மனையிலும் தெளிவாகத் தெரிந்தன என்பதை அவர் குறிப்பிட்டார்.

"காயங்கள், நாள்பட்ட நோய்கள், புற்றுநோய், தொற்றும் நோய்கள், ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகள், மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோருக்கான சிகிச்சை, தடுக்கப் பட்டிருந்ததால் சிகிச்சை கிடைக்காமல் இறந்து கொண்டிருந்தனர்."

இந்த மருத்துவ ரீத்தியான இழப்புகளை சட்டப்பூர்வ ஆதாரமாகக் கருதுமாறு அப்துல் மோனிம் நீதிமன்ற குழுவிடம் வலியுறுத்தினார்.

"கடந்த இரண்டு ஆண்டுகளில் இஸ்ரேலிய நடவடிக்கைகளால் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு நீதியை வழங்குவதற்கு நம்பகமான மற்றும் செயல்திறன் மிக்க வழிமுறைகள் தேவைப்படுவது அவசரத் தேவையாக உள்ளது."

அவர் தனது கருத்தை ஒரு கடுமையான குற்றச்சாட்டுடன் முடித்தார்: அது "இது உயிர்வாழும் வழிமுறைகளை வேண்டுமென்றே அழிப்பதாகும்... இந்த இனப்படுகொலை முடிவடையவில்லை."

டாக்டர். டானர் கமசி, காசாவிற்குள் பணிபுரிந்த ஒரு துருக்கிய சுகாதார அதிகாரி யாகப் பேசுகையில், சுகாதார நிலைமைகளே பொதுமக்களின் பாதுகாப்பிற்கு முழுமையான சீர்குலைவு என்று விவரித்தார்.

"இரண்டு ஆண்டுகளாக, மின்சாரம், தண்ணீர் மற்றும் உணவு ஆகியவற்றை இழந்த மக்கள்... தங்கள் உடல், சமூக மற்றும் மன ஆரோக்கியத்தை இழந்துள்ளனர். எனவே, இஸ்ரேல் கடந்த இரண்டு ஆண்டுகளாக

அவர்களின் ஆரோக்கியத்திற்கு அவசியமான தண்ணீரைக் கூட அந்த அப்பாவி மக்களுக்குக் கிடைக்காமல் தடுத்துள்ளது."

மயக்க மருந்து இல்லாமல் அறுவை சிகிச்சை செய்வது, கழுதை வண்டிகளில் மருத்துவ மனைக்குக் குழந்தைகளைக் கொண்டு செல்வது மற்றும் அறுவை சிகிச்சை வசதி முற்றிலும் இல்லாததால் நோயாளிகள் நடைபாதைகளில் இறப்பது போன்ற நேரடி அனுபவங்களை அவர் பகிர்ந்து கொண்டார்.

வெடிகுண்டு விழுந்தவுடன் உயிர் பிழைப் பதற்கான போராட்டம் முடிவடைவதில்லை என்று அவரது கருத்துக்கள் வலியுறுத்தின: "இது வெறும் வெடிகுண்டு அல்ல... போரின்போது காசாவில் உயிர் பிழைப்பது கிட்டத்தட்ட ஓர் அரிய விஷயம்.

1,722 சுகாதாரப் பணியாளர்கள் கொல்லப் பட்டதாகவும், 362 பேர் சிறையில் அடைக்கப் பட்டதாகவும் காசா சுகாதார அதிகாரிகள் பதிவு செய்துள்ள புள்ளிவிவரங்களை கமசி மேற்கோள் காட்டினார். இரண்டு ஆண்டுகளில், "குறைந்தது 4,000 குழந்தைகள், சுமார் 15,000 பேர், தங்கள் உடல் உறுப்புகளில் ஒன்றையாவது இழந்துள்ளனர்."

இந்தப்போரை மனிதகுலத்தின் மீதான முழுமையான தாக்குதலாக அவர் முடித்தார்: "இந்த இனப்படுகொலையின் பெயருக்கு என்ன அர்த்தம்?"

## 40 ஆண்டு காலப் போக்கின் மீதான ஆதாரபூர்வமான சாட்சியம் :

பல தசாப்தங்களாக காஸாவில் பணியாற்றி வரும் நார்வே நாட்டைச் சேர்ந்த அவசரகால மருத்துவரான முனைவர். மேட்ஸ் கில்பர்ட், தமது சக ஊழியர்கள் குடும்பத்துடன் கொல்லப் பட்டதைக் குறிப்பிட்டு உரையைத் தொடங் கினார். "இங்குள்ள அனைத்து எண்களுக்குள்ளும், பாலஸ்தீனியர்கள் நிச்சயமாக எண்கள் அல்ல; நம்மைப் போலவே குடும்பங்களைக் கொண்ட மனிதர்களே" (Within all these numbers we have, Palestinians are of course not numbers but humans with families just like us) என்று அவர் வலியுறுத்தினார்.

அவர் கூறும் இஸ்ரேலின் மனித உரிமை மீறல்களின் காலமானது இன்னும் விரிவாக்கி, "இது... 40 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து கொண்டிருக்கிறது. மோசமான ஆரோக்கியத்திற் கான மூல காரணம் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பே ஆகும்," என்று குறிப்பிட்டார்.

மருத்துவமனைகள், ஆம்புலன்சுகள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் மீதான இஸ்ரேலியத் தாக்குதல்கள் குறித்த நீண்ட காலமாக ஆவணப்படுத்தப்பட்ட தகவல்களை அவர் விவரித்தார்.

1982-ஆம் ஆண்டு வரையிலான ஐக்கிய நாடுகளின் விசாரணைகளுக்குப் பின்னரும் இந்தப் போக்கு தொடர்கிறது என்று அவர் கூறினார்.

"காஸாவில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் கொல்லப்பட்டவர்களில் நான்கு பேரில் மூன்று பேர் பெண்களும் குழந்தைகளும் ஆவர் என்பதையும், 80 முதல் 90% பேர் பொதுமக்கள் என்பதையும் மறந்துவிட வேண்டாம்."

ஐ.நா புள்ளிவிவரங்கள், அறிவியல் ஆய்வுகள் மற்றும் 42 ஆண்டுகால மருத்துவ அனுபவத்தை ஆதாரமாகக் காட்டி, தனது அணுகுமுறையை "ஒருங்கிணைந்த சாட்சியங்களின் அடிப் படையில்" (evidence-based solidarity) விவரித்தார்.

அக்டோபர் 7, 2023 முதல் உள்ள 328 இஸ்ரேலின் காசா மீதான ஐ.நாவின் சூழ்நிலை அறிக்கைகளை கில்பர்ட் மேற்கோள் காட்டினார்.

உயிரிழப்புகள் குறித்து முதல் ஆண்டிற்கான அறிக்கை 41% குறைவாக செய்யப்பட்டதாக ஆய்வாளர்கள் கண்டறிந்ததாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் 10,000 முதல் 20,000 பேர் இடிபாடு களுக்கு அடியில் புதைந்திருக்க வாய்ப்புள்ளது என்றும் அவர் கூடுதலாகத் தெரிவித்தார்.

### அப்பாவி மக்களைக் கொல்லும் நோக்கம்

கில்பர்ட் சாட்சியம் அளித்தபோது, குறைந்தது 1,700 பாலஸ்தீனிய சுகாதாரப் பணியாளர்கள் கொல்லப்பட்டதாகவும், 301 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களில் பலர் சித்திரவதை செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டார். உலக சுகாதார அமைப்பின் (WHO) தரவுகளின்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் காஸாவில் 2,853 சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் நோயாளிகள் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது காயமடைந்துள்ளனர். "ஒவ்வொரு

ஆறு மணி நேரத்திற்கும் ஒருவர்," என்று அவர் கூறினார்.

இந்தத் தாக்குதல்கள் ஒரு தெளிவான நோக்கத்துடன் "மிகவும் திட்டமிட்ட முறையில்" நடத்தப்படுகின்றன என்று அவர் விவரித்தார்.

சமூகத்தின் பாதுகாப்பு வலையத்திலிருந்து மருத்துவமனைகளை அகற்றுவது அதிக இறப்புகளுக்கு மட்டுமே வழிவகுக்கும், மேலும் எதிர்ப்பதற்கான விருப்பத்தை அணைத்துவிடும் என்றும் அவர் கூறினார்.

1,000 முதல் 2,000 வரையிலான ஊனமுற்ற குழந்தைகள் மீண்டும் நடக்க 10 முதல் 20 அறுவை சிகிச்சைகள் தேவைப்படும் என்று கில்பர்ட் எச்சரித்தார். அத்துடன், "முடிந்தவரை செயலிழக்கச் செய்து, தீங்கு விளைவிக்கும்" ஒரு பிரச்சாரம் நடப்பதாகவும் அவர் விவரித்தார்.

மேலும் பட்டினி, நீரிழப்பு, தண்ணீர் பற்றாக் குறை மற்றும் சிகிச்சையளிக்கப்படாத நோய்கள். இங்குள்ள மக்கள் தொகையில் பாதி பேர் 18 வயதுக்குட்பட்டவர்கள். மேலும் நீங்கள், சுகாதா ரத்தை உருவாக்குவது எது என்ற விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தி சுகாதாரத்தை அழிக்கும் ஒரு இனப்படுகொலை அமைப்பைக் கொண்டுள் ளீர்கள்." என்று மேற்கத்திய மருத்துவ நிறுவனங் களின் மௌனத்தை கில்பர்ட் கண்டித்தார்.

**“நடுநிலைவாதியாக நடிப்பதுடன் மௌன மாக இருப்பது, ஒடுக்குமுறையின் ஒரு வடிவம். நாங்கள் ஒருபோதும் மறக்க மாட்டோம், ஒருபோதும் மன்னிக்க மாட்டோம்.”**

ஆயினும், தினமும் தங்கள் உயிரைப் பணயம் வைத்து உழைக்கும் பாலஸ்தீனிய சுகாதாரப் பணியாளர்களின் விடாமுயற்சியை அவர் இறுதியாக உறுதிப்படுத்தினார். "எதிர்ப்பதே இருத்தல்" என்று அவர் கருத்து தெரிவித்தார்.

**துன்பம் தொடர்ச்சியாகவும் நிலைத்ததாகவும் உள்ளது**

இங்கிலாந்தைச் சேர்ந்த க்வின் டேனியல் (Gwyn Daniel) என்ற குடும்ப அமைப்பு நிபுணர் கூறியதாவது:

இரண்டு ஆண்டுகளாக நீடித்து வரும் இஸ்ரேலின் தொடர் குண்டுவீச்சுகள் காசா மக்களின் உளவியல் நிலையை முற்றிலும் சிதைத்துவிட்டன, இது “நடந்து கொண்டிருக்கும் இனஅழிப்பு (ongoing genocide)” என்று அவர் விவரித்தார்.

“ஒரு இனஅழிப்பு நடைபெறும் சூழலில் மனநலத்தை எப்படிப் புரிந்து கொள்வது?” என்று அவர் கேள்வி எழுப்பினார்.

“இனஅழிப்பின் ஒரு அடையாளம் அந்தக் குழுவின் உறுப்பினர்களுக்கு கடுமையான உடல் மற்றும் மன சேதத்தை ஏற்படுத்துவதாகும். அந்த மன சேதத்தை தான் இப்போது நாம் அனைவரும் காண்கிறோம்.”

டேனியல் வலியுறுத்தியதாவது : காசாவில் ஏற்பட்ட மன உளைச்சலை (trauma) முன்னொரு காலச் சம்பவமாகப் பார்க்க முடியாது.

“என் பாலஸ்தீன சகாக்கள் எப்போதும் சொல்வது போல, காசாவில் ‘துன்பம் முடிந்தது’ என்று சொல்லக் கூடிய இடமே இல்லை. அது தொடர்ச்சியாகவும் இன்னும் நடைபெற்று கொண்டிருக்கும் ஒன்றாகவும் உள்ளது,” என்றார்.

அவர் மேலும் கூறினார்:

“இத்தகைய பெரும் அளவிலான கூட்டு மன உளைச்சலுக்கான ஒரே நேர்மையான பதில்: அதற்குக் காரணமான அரசியல் வன்முறை யையும், சுயநிர்ணயம் மற்றும் விடுதலை தேவையையும் உணர்வதில்தான் உள்ளது. அதாவது செயற்பாடுகளையும் எதிர்ப்புகளையும் (activism and resistance) ஆதரிப்பதே பொருத்த மான வழி.”

**குழந்தைகள் தான் மிகுந்த துன்பத்தைச் சந்திக்கிறார்கள்**

டேனியல் கூறியதாவது: காசாவில் மக்கள் “கொல்லப்படும் வலயத்தில் (death zone)” வாழ்கிறார்கள்;

“அவர்கள் ஏற்கனவே இறந்தவர்கள் போல, அல்லது உயிருடன் இருக்கப் புலம்புவோர் போல உணர்கிறார்கள். மருத்துவமனைகள், பள்ளிகள், சமூக அமைப்புகள் ஆகியவற்றின் அழிவு, அந்த சமூகத்தின் இதயத்தையும் ஆன்மாவையும் தாக்குகிறது: அதன் கூட்டு உணர்வையும், ஒருவருக்கொருவர் தாங்கும் அமைப்புகளையும் சிதைக்கிறது.”

குழந்தைகள் குறித்து அவர் கூறினார்:

“அங்கே சுமார் 40,000 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்,” என்றார்.

“தொடர்ச்சியான பயமும் அதிக விழிப் புணர்வும் (hyperarousal) குழந்தைகளின் மனதில் நிலையான காயத்தை ஏற்படுத்தும், ஏனெனில்

அந்த நிலைமையில் இருந்து அவர்கள் வெளியே வர முடியாது."

இத்தனை அழிவின் மத்தியில் கூட, காசாவில் பணிபுரியும் பாலஸ்தீன மனநல நிபுணர்களின் துணிச்சலை அவர் பாராட்டினார்:

"அவர்களை ஆதரிப்பதே நம் கடமை - அவர்கள் மிகுந்த ஆபத்தில் கூட காசாவில் பணியாற்றி வருகிறார்கள்," என்றார்.

காசா சமூக மனநலத் திட்டத்தின் (Gaza Community Mental Health Programme) சமீபத்திய அறிக்கையை மேற்கோள் காட்டி அவர் கூறினார்:

"துன்பத்திலும் காசா இன்னும் உயிருடன் துடிக்கிறது.

அதனால், சர்வதேச சமூகமான நாமெல் லாரும் அதன் பக்கத்தில் நின்று ஆதரிக்க வேண்டும் என்பதே நம் கடமை."



27, 2025 அன்று இஸ்ரேலியப் படைகளின் வெளியேற்ற எச்சரிக்கைகளைத் தொடர்ந்து, வடக்கு காசாவில் உள்ள அல்-அவ்தா மருத்துவமனையிலிருந்து, மத்திய காசாவில் உள்ள நுசீராத் அகதிகள் முகாமில் உள்ள அதன் கிளைக்கு பாலஸ்தீனிய மருத்துவ ஊழியர்கள் வெளியேற்றப்படுகிறார்கள்.

இதனை தொடர்ந்து கடந்த ஜூன் மாதம் காஸாவில், மருத்துவமனைகள், சுகாதார அமைப்புகள் திட்டமிட்டு அழிக்கப்படுவது குறித்து இங்கிலாந்து நாடாளுமன்றந்யில் ஒரு விவாதம் நடந்தது.

அதில், இங்கிலாந்தை தளமாகக் கொண்ட பாலஸ்தீனியர்களுக்கான மருத்துவ உதவி அறக்கட்டளையின், குழந்தை தீவிர சிகிச்சை மருத்துவரான "தான்யா ஹஜ்-ஹாசன்", இஸ்ரேல் காசாவின் சுகாதாரப் பாதுகாப்பு முறையை "முறையாக குறிவைத்து அழித்துவிட்டது" என்று வாதிட்டுள்ளார்.

காசாவில் இதுவரை குறைந்தது 1,500 சுகாதாரப் பணியாளர்கள் கொல்லப்பட் டுள்ளனர், அதில் எனது முன்னாள் மாணவர்களும் அடங்குவர். அவர்கள் மருத்துவ மாணவர்களாக இருந்தபோது நான் அவர்களுக்குக் கற்பித்தேன். நான் சந்தித்த மிகவும் அர்ப்பணிப்புள்ள சுகாதாரப் பணியாளர்களில் சிலர் இவர்கள் என்பதை உங்கள் பார்வையாளர்களிடம் இப்போது என்னால் சொல்ல முடியும்," என்று ஹஜ்-ஹசன் கூறினார்.

கடந்த 20 மாதங்களாக சர்வதேச பத்திரிகை யாளர்களும் சுயாதீன புலனாய்வாளர்களும் அந்தப் பகுதிக்குள் அனுமதிக்கப்படவில்லை என்பதை அவர் அவர்களுக்கு நினைவூட்டினார்.

எனவே மனிதாபிமானப் பணியாளர்கள் மட்டுமே களத்தில் உள்ள ஒரே சுயாதீன சாட்சிகள், மேலும் நாங்கள் தொடர்ந்து வெளிவர முடியும், தார்மீக ரீதியாகவும் சட்டப் பூர்வமாகவும் பதிலடி கொடுக்க போதுமான வேதனையான விவரங்களைப் பகிர்ந்து கொள்கிறோம், என்று அவர் கூறினார்.

காசாவில் உள்ள (MSF) அமைப்பின் அவசர ஒருங்கிணைப்பாளர் அன்னா ஹால்ஃபோர்ட், காசாவின் சுகாதார அமைப்பின் "முறையான அழிவு" பற்றிய ஹஜ்-ஹாசனின் விளக்கத்துடன் உடன்பட்டார்.

"வேறு வார்த்தைகளால் சொல்ல முடியாது. ஒரு அமைப்பு சிதைக்கப்படுவதை நாங்கள் கண்டோம். மருத்துவமனைகள், மருத்துவ மனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங் களின் எண்ணிக்கையிலிருந்து இப்போது இருக்கும் எண்ணிக்கைக்கு இது முழுமையாக இல்லாவிட்டாலும், குறைந்தபட்சம் ஓரளவுக்கு வேண்டுமென்றே செய்யப்பட்டது என்ற முடிவுக்கு வராமல் இருக்க முடியாது," என்று ஹால்ஃபோர்ட் கூறினார்.

சவாலான சூழ்நிலைகளில் அத்தியாவசிய சுகாதார சேவைகளை வழங்கி, மீதமுள்ள மூன்று செயல்பாட்டு மருத்துவமனைகள் மற்றும் ஏழு கிளினிக்குகளில் MSF பணியாற்றி வருவதாக அவர் கூறினார்.

நன்றி : MEMO ( Middle East Monitor )



vaigarai velicham official



# டாக்டரைப் பார்க்கப் போறீங்களா.?

**வரும்** முன்னர் தடுக்கவும், வந்த நோயை வெல்லவும் மருத்துவருடன் தொடர்பில் இருக்கிறோம். அது இன்றைய சூழலில் அவசிய மானதாகவும் உள்ளது. இந்த கன்சல்ட்டிங் நேரத்தை ஆக்கப்பூர்வமாக மாற்றிக்கொள்ள என்ன செய்யலாம்? என்ன செய்யக் கூடாது என்ற சில முக்கியத் தகவல்களை அறிந்து கொள்ளுங்கள்.

- மருத்துவரின் ஆலோசனையைப் பெற விரும்பினால் முதலில் மருத்துவருக்கோ அல்லது மருத்துவமனைக்கோ போன் செய்து உங்கள் வருகையைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

- தேவையின்றி மறுபடியும் போன் செய்ய வேண்டாம்.

- குறித்த நாளில் போக முடியவில்லை என்றால், உங்களால் வரமுடியாத நிலையைத் தெரிவிக்கவும்.

- உங்களின் தொல்லைகளைச் சிறுகுறிப்பாக எடுத்துக் கொள்ளுங்கள். உதாரணம்: மலச் சிக்கல், தூக்கமின்மை, மூட்டுவலி, பசியின்மை போன்றவை.

- மருத்துவரின் நேரம் மதிப்புமிக்கது. அதனால் அவசியமற்ற உரையாடல்கள், பேச்சுகளைத் தவிர்க்க வேண்டும்.

- கடந்த முறை மருத்துவர் கொடுத்த மருந்துச் சீட்டை மறக்காமல் உடன் எடுத்துச் செல்லுங்கள்.

- சமீபத்தில் செய்த பரிசோதனைகளைப் பற்றிய விவரங்களையும் மறக்காமல் கொண்டு செல்வது முக்கியம். தேவையின்பொருட்டு நீங்கள் அன்றாடம் உட்கொள்ளும் மருந்து களையும் எடுத்துச் செல்லுங்கள்.

- உங்களுக்கு ஏதேனும் அலர்ஜி இருக்கும்பட்சத்தில், மருத்துவர் மருந்துச் சீட்டை எழுதுவதற்கு முன்னரே தெரிவித்து விடுங்கள். மருத்துவரின் ஆலோசனையின்றி ஆர்வமிகுதியால் எந்தப் பரிசோதனைகளையும் செய்யக் கூடாது.

- பழைய சிகிச்சை முறைகளைப் பற்றியும், குறிப்பிட்ட அறுவை சிகிச்சை பற்றியும் மருத்துவர் கேட்டால் மட்டும் தெரிவிக்கவும்.

- மருத்துவரின் அறைக்குள் உங்களோடு ஒருவர் அல்லது இருவரை மட்டும் அழைத்துச் செல்லுங்கள். குடும்பம் முழுவதும் அறைக்குள் அழைத்துச் சென்றால், அது மருத்துவரின் மனநிலையை அதிகம் பாதிக்கும்.

- மறக்காமல் உங்களின் செல்போனை சைலன்ட் மோடில் வைத்துக் கொள்ளுங்கள்.

- மருத்துவர் தீவிரமாக உங்களைப் பரிசோ தித்துக் கொண்டிருக்கும்போது, மற்றவர்கள் தேவையில்லாமல் குடும்ப நிகழ்வுகளை எல்லாம் பேச வேண்டாம்.

- மருத்துவர் மருந்துச்சீட்டை எழுதிய பின்னர் உங்களிடம் விவரமாக எடுத்துரைப்பார். அதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் வெளியில் இருக்கும் உதவியாளர் உங்களின் சந்தேகத்தைத் தீர்த்து வைப்பார். முதன்முதலாக மருத்துவரிடம் செல்வதென்றால் அவரிடம் கூகுள் பே போன்ற UPI வசதி இல்லாமல் இருக்கலாம். அதனால் கையில் எதற்கும் ஒரு தொகையை எடுத்துச் செல்வது நல்லது.

- மருத்துவரிடமிருந்து விடைபெற்று வரும்போது அவருக்கு நன்றி சொல்லி விடை பெறுங்கள். இது உங்களின் உறவை பலப்படுத்த உதவும்.

- நன்றி முதுமை எனும் பூங்காற்று

# இஸ்லாமும் தண்டனைகளும்

**திருடனும்,** திருடியும், அவ்விருவரும் சம்பாதித்தற்குக் கூலியாக அல்லாஹ்விடமிருந்துள்ள தண்டனையாக அவர்களின் கரங்களைத் துண்டித்து விடுங்கள். அல்லாஹ் மிகைத்தவனும் ஞானம் மிக்கோனுமாக இருக்கிறான். (அல்மாயிதா-38)

மேலும் (கொலை செய்யக்கூடாது என்று) தடுத்துள்ள எந்த மனிதனையும் நியாயமான காரணமின்றிக் கொலை செய்து விடாதீர்கள். எவரேனும் அநியாயமாகக் கொலை செய்யப் பட்டுவிட்டால், அவருடைய வாரிசுக்கு நாம் அதிகாரம் கொடுத்திருக்கின்றோம். ஆனால் கொலையின் மூலம் பதில் சொல்வதில் வரம் கடந்துவிடக்கூடாது. நிச்சயமாக (கொலையுண்டவரின் வாரிசான) அவர் (நீதியைக் கொண்டு) உதவி செய்யப்பட்டவராவார். (பனீஇஸ்ராயில் : 33)

விபச்சாரம் செய்த பெண், விபச்சாரம் செய்த ஆண் இவர்களில் ஒவ்வொருவரையும் நூறு கசையடிகள் அடியுங்கள். மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் அல்லாஹ் விதித்த இக்கட்டளையை நிறைவேற்றுவதில் அவ்விருவர்களுடைய விஷயத்தில் உங்களுக்கும் இரக்கம் ஏற்பட்டுவிடக்கூடாது. அவ்விருவருக்கும் (தண்டனையாக) வேதனை கொடுக்கும் சமயத்தில் நம்பிக்கையாளர்களில் ஒரு தொழுகையினர் அதன் சமீபமாக இருக்கவும். (அந்நூர்-2)

எவரேனும் கற்புடைய பெண்கள் மீது குற்றம் கூறி (அதற்கு வேண்டிய நான்கு சாட்சிகளை அவன் கொண்டுவராவிட்டால் அவனை நீங்கள் எண்பது கசையடிகள் அடியுங்கள் பின்னர் அவன் கூறும் சாட்சிகளை எக்காலத்திலும் ஒப்புக்கொள்ளாதீர்கள். (ஏனென்றால்) நிச்சயமாக இ(த்தகைய)வர்கள் பெரும் பாவிகள்தான். (அந்நூர்-4)

இஸ்லாத்திற்கு எதிராக வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகளில் ஒன்று இஸ்லாத்தில் வழங்கப் படும் தண்டனைகள் மிகவும் கொடூரமானது. மனிதாபிமானமற்றது என்கிறார்கள். உண்மையில் இஸ்லாம் குற்றங்களை இல்லாமல் ஆக்குவதற்கும் நிரபராதிகள் தண்டிக்கப்படாமல் இருப்பதற்கும், நீதி நிலை நாட்டப்படுவதற்காகத்தான் இப்படிப் பட்ட தண்டனைகளை வழங்குகிறது. இன்று உலகளவில் குற்றங்களுக்கான தண்டனைகள் ஒவ்வொரு நாட்டிலும் வேறு வேறு விதமாக வழங்கப்படுகிறது. ஆனால் குற்றங்கள் குறைந்தபாடு இல்லை. அதிகரித்துக்கொண்டே போகிறது. சரியான சட்டங்கள் இல்லாததால் குற்றம் செய்தவன் எந்த ஒரு குற்ற உணர்வும் இல்லாமல் மீண்டும் மீண்டும் குற்றம் செய்துகொண்டே இருக்கின்றான். இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தனக்கு நீதி கிடைக்கவில்லை என்பதற்காக தானே சட்டத்தை கையில் எடுத்துக்கொள்கிறேன் என்று நாம் பத்திரிகையில் படிக்கின்ற செய்திகளில் ஒன்று. பழி தீர்க்க வேண்டும் என்பதற்காக பல நாட்கள், வருடங்கள், கழித்து திருப்பி கொலை செய்கிறார்கள். இது மாறி மாறி நடந்துகொண்டே தான் இருக்கின்றது. இதனால் சமூகத்தில் குழப்பங் களும், அமைதியின்மையும் தொடர்கிறது. இப்படி கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஏமாற்றுதல் என எல்லா குற்றங்களும் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது.

தண்டனை என்பது மீண்டும், மீண்டும் குற்றம் செய்வதிலிருந்து அவனைத் தடுக்க வேண்டும். ஒரு குற்றவாளிக்கு வழங்கப்படும் தண்டனையைக் கண்டு மற்றவர்கள் குற்றம் செய்ய அஞ்ச வேண்டும். குற்றவாளியால் பாதிப்புக்கு உள்ளானவன் தனக்கு நீதி கிடைத்துவிட்டதாக மனநிறைவு அடைய வேண்டும்.

உலகில் குற்றங்களுக்கு எதிராக நடந்த போராட்டங்களில் மக்கள் எழுப்புகின்ற குரலும், பாதிக்கப்பட்டவன் கூறுகின்ற கருத்தும் என்னவென்றால் சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும். உலகில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் அனைத்து சட்டங்களும் தோற்று விட்ட நிலையில் இஸ்லாமிய சட்டம் மட்டுமே இதில் வெற்றி கண்டுள்ளது.

அறிவுடையோரே (கொலைக்குப்)பழி வாங்குவதில் உங்களுக்கு வாழ்வுண்டு, (இத்தகைய குற்றம் பெருகாமல்) நீங்கள் உங்களை(த் தீமைகளி லிருந்து) காத்துக்கொள்ளலாம். (அல்பகரா-179)

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்




# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | **சிறையில் எனது நாட்கள்**<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் | - ரூ.350.00 |
| 2. | **ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு**<br>மு. குலாம் முஹம்மது | - ரூ.140.00 |
| 3. | **சாதி ஒழிந்தது** - டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 4. | **End of Casteism** T.M. Mani | - ரூ.50.00 |
| 5. | **அஹமதாபாத் குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 6. | **டெல்லி குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 7. | **நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 8. | **மால்கம்**-X, மு.குலாம் முஹம்மது | - ரூ.120.00 |
| 9. | **தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம்** டி.எம்.மணி | - ரூ.20.00 |
| 10. | **செந்தமிழ்நாட்டுச் சேரிகள்**, டி.எம்.மணி | - ரூ.40.00 |
| 11. | **கர்கரேயை கொலை செய்தது யார்?** | - ரூ.250.00 |
| 12. | **சிந்திப்பீர் செயல்படுவீர்**, நா.கோதண்டபாணி | - ரூ.15.00 |
| 13. | **ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்**, ப.கோபால கிருஷ்ணன் | - ரூ.40.00 |
| 14. | **சாதி ஒழிந்தது** (ஹிந்தி) டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 15. | **நாம் பிரிந்து விடவேண்டாம்**, பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.175.00 |
| 16. | **தாலிபானின் பிடியில்**, மு. குலாம் முஹம்மத் | - ரூ.150.00 |
| 17. | **தீண்டாமைக்குத் தீர்வு** | - ரூ.30.00 |
| 18. | **பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு**<br>மு. குலாம் முஹம்மத் | - ரூ.110.00 |
| 19. | **பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள்**, மு. குலாம் மஹம்மத், | - ரூ.90.00 |
| 20. | **இஸ்லாமிய நாகரிகம்**,<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.130.00 |
| 21. | **கஷ்மீரின் பாதி விதவைகள்**, மு. குலாம் முஹம்மத், | - ரூ.70.00 |

| | | |
|---|---|---|
| 22. | **எது முதலில்?**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.450.00 |
| 23. | **சாதி ஒழிந்தது** (கன்னடம்) | - ரூ.50.00 |
| 24. | **அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?**<br>டி.எம். உமர் ஃபாரூக் | - ரூ.20.00 |
| 25. | **கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?** மு. குலாம் முஹம்மத் | - ரூ.30.00 |
| 26. | **முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம்**<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.15.00 |
| 27. | **இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும்** | - ரூ.50.00 |
| 28. | **இஸ்லாம் வழங்கும் தண்டனைகள்** | - ரூ.40.00 |
| 29. | **இஸ்லாமும் விஞ்ஞானமும்** | - ரூ.30.00 |
| 30. | **இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா?** | - ரூ.50.00 |
| 31. | **இஸ்லாமும் பெண்களும்** | - ரூ.60.00 |
| 32. | **இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா?** | - ரூ.70.00 |
| 33. | **தேசப்பிரிவினைக்கு யார் காரணம்?**<br>விரிவாக்கப்பட்ட பதிப்பு, மு. குலாம் முஹம்மத் | - ரூ.100.00 |
| 34. | **திருக்குர்ஆன் கூறும் பொறுமை**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.80.00 |
| 35. | 26/11- **விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்?** | - ரூ.220.00 |
| 36. | **ஒரு தலித் போராளியின் வாழ்வும்,**<br>**அவர் காட்டிய வழியும்** - அ.மார்க்ஸ் | - ரூ.20.00 |
| 37. | **முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்**<br>வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.10.00 |
| 38. | **நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**<br>தி.லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.10.00 |
| 39. | **குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்?**<br>சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் | - ரூ.25.00 |
| 40. | **இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன்**<br>**லேப்டாப்பில் இருந்ததென்ன?** | - ரூ.20.00 |
| 41. | **கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான்**<br>கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | - ரூ.25.00 |
| 42. | **கூரியூர் ஜின்னா ஷஹீத்** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 43. | **முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும்** | - ரூ.20.00 |
| 44. | **இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு,** எஸ்.எம். முஷ்ரிப், | - ரூ.30.00 |
| 45. | **சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்,**<br>**காந்திஜி கொலை ஏன்? எப்படி?** | - ரூ.30.00 |

| | | |
|---|---|---|
| 46. | **பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்**<br>எஸ்.எம். முஷ்ரிப், IPS, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.400.00 |
| 47. | **குஜராத் : 2002 பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள்,** தமிழில்: வளர்மதி | - ரூ.150.00 |
| 48. | **இஸ்லாம் ஒன்றே வழி!**<br>அனிசுத்தீன் அஹமத், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.120.00 |
| 49. | **இஸ்லாம் உங்கள் பார்வைக்கு**<br>ஹமுத அப்த் அல் அத்தி, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.400.00 |
| 50. | **முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?**<br>ஹள்ரத் அபுல்ஹஸன் நத்வி (ரஹ்), தமிழில் : மௌலவி அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ | - ரூ.300.00 |
| 51. | **சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள்** | - ரூ.20.00 |
| 52. | **இஸ்லாம் நாங்கள் தேர்தெடுத்த மார்க்கம்** | - ரூ.100.00 |
| 53. | **முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி**<br>கரன் ஆம்ஸ்ட்ராங் | - ரூ.20.00 |
| 54. | **நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம்** | - ரூ.50.00 |
| 55. | **பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி** | - ரூ.50.00 |
| 56. | **அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்** | - ரூ.40.00 |
| 57. | **எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர்** | - ரூ.60.00 |
| 58. | **சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை** | - ரூ.60.00 |
| 59. | **பா.ரஞ்சித் அவர்களின் உரையும் ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும்** | - ரூ.25.00 |
| 60. | **முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்** | - ரூ.20.00 |
| 61. | **அயா சோபியா உருவான வரலாறு** | - ரூ.50.00 |

## எமது விற்பனையில்...

| | | |
|---|---|---|
| 01. | **கோவை கலவரத்தில் எனது சாட்சியம்**<br>A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் | - ரூ.100.00 |
| 02. | **மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்**<br>ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு | - ரூ.100.00 |
| 03. | **குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள்**<br>ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, | - ரூ.170.00 |
| 04. | **நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா?**<br>தி.லஜபதி ராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.140.00 |
| 05. | **பலி கடாக்கள்** | - ரூ.300.00 |

## BOOKS IN ENGLISH

1. **END OF CASTEISM** - T.M. Umar Farooq, - **Rs.50.00**
   English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam
2. **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media - **Rs.695.00**
3. **MUHAMMED THE PROPHET FOR OUR TIME** - **Rs.325.00**
   Karen Armstrong
4. **KAFKA LAND - PREJUDICE LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi - **Rs.350.00**
5. **WHO KILLED KARKARE** - **Rs.300.00**
   The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS,
6. **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif - **Rs.275.00**
7. **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION** - **Rs.60.00**
   Kamaluddin Ahamed
8. **MUSLIMS AGAINST PARTITION OF INDIA** - **Rs.280.00**
   Shamsul Islam, Pharos Media
9. **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN** - **Rs.25.00**
   (EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed
10. **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE** - **Rs.150.00**
    Nilofar Suhrawardy
11. **Innocent Prisoners** - **Rs.495.00**
12. **Brahminists Bombed Muslims Hanged** - **Rs.350.00**
13. **Kodikkal- TheLiving Witness of Social Justice** - **Rs.300.00**

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது**

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது** - டி.எம். உமர் பாரூக் - ரூ.60.00
02. **நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி** - ரூ.30.00
    கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

GPay **8148129887** Vaigarai Velicham Official

தொடர்புக்கு : **8148129887, 7401213394**

வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

Vaigarai Velicham Official    vaigarai velicham official

darultrust@yahoo.com    Website : Darulislam.in

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002